கல்கி



KALKI 19-1-1958

30 நயா பைசா

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


* ஏன் இவ்வளவு அவசரம் ?
... வீட்டில் பார்லேயின் க்ளுகோ
பிஸ்கெட்டுகள் கிடைக்கும் !
பார்லேயின்
க்ளுகோ
பிஸ்கெட்டுகள்
Parle Gluco
BISCUITS
ENRICHED WITH VITAMINS
விட்டமின்கள்
செறிந்தது
பார்லே ப்ரொடக்ட்ஸ்
மானுபுபாக்சரிங் கம்பெனி
பிரைவேட் லிமிடெட், பம்பாய்.
PG. 58-1A TPL
EVEREST



மலர் 17 | இதழ் 25

தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்

ஹேவிளம்பி | தை 6

கௌஹாட்டி காங்கிரஸ்

பாரத நாட்டின் சரித்திரத்திலே மிக முக்கியமான கட்டத்தில் அகில இந்தியக் காங்கிரஸ் கௌஹாட்டியில் கூடுகிறது!

நாட்டில் ஆட்சிமொழி சம்பந்தமாகப் பெரும் கிளர்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இந்த மகாநாடு கூடுவதால், நாட்டுக்கு நியாய முறையில் தைரியமாக வழிகாட்ட வேண்டிய பொறுப்பு காங்கிரஸுக்கு ஏற்பட்டிருக்கிறது.

நல்ல காலமாக நாடு முழுவதற்கும் காங்கிரஸ் ஒரே கட்சியாக இருக்கிறது! இன்னும் காங்கிரஸுக்கு நல்ல செல்வாக்கு இருக்கிறது. நாட்டுமக்கள் மிகுந்த பக்தியோடு கேட்கக் கூடிய தலைவர்கள், தியாக வேள்வியில் புடம் போட்டு எடுத்த தலைவர்கள் இன்னும் காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார்கள்!

இவர்கள் காலத்திலேயே அதாவது இப்பொழுதே, பாரத மக்கள் அனைவருக்கும் நியாயம் வழங்கக்கூடிய முடிவை இந்தக் கௌஹாட்டி காங்கிரஸ் செய்ய வேண்டும். தீர்க்கதரிசனத்தோடு செய்ய வேண்டும். இப்பொழுது தைரியமாக நடுநிலைமை வகித்துத் தீர்ப்பு செய்யாவிட்டால் பின்னால் நாட்டில் பலவித குழப்பங்கள் ஏற்பட்டு, நிலைமையைச் சீர்திருத்தவே முடியாமற் போகலாம்.

கௌஹாட்டி காங்கிரஸில் மத்திய சர்க்காரின் ஆட்சி மொழி சம்பந்தமாக ஒரு முக்கியமான தீர்மானத்தைப் பாரதப் பிரதமர் நேருவே தயாரிப்பதாக அறிகிறோம். அந்தத் தீர்மானம் ஹிந்தியைத் தாய்மொழியாகப் பெறாத மக்களுக்குத் தாற்காலிகமாகக் கண்ணைத் துடைக்கும் முறையில் அமைந்தால் மட்டும் போதாது! ஹிந்தியைப் பின்னால் கொண்டு வருவோம் என்று சொல்வதும், இப்பொழுதே செய்வோம் என்று கூறுவதும் ஒன்றுதான். இரண்டையும் திணிப்பதாகவேதான் கொள்ள வேண்டும்.

பாரத நாட்டின் எதிர்காலத்தில் எது நன்மை பயக்கும் என்பதை உணர்ந்து தக்க தீர்மானம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

பாரத நாட்டின் சரித்திரத்திலே, ஒரு விஷயம் திரும்பத் திரும்ப நடைபெற்று வந்திருக்கிறதைப் பார்க்கிறோம். ராஜாஜி எதிர்காலத்தை உன்னிப் பார்த்து, இன்று ஒரு யோசனை சொல்வதும், அதை நிராகரித்துவிட்டு, காலங் கடந்த பிறகு ஏற்றுக் கொள்வதும் வழக்கமாகி விட்டது. அது மீண்டும் நடைபெறக் கூடாது என்று விரும்புகிறோம். மிகத் தைரியமாக இப்போது இருப்பது போலவே ஆங்கிலமே ஆட்சிமொழியாகக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டும். இது ஒன்றுதான் பாரத நாட்டைச் சிதற விடாமல் பிணைத்து நிற்கும்.

உலகமொழி என்கிற பதவியில் ஆங்கிலத்தை நோக்கி அந்த மொழியைப் பாரத தேசத்தின் அந்தர ராஜ்ய மொழியாக ஏற்றுக் கொள்வது உலகத்துக்கே வழிகாட்டியதாகும். மத சம்பந்தமாக நடுநிலைமை வகிப்பதைப்போல் பன்மொழிகளுக் கிடையில் நடுநிலைமை வகித்து உலக மொழியைப் பாரத மத்திய பீடத்தில் ஏற்றி வைப்பதில் குற்றமில்லை; சிறப்பே யாகும்.

சென்ற தடவை பன்மொழி ராஜ்யப் பிரேரணையை அம்ருதசரஸ் காங்கிரஸ் நிறைவேற்றியது. ராஜ்ய சீர் அமைப்புக் கமிஷன் யாதாஸ்து வெளியானதிலிருந்து நாட்டு மக்களிடையே எழுந்த கிளர்ச்சியைப் பார்த்து நாட்டின் ஐக்கியத்துக்கு உறுதி கோலுவது பன்மொழி ராஜ்யங்கள் ஏற்படுத்துவதே என்று மிக அழகான தீர்மானம் நிறைவேற்றி

யது; பிறகு இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியவர்களே அந்தத் தீர்மானத்துக்கு உலை வைத்ததைக் காங்கிரஸ் மேலிடம் சும்மா பார்த்துக் கொண்டிருந்தது!

இதைப் பார்த்தபோது, "ஏன் வருஷந்தோறும் மகாநாடுகள் கூட்டி லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கிறீர்கள்? காங்கிரஸ் ஸ்தாபனம் செய்யும் தீர்மானத்தை அதே காங்கிரஸ்காரர்கள் நடைமுறையில் கொண்டுவர முடியாத போது, காங்கிரஸ் மகாநாடு கூடுவதைவிடக் கூடாமலே இருப்பது எவ்வளவோ நலம்" என்று தான் பலர் எண்ணுகிறார்கள். ஆனால் கௌஹாட்டியில் கூடும் மகாநாடு அவ்விதம் இருக்காது என்று நம்புவோமாக. கௌஹாட்டி மாநாடு நாட்டு மக்களுக்கு நல்வழி காட்டும் மகாநாடாக அமையும் என்று எதிர்பார்ப்போமாக. ஆட்சி மொழி ஆங்கிலமாகவே இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு, இந்தக் கருத்தை ஹிந்தி வெறியர்களுள்ள பிரதேசங்களில் பிரசாரம் செய்வார்களாக!

காந்தி மகான் இருந்திருந்தால் ராஜாஜியின் இந்த யோசனைக்கு உடனடியாகச் செவி சாய்த்திருப்பார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. எத்தனையோ தடவைகள் காந்தி மகான், ராஜாஜியின் யோசனைகளைக் கேட்டு, அவருடன் தீர ஆலோசித்துத் தமது கருத்துக்களை மாற்றிக் கொண்டிருக்கிறார். ராஜாஜி சொல்லும் யோசனைதான் நாட்டுக்கு ஏற்றது என்று சொல்லியிருக்கிறார். காந்தியடிகளே தமது அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ளத் தக்க யோசனையைச் சொல்லக்கூடிய ராஜாஜி ஒரு யோசனை சொல்லுகிறார் என்றால் அதைக் கண்ணை மூடிக் கொண்டே ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அந்த மகானே, ஒரு குழந்தைக்கும் விளங்கும் வண்ணம் ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருக்கவேண்டிய அவசியத்தை ஒரு காரணம் அல்ல — பலப் பல காரணங்கள் கூறி வற்புறுத்தி வருகிறார்; அதை அப்படியே ஆமோதித்துக் கௌஹாட்டி காங்கிரஸ் வழி காட்டினால் காங்கிரஸ் தனது கடமையைச் செய்ததாக மக்கள் மகிழ்வர்;

தமிழன்னைக்கு அரியாசனம்

பொங்கல் திருநாள் தமிழ்த் திருநாள். இந்தத் திருநாளில் தமிழன்னைக்குப் புது அந்தஸ்தும் புது கௌரவமும் ஏற்படுவதைக் கண்டு மகிழ்ச்சியில் பொங்கிப் பூரிக்காதவர் இல்லை. நூற்றைம்பது ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் சர்க்காரின் நிர்வாக மொழி ஆங்கில மொழியாக இருந்தது. இப்பொழுது தமிழ் மொழியாக மாறுகிறது. அதனால் சர்க்காருக்கும் மக்களுக்கும் நெருங்கிய நேரிடைத் தொடர்பு ஏற்பட வசதி பிறக்கிறது. 'நம்முடைய நாடு நமது' என்ற உணர்ச்சியை இந்த மாற்றம் உறுதிப்படுத்தும்.

மத்திய சர்க்காரின் ஆட்சி மொழி, ராஜ்யங்களிடையே கடிதப் போக்குவரத்து நடைபெற வேண்டிய மொழி ஆங்கிலமாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறோம் நாம். ஆனால் ராஜ்யங்களில் நிர்வாகம் அந்தந்தப் பிரதேச மொழிகளில் நடைபெற வேண்டும் என்று நாம் ஆரம்பத்திலிருந்தே வற்புறுத்தி வருகிறோம். இந்தத் துறையில் நமது ராஜ்ய சர்க்கார் தீவிரமாக இறங்கி இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

இவ் வருஷம் 1958 சென்னை சர்க்கார் காரியாலயங்களில் பொங்கல் புதுநாளிலிருந்து தமிழ் ஆட்சி மொழியாக வருகிறது. ஆங்கிலத்தில் எழுதிப் பழக்கப்பட்டவர்களுக்குத் தமிழில் கடிதங்கள் எழுதுவது சிரமமாகத் தோன்றலாம். ஆனால் மக்களுக்குச் சர்க்காரிடமும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களிடமும் பயம் நீங்கி அன்பும் அந்யோன்யமும் ஏற்பட வழி ஏற்படுகிறது என்பதை உணர்ந்து இதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

அடக்குமுறையின் விபரீதங்கள்


பாரதப் பிரதமர் நேரு சென்னைக்கு விஜயம் செய்த ஜனவரி ஆறாம் தேதி சென்னையில் நடைபெற்ற கலவரங்களையும், அடிதடிகளையும் நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது. பாரதப் பிரதமர் சென்னை மக்களின் அமைதியையும் சீரிய பண்பாட்டையும் எவ்வளவோ தடவை பாராட்டிப் பேசியிருக்கிறார். அப்படிப்பட்ட சென்னை நகருக்கு ஆளும் பீடத்தில் இருப்பவர்கள் பெருத்த அவமானத்தைத் தேடித் தந்து விட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் நேருஜிக்குக் கறுப்புக் கொடி காட்ட விரும்பினர். நேருஜி கூறிய சில மொழிகள் அவர்களுக்குப் பிடிக்கவில்லை; அதைக் காண்பித்துக் கொள்ளக் கறுப்புக் கொடி காட்டுவது என்று முடிவு செய்திருந்தனர்.

இதை நமது சென்னை சர்க்கார் ஒப்புக் கொண்டதாகவும், கறுப்புக்கொடி காட்டுவதற்கு ஆட்சேபனை செய்யவில்லை என்றும் தெரிய வருகிறது. சென்ற மாதம் நேரு அவர்கள் திண்டுக்கல்லுக்கு வந்தபோது, சி. ஆர். சி. கட்சிக்காரர்கள், முதுகுளத்தூர் சம்பவங்களுக்கு நீதிமன்ற விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிப் பெரிய அட்டைகள் பிடித்துக் கொண்டு நேருஜி செல்லும் வழியில் நிற்கச் சென்னை சர்க்கார் ஆட்சேபிக்கவில்லை; பம்பாய் ராஜ்யத்தில் சிவாஜி சிலையைத் திறந்துவைக்க நேருஜி சென்றபோது, சம்யுக்த மகாராஷ்டிரக்காரர்களுக்குத் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு அந்த ராஜ்ய சர்க்கார் வாய்ப்பு அளித்திருக்கின்றனர். இவையெல்லாம் பின்பற்றித் தி. மு. க.வின் கறுப்புக் கொடி காட்சியை ஆட்சேபிக்கவில்லை. அதற்காகப் பாதையில் கொம்பு நட்டு அமைதியாக நடைபெறுவதற்கு ஏற்பாடும் செய்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் தங்கள் கட்சித் தோழர்களுக்கு அமைதியான

காங்கிரஸ், பாலம் அமைக்குமா?



முறையில் ஆட்சேபக் கொடிகள் காட்ட வேண்டும் என்று வற்புறுத்தவே சென்னைக் கடற்கரையில் கூட்டம் கூட்ட விரும்பியதாகத் தெரிகிறது. ஏற்கெனவே நகரில் தடை உத்தரவு இருந்ததால் காரணத்தை விளக்கிக் கூட்டத்துக்கு அனுமதி கோரினார்கள். இது தரப்பட வில்லை: உத்தரவை மீறிக் கூட்டம் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் நடைபெற்றன. சர்க்காருடைய அவிவேகத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டது. தி. மு. க. தலைவர்களைக் கைது செய்து விட்டு அந்தக் கட்சி பாமரர்களுக்கு வழிகாட்டவும், அமைதியைப் பாதுகாக்கவும் தலைவர்கள் இல்லாமல் செய்து விட்டார்கள்.

ஆனால் தி. மு. கழகத்தினர் அமைதியான முறையில் கறுப்புக் கொடி காட்டினால் இவர்களைப்பற்றி மக்கள் மதிக்கத் தொடங்கி விட்டால் என்ன செய்வது என்ற பயத்தில்தான் தி. மு. க. தலைவர்களைச் சர்க்கார் கைது செய்திருக்கிறார்கள். தி. மு. க. தோழர்களும் திராவிடக் கழகத் தோழர்களும்,—இரண்டு கட்சிக்காரர்களும்-ஒன்றாகச் சேர்ந்துகொண்டு அமைதியைக் கெடுத்துவிட்டனர். அத்துடன் நேருஜியைக் காண வேண்டும் என்று மவுண்ட் ரோடில் கூடியிருந்த கூட்டத்தினர் மௌண்ட் ரோடு வழியே நேரு செல்லாததால் ஏமாற்றமடைந்திருந்தனர். இந்த நிலையில் போலீஸ்காரர்கள் தங்கள் தடிப் பிரயோகத்தையும், 'கார்ப் புகை வெடி'யையும் உபயோகிக்கத் தொடங்கி விட்டனர். மொத்தத்தில் இவற்றின் காரணமாகப் பல ஆயிரக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொதுச் சொத்துக்கள் நாசமாகும்படி நேர்ந்து விட்டது.

அடிபட்டவர்களுக்குத் தகுந்த சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. பரிதாபமான நிலையில் உள்ளவர்களுக்குத் தகுந்த ஏற்பாடு செய்வது சர்க்காரின் கடமை அல்லவா? அப்படிச் செய்யாமல் அவர்களைக் கைது செய்து சிறைப்படுத்தி விட்டார்கள். பிறகு அவர்களைக் காணப் போன தி. மு. க. தலைவர்களின் பேரில் சர்க்கார் பழியும் சுமத்தப் பார்க்கிறார்கள்.

சென்னை முதன் மந்திரிக்குத் திராவிடக் கழகத் தோழர்களிடம் எப்போதுமே அனுதாபம் உண்டு என்பது நாடறிந்த விஷயம். தேர்தல் காலத்தில் திராவிடக் கழகத்தின் கறுப்புக் கொடியும் மூவர்ணக் காங்கிரஸ் கொடியும் பறக்கும் பல கூட்டங்களில் பேசியிருக்கிறார். எத்தனையோ இடங்களில் திராவிடக் கழகத்தின் மாலை மரியாதைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றிருக்கிறார்.

ஆனால் போலீஸ் மந்திரி பக்தவத்ஸலம் அவர்கள், "என்னைப் பொறுத்த வரையில், தி. க., தி. மு. க. ஆகிய இரண்டுக்குமிடையே பெருத்த வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை!" என்று சொல்லுகிறார். மிகுந்த எச்சரிக்கையோடு 'என்னைப் பொறுத்த வரையில்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்.

சென்னை காங்கிரஸின் ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் பல ராஜதந்திர முறைகளைக் கையாளுகின்றனர். இந்த முறைகள் தமிழ் மக்களை எங்கே கொண்டு சேர்க்குமோ!

அப்துல்லா விடுதலையானர்

காஷ்மீர் புலி என்று புகழப்பட்ட காஷ்மீரின் முன்னாள் தலைவர் ஷேக் அப்துல்லா விடுதலை செய்யப்பட்டார். விடுதலையான முன்னாள் தலைவரை வரவேற்கிறோம்.

அவர் விடுதலையான செய்தியைக் கேள்விப்பட்டும், காஷ்மீர் மக்கள் ஒரு உற்சாகத்தையும் காண்பித்ததாக இதுவரையில் தெரியவில்லை. விடுதலையான செய்தி கேட்டு மூன்று நாட்களாகியும் யாரும் அவரை நாடிச் சென்றதாகச் செய்தி வரவில்லை. பக்ஷி குலாம் அவர்களுடைய நிர்வாகத்தை மக்கள் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் வேறு கிளர்ச்சிகளை அவர்கள் விரும்பவில்லை என்றும் கருத வேண்டியிருக்கிறது.

காஷ்மீர் விவகாரத்தைப் பரிசீலனை செய்ய மீண்டும் கிராஹம் ஐ. நா. சபைத் தூதராக வந்திருக்கிறார். அவருடன் பேச்சு வார்த்தை நடத்த இந்திய சர்க்கார் தயாராயில்லை என்றாலும் விருந்தாளியை உபசரிக்கும் முறையில் உபசாரம் செய்யப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள்; ஆனால் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு விஷயமே இல்லை: விடுதலையான ஷேக் அப்துல்லாவின் நிலையை ஆராயும் போது காஷ்மீர் மக்கள் தங்கள் சர்க்காரிடமும், இந்திய சர்க்காரிடமும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்பது விளங்குகிறது. இருந்தாலும் நாளடைவில் ஷேக் அப்துல்லாவின் செல்வாக்கு உயர்ந்தாலும் உயரலாம்: அவருடைய யோசனை லடாக் பிரதேசத்தைப் பாகிஸ்தானுக்குக் கொடுத்து, ஜம்மு பிரதேசத்தை இந்தியாவுக்கு ஒப்படைத்து விட்டு, காஷ்மீர் நடுப்பிரதேசம் சுதந்திர நாடாக இருக்கவேண்டும் என்பது. இந்தத் திட்டம் காகித அளவில் நன்றாக இருந்தாலும் நடைமுறையில் அவ்வளவு திருப்திகரமான ஏற்பாடு ஆகாது; இந்த உண்மை ஷேக் அப்துல்லாவுக்கே நாளடைவில் விளங்கலாம்; இவரும் பக்ஷி குலாம் முகம்மது அவர்களும் ஒன்றுபட்டுப் போனால் பிறகு காஷ்மீர் பிரச்சனையில் சிக்கல் ஒன்றும் இராது.

பிரிட்டிஷ் பிரதமருக்கு உபசாரம்

பிரிட்டிஷ் பிரதம மந்திரியாருக்குத் தில்லியில் அளவு கடந்த மரியாதைகளும் உபசாரங்களும் நடைபெற்றன. உலக சாந்திக்குப் பாடுபடுவதாக அவரும் தில்லியில் பேசினார்: அமெரிக்காவின் நாசகாரி அணுகுண்டுகளுக்கு இங்கிலாந்தில் இடம் தர மறுப்பதாகக் காணப்படவில்லை. இங்கிலாந்து முழுவதும் அமெரிக்க ராணுவத்துக்கு ஒரு லஷ்கர் மைதானமாகி விட்டது என்று பலர் ஆட்சேபித்து வருகிறார்கள். ருஷ்ய நாட்டின் மேலே ஆகாயத்தில் அமெரிக்க விமானங்கள் பறந்து செல்லுகின்றன. "நாம் வெகு உயரத்தில் பறக்கிறோம். நம்மை ருஷ்யர்கள் தாக்கவில்லை. தாக்கும்படியான ஆயுதங்கள் அவர்களிடம் இல்லை என்று தோன்றுகிறது. ருஷ்ய தளவாடங்களைப் படம் எடுத்து வருகிறோம். ஆனாலும் தாக்கவில்லை" என்று சில அமெரிக்கப் பத்திரிகைகள் வீரியம் பேசிவருகின்றன. உலக சாந்தியைக் கலைத்து, அணுப் போரைத் துவக்குவதற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?

இதைத் தடுக்க பிரிட்டிஷ் பிரதமர் எந்த முயற்சியும் செய்யவில்லை. ராஜாஜி ருஷ்யத் தலைவர் குருசேவ் அவர்களுக்கு எழுதிய கடிதம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது; அமெரிக்க அரசாங்கத்தின் பேச்சுக்களும் நடவடிக்கைகளும் பார்த்தால் சமாதானத்துக்கு வழியில்லை என்றும், உலகம் அழிவதற்கே வல்லரசுகள் வழிதேடி வருகின்றன என்றும் கருத வேண்டியிருக்கிறது. ராஜாஜி குருசேவுக்கு எழுதியதைப் போலவே பெட்ராண்ட் ரஸ்ஸலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு வருகிறார். 'ஒருதலை நடவடிக்கை' எடுக்கச் சொல்லி வருகிறார். பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லனார் அந்தச் சொல்லுக்குச் செவி சாய்ப்பதாகத் தெரியவில்லை.

தாமரை அடிபோற்றி

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து
போற்றுமரை யடியே போற்றும் பொருள்
[கேளாய்!

இந்த அழகிய அணங்கு கையில் மலர் ஏந்தி ஆண்டவனை வணங்கச் செல்கிறாள். தன்னையே இறைவனுக்கு அர்ப்பணிக்கும் நோக்கத்துடன் செல்கிறாள் என்பது அவள் முக பாவத்திலும், மலர் ஏந்தியிருக்கும் நிலையிலுமிருந்தும் நாம் தெரிந்து கொள்கிறோம். உள்ளத்தைப் பேதலிக்கக்கூடிய அழகு அவள் பெற்றிருந்தாலும், அவள் மலர் ஏந்தி நிற்கும் நிலை நம் உள்ளத்தைத் தூய்மைப் படுத்தி விடுகிறது.

மனிதனுடைய உள்ளத்தில் எப்பொழுதுமே இரண்டுவித உணர்ச்சிகள் போராடத்தான் செய்கின்றன! அதிலும் தீய உணர்ச்சிகள் அவனை ஆட்கொண்டு கீழே பிடித்துத் தள்ளவே முயல்கின்றன. காமம், குரோதம் போன்ற உணர்ச்சிகளுக்கு மனிதன் வெகு சீக்கிரத்தில் உள்ளாகி விடுகிறான்! இவற்றிலிருந்து தப்பி உயரிய லட்சியங்கள் உயரிய நோக்கங்களுக்காக வாழ்வது என்பது சிரம சாத்தியமான காரியமாக இருக்கிறது.

மனிதன் உயர் நோக்கங்களுடன் வாழ்வதற்காகவே கலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தக் கலைகளில் சிறந்த சித்திரக் கலையில் பணியாற்றி வருபவர் ஓவியர் கனு தேஸாய். அவருடைய மலரேந்திய மங்கையின் சித்திரம் இவ்விதழ் அட்டையை அலங்கரிக்கிறது!

அருள் வாக்கு

நீங்கள் எவ்வளவு தெய்வங்களையும் அம்மன்களையும் வணங்குகிறீர்கள் என்று சொல்லி வெளிநாட்டுக்காரர்கள் நமது மதத்தை ஏளனம் செய்கிறார்கள். பல தெய்வங்களை வழிபடுவதாக ஹிந்து மதத்தின் மீது புகார் கூறுவது தவறு. அறியாமையாலேயே இந்தப் புகார் கூறப்படுகிறது.


ஒரே தெய்வம் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று உருவங்களில் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று காரியங்களுக்காகத் தோன்றுவதாகவும் ரஜோகுணம், சத்வகுணம், தமோ குணம் ஆகிய மூன்று குணங்களால் இக்காரியங்கள் நடைபெறுகின்றன என்றும் பாண மகா கவி கூறுகிறார். பிறக்காத ஒருவன் இந்த முக்காரியங்களுக்கும் காரணமாக இருக்கிறான். அவன் தான் இந்த மூன்று குணங்களும் சேர்ந்த த்ரயிமயா. வேதங்கள் போற்றுவதாலும் அவன் த்ரயிமயா. இதே கருத்தைக் காளிதாஸனும் ஒரு கவிதையில் தெரிவிக்கிறான்.

காளிதாஸன் சுலோகத்தின் கருத்து வருமாறு:—

ஒரு மூர்த்தி மூன்று உருவங்களாகத் தோற்ற மளிக்கிறார். இவர்களிடையே உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வித்தியாசம் கிடையாது. பிரம்மா, விஷ்ணு, சிவன் எல்லாம் ஒரே கடவுள் தான். ஹிந்து மதத்தின் எல்லாக் கடவுள்களும் ஒன்றே. அப்படியானால் ஒரு கடவுள் மற்றக் கடவுளைக் காட்டிலும் உயர்ந்தவர் என்ற பூசல் ஏன்? தாங்கள் வழிபடும் கடவுள் தான் உயர்ந்தவரென்று சிலர் கூறுகிறார்கள். பாலத்தின் வளைவில் ஒரு கோடியில் நிற்பவனுக்கு, தான் நிற்கும் வளைவு நீங்கலாக மற்ற வளைவுகள் எல்லாம் சிறியனவாகத்தான் தோன்றும். ஆனால் எல்லா வளைவுகளும் ஒரே விட்டத்தைச் சேர்ந்தவையே. இதேபோல் குறிப்பிட்ட ஒரு தெய்வத்தை வழிபடுகிறவர்களுக்கு மற்றத் தெய்வங்கள் மட்டமானவையாகத் தோன்றும். இதற்குக் காரணம் தான் விரும்பும் தெய்வத்தை அவர் வழிபடுவது தான். எல்லாத் தெய்வங்களும் ஒரே கடவுளின் பல்வேறு அவதாரங்கள் என்பதுதான் உண்மை.

பிரபஞ்சத்தின் எல்லாப் பொருட்களின் இறுதி உண்மை கடவுள் தான். மரத்தின் உதாரணத்தை எடுத்துக் கொண்டால், மண்ணும், நீரும்தான் விதை பெரிய மரமாக வளர உதவுகின்றன. மண்ணிலிருந்தும் நீரிலிருந்தும் தான் மரம் தோன்றுகிறது. மரத்தைக் காப்பாற்றுவது மண்ணும் நீரும் தான். மரம் செத்து விட்டால் தான் பிறந்த மண்ணிலும் நீரிலும் அது கரைந்து விடுகிறது. மரத்தின் சத்து அல்லது உண்மை மண்தான். மரங்கள் போன்ற எல்லாப் பொருட்களுக்கும் இதே தத்துவம்தான். அறிவு படைத்த மிருகங்கள் உள்பட மற்ற எல்லா விதமான படைப்புகளுக்கும் இதே தத்துவம்தான் பொருந்தும். மரம் தோன்றிய 'தனி' மண்ணுக்குப் பின்னே 'பிரபஞ்ச' மண் இருப்பது போல ஒரு பேரறிவு இருக்கத்தான் வேண்டும். அறிவுகள் எல்லாம் அந்தப் பேரறிவின் நுண்ணிய அம்சங்களே. இந்தப் பேரறிவு அல்லது 'சித்' என்பது கடவுள். அவர் தான் ஆனந்தம். இருப்பவர் அவர் ஒருவரே அல்லது 'சித்' தான் கடவுள். சத்துவ குணத்தினால் தூண்டப்பட்டுக் காப்பதற்காக ரஜோ குணத்துடன் சேர்ந்து சிருஷ்டிப்பதற்கும், தமோ குணத்தால் தூண்டப்பட்டு அழிப்பதற்கும், அந்தக் கடவுள் தான் பொறுப்பு. இப்படியாகக் கடவுள் த்ரிகுணாத்மா—மூன்றாகத் தோன்றும் ஒரே தெய்வம்.

ஆண்டவனின் இந்த ரூபங்கள் வெவ்வேறானவை அல்ல. ஒரே தெய்வத்தின் மூன்று அவதாரங்கள். ஆண்டவன் பக்தர்களின் நம்பிக்கைக்கு ஏற்பப் பல உருவங்களை மேற்கொள்கிறான்.




ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சிகாமகோடி பீடம்.

ஆங்கிலமே ஆட்சி மொழி





ஆட்சி மொழி சம்பந்தமாக நிதி மந்திரி சி. சுப்பிரமணியம் பேசியதற்கும் மற்றும் சிலர் பேசியதற்கும் பதிலளிக்கும் வகையிலும் இன்னும் பல கருத்துக்கள் தெளிவுபடுத்தும் வகையிலும் சென்றஞாயிற்றுக்கிழமை ரஸிகரஞ்சனி சபா மண்டபத்தில் ராஜாஜியின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. 1. அன்று ராஜாஜி பேசிய பேச்சைப் பற்றி, 'ராஜாஜியே இதுவரை இப்படிப் பேசியதில்லை' என்று கேட்டவர்கள் ஒவ்வொருவரும் பேசிக்கொண்டு சென்றனர். 2. இந்தக் கூட்டத்துக்குத் தி. மு. க. செயலாளர் நெடுஞ்செழியனும் வந்திருந்தார். திரு செல்லசாமி கூட்ட முடிவில் நன்றி கூறினார். 3. இந்தக் கூட்டத்தில் வங்கத்தைச் சேர்ந்த திரு கே. கே. சின்ஹா 'ஆட்சி மொழி ஆங்கிலமாகவே இருக்க வேண்டும்' என்று மிக நன்றாக வற்புறுத்திப் பேசினார். இவர் தேசிய மொழிகளின் வளர்ச்சிக் கழகத்தின் காரியதரிசி. 4. பேராசிரியர் எம். ரத்னசுவாமி அவர்கள் வெகு அழகாகப் பேசினார்.



மறக்கமுடியாத தொண்டு

இலங்கையில் ஏற்பட்ட பிரளயத்தைப் போன்ற வெள்ளத்தினுல் விளைந்திருக்கும் சர்வ நாசத்தைப்பற்றி முழு விவரங்களும் இப்பொழுது கிடைத்திருக்கின்றன. சுமார் நான்கு லட்சம் மக்கள் வீடு வாசல்களை இழந்து நிர்க்கதியான நிலைமையை அடைந்து தவிக்கிறார்கள். பத்துகோடி ரூபாய்க்கு மேற்பட்ட சொத்துக்களுக்குச் சேதமேற்பட்டு விட்டது. மண்சரிவினுல் 300 பேர்கள் வரையில் உயிர் இழந்திருப்பதாக இதுவரையில் கிடைத்துள்ள தகவல்களிலிருந்து தெரிகிறது. இன்னும் சரியான தொடர்பு ஏற்படாமல் துண்டிக்கப்பட்டிருக்கும் இடங்களில் ஏற்பட்டுள்ள நாசம் எவ்வளவோ! வட இலங்கையும் கிழக்கு இலங்கையும் பல தினங்கள் வரையில் எவ்விதமான தொடர்புமின்றித் துண்டிக்கப்பட்டிருந்து இப்பொழுதுதான் ரஸ்தாப் போக்குவரத்து சற்றுச் சீரடைந்திருக்கிறது. அனேகம் ரஸ்தாக்களும் ரயில் பாதைகளும் இருந்த இடம் தெரியாமல் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்பட்டு விட்டன. இலங்கை-இந்திய ரயில் போக்குவரத்து பல தினங்களாக இல்லை.

இலங்கையின் இந்தச் சோதனையான காலத்தில் இந்திய விமானத்தில் சிறப்பாகச் சேவை செய்தது பெரிதும் பாராட்டத் தகுந்தது. இந்திய விமானங்கள் பல லட்சம் உணவுப் பொட்டலங்களையும் மருந்துகளையும் வெள்ளத்தினுல் துண்டிக்கப்பட்டவர்களுக்குக் கொண்டு போய்ப் போட்டதுடன் ஆயிரக் கணக்கான அகதிகளையும் ஆபத்திலிருந்து மீட்டுக் கொண்டு வந்தன. உதவி வேண்டுமென்று இலங்கை கேட்டவுடன் உலகநாடுகள் போட்டி போட்டுக் கொண்டு உதவி புரிய முன்வந்த பொழுதிலும் முதன் முதலாக உதவி புரிய முன்வந்ததும் சிறப்பாக உதவி செய்ததும் இந்தியாதான். இதை இலங்கை மக்கள் ஒரு போதும் மறக்க முடியாது. அண்டையிலுள்ள நாட்டைப் போல அவசரத் தேவைக்கு வேறு யாரும் உதவ முடியாதென்பதை இந்தச் சம்பவம் ஆணித்தரமாக அறிவுறுத்தி விட்டது. இதைப் பிரதம மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகா வாய் விட்டுச் சொல்லி இந்திய விமானிகள் தங்கள் உயிரையும் மதியாமல் அரும்பெரும் சேவைகள் செய்ததை வெகுவாகப் பாராட்டினுர்.

வெள்ள அகதிகளுக்காக ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமிகள் சிறப்பாகச் சேவை செய்து வருகிறார்கள்; சுவாமி பிரேமாத் மானந்தாவும் மிஷனைச் சேர்ந்த மற்றவர்களும் கிராமம் கிராமமாக நேரில் சென்று அகதிகளுக்கு உணவும் உடையும் பணமும் விநியோகித்து வருகின்றனர். 'வீரகேசரி' பத்திரிகையின் மூலமாக வசூலாகிய நூற்றுக் கணக்கான புடவை, வேஷ்டி, சட்டை, ரவிக்கை முதலியவை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் மூலம் அகதிகளுக்கெல்லாம் வழங்கப்படுகின்றன.

கொழும்பிலுள்ள பிரபல தமிழ்த் தினசரிப் பத்திரிகையான 'வீரகேசரி'யின் நிர்வாகத்தில் இம் மாதம் பெரிய மாறுதல் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத் தகுந்தது. சுமார் 28 ஆண்டுகளுக்கு முன்னுல் சிறிய தோரணையில் ஆரம்பித்த இந்தப் பத்திரிகை இன்று இலங்கையில் மிகுந்த செல்வாக்குடனும் சிறப்புடனும் விளங்குகிறதென்றுல் அதற்கு முக்கிய காரணம், பெருமைப்படக்கூடிய முறையில் அதை நிர்வகித்து வந்த திரு எஸ். ஈஸ்வர ஐயர் என்பவரேயாவார். வீரகேசரியின் உயர்வுக்காக அல்லும் பகலும் அயராமல் உழைத்து உன்னதமான நிலைமைக்கு வீரகேசரியை அவர் கொண்டு வந்து வைத்தார். ஒரு இந்தியர் இந்தியத் துவேஷம் தலைவிரித்தாடும் ஒரு நாட்டிலே, தமிழை அழித்து ஒழிக்க முயற்சி செய்யும் ஒரு சமுதாயத்தின் மத்தியிலே, அரசாங்கமும் மதித்துக் கௌரவிக்கக் கூடிய நிலைமைக்கு ஒரு தமிழ்ப் பத்திரிகையை நிர்வகித்து நடத்திக் கொண்டு போவதென்றுல் அது பெரிய ஆச்சரியம். ஆசாபாசங்களின்றியும், தயவு தாட்சண்யமின்றியும், மனிதப் பண்புடனும் பத்திரிகா தர்மத்தைக் கடைப்பிடித்த பெருமை ஸ்ரீ ஈஸ்வர அய்யருடையது. சுகவீனம் காரணமாக அவர் ஓய்வு பெற நேரிடவும் வீரகேசரியின் நிர்வாகத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. டைரக்டர்கள் போர்டுக்குப் பிரபல கொழும்பு ஆடிட்டரான ஸ்ரீ டி. பி. கேசவன் தலைவராகவும் மானேஜிங் டைரக்டராக ஸ்ரீ ஆர். ஏ. நடேசனும் ஜெனரல் மானேஜராக ஸ்ரீ ஏ. ராமநாதனும் பதவி ஏற்றிருக்கிறார்கள். ஸ்ரீ நடேசன் அச்சுத்தொழிலில் பல வருட அநுபவம் வாய்ந்தவர். தோட்டச் சொந்தக்காரர். தமிழரின் கல்வி முன்னேற்றத்துக்காக அவரும் ஸ்ரீ கேசவனும் ஏராளமாக நன்கொடை வழங்கி உதவியிருக்கிறார்கள்; இலங்கை இந்தியச் சமூகத்தினிடையே மிகுந்த மதிப்பும் செல்வாக்கும் உடைய இவர்கள் நிர்வாகத்தில் தமிழ் மக்களின் தனிப்பெரும் பத்திரிகையான வீரகேசரி மேலும் மேலும் சிறப்பாகப் பணியாற்றி வருமென்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

—ரஜனி

டிசம்பர் மாதச் சிறுகதைப் போட்டியில் நூறு ரூபாய் பரிசு பெற்ற

"சந்திரகாந்தக் கல்"

என்னும் கதை அடுத்த இதழில் பிரசுரமாகிறது.

பரிசு பெற்றவர் : என். சம்பந்தம்

47, நிமந்தகாரத் தெரு — பெரிய காஞ்சீபுரம்.

பி. ஸி. ஜியின் தாண்டவம்

ஒரு மாதத்துக்கு முன்பு பி. ஸி. ஜி காரர்கள் தாத்தையாம்பட்டிக்கு வந்திருந்தார்கள். ஊசி போட்டுக் கொள்ளாதவர்களுக்கு ரூபாய் இருபத்தைந்து அபராதம் என்றதால் நான் போட்டுக் கொண்டேன். அதிலிருந்து கைவலி எடுத்து ஒரு மாதமாக நெசவு நெய்ய முடியவில்லை. இரண்டு நாளைக்கு ஒருதடவை விட்டு விட்டுக் காய்ச்சல் வருகிறது. உடம்பு இளைத்து வருகிறது.

தாத்தையாம்பட்டி
3—1—58 .பி. பெத்தி செட்டியார்

* * *

என் மனைவி பாப்புவுக்கும் இரண்டு வயதுக் குமாரன் மாதய்யனுக்கும் சென்ற டிசம்பர் முதல் தேதி பி. ஸி. ஜி போட்டார்கள். அப்போதிருந்து இன்னும் சீழ் வந்து கொண்டிருக்கிறது.

தாராபுரம்
3—1—58 எம். ராஜா கவுண்டர்

* * *

சென்ற டிசம்பர் மாதம் முதல் தேதி என் மனைவி தனபாக்கியம் பி. ஸி. ஜி போட்டுக் கொண்டாள். எட்டாம் நாள் கையில் கொப்பளம் ஏற்பட்டது. பிறகு கால்களிலும் கொப்பளம். இன்னும் காய்ச்சல் வருகிறது.

என் குழந்தை லலிதாவுக்கு ஏழு வயது. பி. ஸி. ஜி போட்டதிலிருந்து பத்து நாட்களுக்குப்பிறகு காய்ச்சல் வந்து தொண்டைக்குள் கட்டிகள் இரண்டுபுறமும் ஏற்பட்டு டாக்டரிடம் கொண்டுபோய்க் காண்பித்ததில் அவர் மருந்து கொடுத்து உடைய வைத்து விட்டார். தொண்டைக் கட்டிகளில் நிறையச் சீழ் இருந்தது. இதுவரை மூன்று ஊசிகள் போட்டுக் குணப்படுத்தி வருகிறோம். இன்னும் குணமாகவில்லை. புண் ஆறுவதற்கு இன்னும் ஒரு மாதமாவது பிடிக்கும் என்கிறார். குழந்தை மிகவும் அவஸ்தைப்பட்டு வருகிறது.

தாராபுரம்
3—1—58 எஸ். வெங்கடராம செட்டி

* * *

ஜெயபால் வயது 12. பி. ஸி. ஜி ஊசி போட்டதால் ஒரு மாதமாகச் சீழ் வந்த வண்ணம் இருக்கிறது. கை வலியும் நாற்றமும் இருந்துவருகின்றன. புழு வேறு இருக்கிறது. இதை பி. ஸி. ஜி காரர்களிடம் காண்பிக்க, "வாசனை சோப் போட்டுக் கழுவு. நாற்றம் போய்விடும்" என்கிறார்கள்.

தாராபுரம்
7—1—58 கே. ராஜு செட்டியார்

* * *

இருபத்தைந்து நாட்களுக்கு முன்பு பி. ஸி. ஜி ஊசி போட்டார்கள். ஆறு நாட்களுக்குப் பிறகு கால்களிலும் கைகளிலும் ஒரு பக்கம் கொப்பளம் ஏற்பட்டுச் சீழ் வந்தது. பிறகு உடல் முழுதும் கட்டிகள் புறப்பட்டுப் பதினைந்து நாட்களாகப் படுத்து விட்டேன். இரண்டு நாட்கள் காய்ச்சல் வந்தது. சீழ் நிறைய வடிந்தது. கால்கள் வீங்கி நடக்க முடியாமல் படுத்து விட்டேன்.

ராக்கிப்பட்டி
7—1—58 ஐ. ஆர். ராமுக் கவுண்டர்

* * *

புளியம்பட்டி ஸ்ரீ ரத்தினம் அவர்களுக்கு, பி. ஸி. ஜி போட்டதிலிருந்து உடம்பு முழுதும் கட்டிகள், கொப்பளங்கள் ஏற்பட்டுச் சீழ்வர ஆரம்பித்து ஒரு மாதம் படுத்து விட்டார். மிகவும் இளைத்துப் போய் விட்டார்.

"ஏழை மக்களும் பி. ஸி. ஜியும்" என்ற தலைப்பில் 29-12-57 கல்கியில் வெளியான என் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த நபர் காவேரிச் செட்டி என்பவர் பெண் அல்ல. ஆண்தான். அவருக்குப் பெருந்துறைக்குப் போக அங்கு டிபாசிட் கட்ட வேண்டும் என்றதால், டிபாசிட் கட்ட முடியாமல் திரும்பி வர நேர்ந்து விட்டது. சென்ற டிஸம்பர் 20ந் தேதி சேலம் ஜெனரல் ஆஸ்பத்திரியில் அவர் சேர்க்கப்பட்டார். 21-12-57ல் எக்ஸ்ரே எடுக்கப்பட்டு இன்னும் ஆஸ்பத்திரியில்தான் இருக்கிறார். இன்னும் இழுப்பு, இருமல் இருக்கிறது.

தாராபுரம் இருசா கவுண்டர், அலமேலு ஆகியவர்களுக்குத் தினக் கூலிதான் ஜீவனம். அவர்களுக்கு பி. ஸி. ஜி ஊசி போட்டதிலிருந்து ரத்தக் கடுப்பு உண்டாகிப் பதினைந்து நாட்கள் இருந்தது. இன்னும் பலருக்குச் சீழ் வடிதல் இருந்து வருகிறது.

ஒமலூர் சுந்தரம் சவரத் தொழிலாளி. தம் குழந்தைகளுக்குத் தம்முடைய சம்மதமோ, தம் மனைவியின் சம்மதமோ கேளாமல் குழந்தைகள் அழுதும் கூட விடாமல் கட்டாயப்படுத்தி பி. ஸி. ஜி ஊசி போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்.

தாராபுரம் புதூர்
7—1—58 டி. வி. ராஜகோபாலன்



இருநூறு வருஷங்களுக்கு முன்னர், மனிதன் பூமியின் தரை மட்டத்துக்கு மேல் உள்ள பொருள்களைக் கொண்டே ஜீவித்து வந்தான். தரை மட்டத்திலிருந்து சிறிது தூரம் தோண்டிச் சலவைக்கல், தங்கம், வைரம் முதலிய சில பொருள்களும் ஆங்காங்கு எடுத்தனர். ஆனால் நீராவி முதலிய இயற்கை சக்திகளால் ஓட்டப்படும் பலமான இயந்திரங்களை அமைத்து, ரசாயன சாஸ்திரத்தில் தேர்ச்சி யடைந்த பின்னரே சுரங்கப் பொருள்களின் உபயோகம் அதிகரித்தது. தற்சமயம் சில தேசங்களில் அப்பொருள்களால் கிடைக்கும் செல்வம் விவசாயத்திலிருந்து கிடைப்பதை விட அதிகமாக இருக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஆண்டு தோறும் தோண்டப்படும் சுரங்கப் பொருள்களின் விலை மதிப்பு 7500 கோடி ரூபாய்களுக்கு மேல். பிரிட்டனில் 1000 கோடி ரூபாய் மதிப்புள்ள சுரங்கப் பொருள்கள் எடுக்கப்படுகின்றன. பாரதத்தில் எடுக்கப்படும் பொருள்களின் மதிப்பு 100 கோடி ரூபாய். உலகத்தில் சுரங்க வேலையில் மட்டும் பிழைத்து வருபவர்களின் எண்ணிக்கையின் சில விவரங்கள் பின்வருமாறு :

	மாதச் சம்பளக்காரர்	வாரக் கூலிக்காரர்
அமெரிக்க ஐக்கியநாடு	108900	648600
பிரிட்டன்	49600	775700
பிரான்ஸ்	33500	288000
மேற்கு ஜெர்மனி	50200	528500
ஜப்பான்	13700	377100
பாரதம்	32600	535600


. சுரங்கப் பொருள்களில் மிகவும் முக்கியமான பொருள்கள் மண்ணெண்ணெய்; நிலக்கரி; இரும்பு மண்; அலுமினியம், டின், ஈயம், செம்பு முதலிய உலோக மண்கள்; மாங்கனீஸ், உப்பு, ஜிப்ஸம், கந்தகம் முதலியன. இந்தியாவில் இவற்றில் பல பொருள்கள் கிடைக்கின்றன. ஆனால் மண்ணெண்ணெய் அல்லாமல் சிறிதளவே கிடைக்கிறது. வெள்ளி, டின் முதலிய உலோகங்களும் மிகவும் குறைவு. நாட்டில் எல்லாப் பாகங்களிலும் சுரங்கப் பொருள்கள் சமமாகக் கிடைப்பதில்லை. பீகார், மத்தியப் பிரதேசங்களில்தான் சுரங்கப் பொருள்கள் அதிகமாகப் புதைந்து கிடக்கின்றன. நமது நாட்டில் கிடைக்கும் சுரங்கப் பொருள்களின் எடைகளும், மதிப்பும், கிடைக்குமிடங்களும் பின்வருமாறு :

(1953 புள்ளி விவரங்கள்)

சுரங்கப் பொருள்	எடை	மதிப்பு லக்ஷம் ரூபாய்	கிடைக்கும் பிரதேசங்கள்
நிலக்கரி	3,59,79,167 டன்	5276·3	பீகார், வங்காளம், ம. பிரதேசம், ஆந்திரா
மாங்கனீஸ்	18,97,698 டன்	2941·4	ம. பிரதேசம், ஆந்திரா, ஒரிஸ்ஸா, பம்பாய்
உப்பு	29,72,916 டன்	547·3	பம்பாய், ஒரிஸ்ஸா, மதராஸ், ராஜஸ்தான், ஆந்திரா
தங்கம்	2,21,961 அவுன்சு	508·2	மைசூர், ஆந்திரா
இரும்பு மண்	38,44,911 டன்	279·7	பீகார், ஒரிஸ்ஸா, மைசூர்
மைகா	1,28,492 டன்	176·8	பீகார், ராஜஸ்தானம்
செம்பு மண்	2,38,010 டன்	114·1	பீகார்
ஜிப்ஸம்	5,82,713 டன்	38·1	ராஜஸ்தானம், ம. பிரதேசம்
இல்மனைட்	2,15,130 டன்	92	கேரளம், ம. பிரதேசம்
ஈயம்	1,694 டன்	18·4	(இதர உலோகங்களுடன் கலந்தது)
சைனு களிமண்	1,09,370 டன்	19·6	பீகார், பம்பாய், ம. பிரதேசம்
பாக்ஸைட்	70,848 டன்	7·9	பீகார், பம்பாய், ம. பிரதேசம், மைசூர்
வைரம்	2,207 காரட்	5·5	ம. பிரதேசம்
மரகதம்	550,938 காரட்	2·3	ராஜஸ்தானம்
மாக்னிஸைட்	92,748	18·2	ம. பிரதேசம், மைசூர்

சென்னை கடலூர் ஜில்லாவில் பழுப்பு நிலக்கரி (லிக்னைட்) கண்டு பிடிக்கப்பட்டுச் சுரங்கவேலை நடந்து வருகிறது. சமீப காலத்தில் அணுசக்திக்கு வேண்டிய சுரங்கப் பொருள்களுக்குக் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. கேரளத்தில் மோனஸைட் மணல்களிலிருந்து தோரியம் என்ற உலோகம் தயார் செய்யப் படுகிறது. அதிலிருந்து பம்பாயில் ப்லுடோனியம் தயார் செய்யப்பட்டு அங்கு கட்டப் படும் அணுசக்தி உற்பத்தித் தொழிற்சாலையில் உபயோகிக்கப்படும்.

தற்சமயம் அஸ்ஸாம் பிரதேசத்தில் ஓரளவு மண்ணெண்ணெய் கிடைக்கிறது. அப் பிரதேசத்தில் ஏராளமான மண்ணெண்ணெய்ப் புதையல் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் இதர பிரதேசங்களிலும் அவ்விதப் புதையல்களைப் பரிசீலனை செய்ய முயற்சிகள் செய்யப்படுகின்றன. மத்தியப் பிரதேசத்திலுள்ள விந்தியப் பிரதேசத்தில் பன்னு என்ற இடத்தில் வைரம் கிடைக்கிறது. இப்பொழுது தரை மட்டத்திலிருந்து 100 அடிக்குள்தான் தோண்டப்படுகிறது. ஆழ்ந்த சுரங்கம் அமைக்கப்பட்டால் பிரதி வருஷம் 10 கோடி ரூபாய் பெறுமானமுள்ள வைரம் கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வாறே மற்றும் பல சுரங்கப் பொருள்கள் நாட்டில் பல இடங்களிலும் புதைந்து கிடக்கும். அதைச் சரிவர ஆராய்வதற்கு இந்திய சர்க்கார் பிரயத்தனம் செய்து வருகின்றனர்.





15

அன்பு என்கிற தத்துவத்தை ஆழ்ந்து ஆராய்ந்தோமானால் அதனுடைய பலவித சக்தியைக் காண்போம். அறத்துக்கு மட்டும் அன்பு உதவும் என்பது இல்லை. போர்த் துறையிலும் அன்பு வேண்டும் என்பதைக் காண்போம். அதாவது க்ஷத்திரிய தர்மத்திற்கும் அன்பு துணையாகும்.

அன்பு காரணமாக வீரர்கள் அரிய செயல்களைச் செய்து முடிப்பார்கள். கர்ணனுடைய சூரத்தனத்துக்குக் காரணம் அவன் துரியோதனனிடம் வைத்த அன்பு. திரௌபதியினிடம் வைத்த அன்பே பீமனுடைய வீரச் செயல்களுக்குக் காரணம். இதுவன்றிப் போர் செய்யும் முறையிலும் உண்மையான வீரர்கள் அன்பைக் காட்டுவார்கள். இதற்கும் பல உதாரணங்கள் உண்டு. தாயிடம் வைத்த அன்பினால் கர்ணன் தன்னுடைய செயலை மாற்றிக் கொண்டதைப் பாரதப் போரில் காணலாம்.

அறத்திற்கே அன்பு சார்பு
  என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே
  துணை.

இந்தக்குறளுக்கு மற்றொரு பொருள்: மறத்திற்கு மருந்து. அதாவது தீமையை ஒருவன் செய்தால் அதற்கு மருந்து அன்பு. துணை யென்றால் தீர்க்கும் வழி அல்லது மருந்து.

தலைவலிக்கு மருந்து என்பது போல். பரிமேலழகர் 'துணை' என்பதை இப் பொருளில் வைத்து உரை எழுதியிருக்கிறார்.

மறம் என்பது அறத்திற்கு எதிர் மொழியாக வைத்துத் தீமை என்று பொருள் கொள்வது வழக்கம். ஆனால் வீரனுடைய வீரத்துக்கும் மறம் என்று சொல்வது முறை. பொருட்பாலில் அரசனுக்கு வேண்டிய குணங்களைச் சொல்லும் போது, "அறன் இழுக்காது, அல்லவை நீக்கி, மறன் இழுக்கா மானம் உடையது அரசு" என்று குறளாசிரியரே பாடியிருக்கிறார். வீரனுடைய மானத்துக்கு 'மறம்' இன்றியமையாதது. அன்பைப் பற்றிச் சொல்லிய குறளில் "மறத்திற்கும் அஃதே துணை" என்கிற அடியில், மறம் என்பதற்கு வீரனுடைய குணம் என்று பொருள் கொண்டால் துணை என்கிற சொல் மிகப் பொருந்தியதாகும்.

* * *

உள்ளத்தைஅன்பில்லாமல் வறட்சியாகச் செய்து கொண்டவனை இயற்கை நியதி தாங்காது. தர்மதேவதைக்குப் பொறுக்காது. எலும்பில்லாத புழுவைப் போன்றவன் ஆவான், அன்பு இல்லாத உள்ளத்தைக் கொண்டவன். உடலுக்கு எலும்பு போல உள்ளத்துக்கு அன்பு. முதுகெலும்பு உடம்பைத் தாங்குவது போல் அன்பு ஆன்மாவுக்கு முதுகெலும்பாகி அதைத் தாங்கும். முதுகெலும்பில்லாத புழு வெயிலில் பொசுங்கிப் போய் விடும். வெயில் புழுவைச் சுட்டு அழிப்பது போல, இயற்கை நியதி அல்லது தர்ம தேவதை அன்பில்லாதவனைக் காய்ந்து விடும். காயும் என்றால் பொசித்து ஒழித்து விடும்.

என்புஇல் அதனை
  வெயில் போலக் காயுமே
அன்பு இல் அதனை
  அறம்.

இந்தக் குறளில் அறம் என்பது இயற்கை நியதி. அன்பைப் பயிலாத ஆன்மா சிறப்புப் பெற்றுப் பரிணமிக்காது. தன்னுடைய முழு அழகையும் வாசனையையும் பெற்று மலராது. எலும்பு இல்லாத புழுவைப் போன்ற ஒரு பொருளாகும்.

மனிதன் புழுவுக்குச் சமானமாகாமல் மேன்மேலும் சிறந்து ஓங்க வேண்டுமானால் அன்பை வளர்க்க வேண்டும். அன்புத் தத்துவம் ஆன்ம பரிணமத்துக்கு அடிப்படை.

இன்ஷூரன்ஸ் நிர்வாகம்

எம். எஸ். சிவஸ்வாமி

கீதையிலிருக்கும் 'யோகக்ஷேமம் வஹாம் யஹம்' என்ற புனித வாக்கியத்தை இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனம் தனது சின்னத்தில் குறிக்கோளாகப் பொறித்துக் கொண்டிருக்கிறது. பாலிஸிதாரர்களுக்கு அந்தக் கொள்கைக்கு இணங்க அபயம் அளித்து வருகிறது.

ஆனால் கீதையில் கூறியபடி மக்களின் யோக க்ஷேமத்தைக் கிருஷ்ண பரமாத்மா வகிக்கும் முறைக்கும், ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் பாலிஸிதாரர்களின் யோகக்ஷேமத்தை வகிக்கும் முறைக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. கருணையால் செய்யப்படுவது முதலாவது. கட்டணம் வாங்கிக் கொண்டு நிறைவேற்றப்படுவது இரண்டாவது. பாலிஸிதாரர்களிடமிருந்து மாதந்தோறும், அல்லது வருஷந்தோறும் ''பிரீமியம்'' என்று வசூலிக்கப்படும் தொகையை ஒன்றாகத் திரட்டி, செலவுகளுக்காக ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு, மீதியை 'ஆயுள் நிதி' என்று சேமித்து வைக்கிறார்கள்.

இந்த நிதிதான் பாலிஸிதாரர்களுக்குத் தங்கள் பாலிஸி காலாவதியாகும்போது கிடைக்க வேண்டியது. பணம் நிச்சயமாகத் தாமதமின்றிக் கிடைத்து விடுமென்பதற்கு உறுதியளிப்பது பாலிஸி. அவர்கள் செலுத்தும் பிரீமியம் தொகையிலிருந்து வளர்ந்தது தானே இந்த நிதி. தங்கள் பணத்தைக் கொண்டுதான் பாலிஸிதாரர்கள் அவர்கள் க்ஷேமத்தைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள். இன்ஷூரன்ஸ் திட்டத்தின் அடிப்படையே அதுதான். இது ஒரு சிறு சேமிப்புத் திட்டம். வட்டிக் கணக்கையும் பாலிஸிதாரர்களின் ஆரோக்கிய நிலையையும் ஆதாரமாகக் கொண்டு இன்ஷ்யூரன்ஸின் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. சுமார் இருபது வருஷங்களுக்குப் பின்னால் தனக்கு ஐயாயிரம் ரூபாய் பாலிஸி தொகையாகக் கிடைக்க வேண்டுமானால், இந்தத் தொகையை இருபது வருஷ காலத்துக்குள் பல தவணைகளாகச் சிறுகச் சிறுகப் பூராவாகச் செலுத்திப் பின்னால் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏறக்குறைய சேமித்து வைத்த கூட்டுத் தொகையும் முடிவில் கிடைக்கும் பாலிஸி தொகையும் சமமாகத் தானிருக்கும்.

ஆகவே வியாபாரத்தில் முதலீடு செய்து லாபம் கிடைக்குமென்று எதிர்பார்ப்பதைப் போல் இன்ஷ்யூரன்ஸில் லாபம் கிடைக்குமா என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இது சேமிப்புத் திட்டமே தவிர வியாபாரத் திட்டமல்ல. வட்டி விகிதக் கணக்குப்படி பார்த்தால் சேமிப்புக் கூட்டுத் தொகையின் மீது 3 சதவிதம் அல்லது 4 சதவிதம் என்று தான் வட்டி கட்டும். அரசாங்கக் கடன் பத்திரங்களின் மீது முதலீடு செய்தால் கிடைப்பதை விடக் குறைவாகவேதான் கிடைக்கும். அப்படியிருந்தும் இன்ஷ்யூரன்ஸ் ஏன் மக்கள் செய்து கொள்ளுகிறார்கள் என்றால், தங்கள் பாதுகாப்புக்கும் தங்களை நம்பி வாழும் குடும்பத்தினர்களின் பாதுகாப்புக்காகவும்தான். முன் எச்சரிக்கையுடன் தங்கள் எதிர்கால நலனுக்காகத் தங்கள் முயற்சியினாலேயே தங்கள் பணத்தைக் கொண்டு ஏற்படுத்திக் கொள்ளும் தற்காப்பு இது.

இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் செய்யும் முக்கியமான பணி என்னவென்றால் இவ்வாறு தவணையாகச் சேமிக்கப்பட்ட பணத்தைஆயுள் நிதியில் சேர்ந்துள்ள தொகையை, மிக்க கவனத்துடன் பாதுகாத்து வருவதே யாகும். ஒரு தருமகர்த்தா தன்னிடம் ஒப்படைக்கப் பட்ட இந்த ஆயுள் நிதி விஷயத்தில் ரொம்பப் பாதுகாப்புடன் இருக்க வேண்டும். இது முக்கியமானது என்பதனால்தான், இந்த நிதிப் பணத்தை உபயோகிக்கும் விஷயத்தில் பல வரையறைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அரசாங்கக் கடன் பத்திரங்கள் இன்ன அளவு வரையில் இந்த நிதிப் பணத்தைக் கொண்டு வாங்கலாம் என்றும், சொந்தக் கட்டடங்கள் கட்டி வாடகைக்கு விட்டு வருமானம் உண்டாக்கிக் கொள்ளலாம் என்பதற்காக இன்ன அளவு செலவழிக்கலாம் என்றும், பிரபல வர்த்தகக் கம்பெனிகள் வெளியிடும் அடமானக் கடன் போன்ற பத்திரங்கள் வாங்கி இன்ன அளவுக்கு முதலீடு செய்யலாமென்றும், இவற்றைத் தவிர நன்கு நிலை பெற்று ஒழுங்கான முறையில் செயல் புரியும் தொழில் ஸ்தாபனத்தின் 'பங்கு'களின் மீது இன்ன அளவுக்கு முதலீடு செய்யலாம் என்றும், இப்படிப் பலவித வரம்புகள் நடைமுறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதன்படிதான் இந்த நிதிப் பணமும் உபயோகிக்கப் பட்டு வருகிறது. இவற்றின் முக்கிய நோக்கம் முதலுக்கு மோசம் வராமல், குறைந்த அளவாக இருந்தாலும் நிரந்தரமாக வருமானம் ஏற்படுத்திக் கொள்ளுவது மட்டுமே. ஆயுள் நிதிப் பணத்தை ஏராளமாகச் சேர்த்திருப்பதாக அதை வட்டியில்லாமல் முடக்கி வைத்திருப்பதற்குப் பதிலாக, பாதுகாப்புக்குப் பாதகம் ஏற்படாத முறையில் முதலீடு செய்து கொள்ளுவதுதான் இதன் லட்சியம்.

தேசியமயமாக்கப்பட்டதற்கு முன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் இவ்வாறு ஆயுள் நிதிப் பணத்தை முதலீடு செய்த வகையில் பல ஊழல்கள் சிற்சில கம்பெனிகளிடம் காணப் பட்டன. முக்கியமாக, தொழிற் ஸ்தாபனத்தின் பங்குகளிலும் வர்த்தக ஸ்தாபனத்தின் பங்குகளிலும், ஏராளமான பணத்தை முதலீடு செய்து பங்கு மார்க்கெட்டில் சூதாடினார்கள் என்றெல்லாம் குறை கூறப்பட்டது. ஓரளவுக்கு இதில் உண்மையிருந்தது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். இம்மாதிரி முறை தவறிய நடவடிக்கைகளின் பயனாக, ஆயுள் நிதியின் பணம் பலவிதங்களில் செலவழிக்கப்பட்டு, பாலிஸிதாரர்களுக்கு இந்த நிதியளித்த பாதுகாப்பு, குறைந்து விட்டதென்றும் சில கம்பெனிகள் இதனால் பாலிஸிதாரர்களுக்கு பாலிஸிகள் காலாவதியடைந்த போது பணம் வழங்க முடியவில்லை யென்றும் கூறப்பட்டது. இதிலும் உண்மை ஓரளவுக்கு உண்டு. இவ்வித ஊழல்களைத் தவிர்க்க வேண்டியே, இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளையெல்லாம்

தேசியமாக்கி அரசாங்கமே ஏற்றுக்கொண்டு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஸ்தாபனம் உருப்பெற்றுச் செயல்புரிந்து வருகிறது.

ஆகையால் அரசாங்கம் மேற்கொண்டு நடத்தும் நிர்வாகத்தின் கீழ் இதற்கு முன்பு தனிப்பட்ட கம்பெனிகள் நடத்திய போது காணப்பட்ட ஊழல்கள், குறை பாடுகள் முதலியவை காணப்படாது. பாலிஸிதாரர்களுக்குப் பாதுகாப்பாக விளங்கும் ஆயுள் நிதி உண்மையிலேயே பாதுகாப்பாகக் கவனித்துக் கொள்ளப்படும் என்றுதான் எதிர் பார்க்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு இந்த அம்சத்தில் முன்னேற்றம் காணப்படுகிறதோ அவ்வளவு பாலிஸிதாரர்களின் நம்பிக்கையும் அதிகரிக்கும். ஆனால் சமீபத்தில் ஆயுள் நிதிப் பணத்தைக் குறிப்பிட்ட சில கம்பெனிகள் பங்குகளில் முதலீடு செய்த விவரங்களை நிதி மந்திரி லோக சபையில் வெளியிட்டதிலிருந்தும், அதன் மீது நடந்த விவாதத்திலிருந்தும் புது நிர்வாகத்திலும் கூடப் பழைய நிர்வாகத்தின் ஊழல்களும் குறைபாடுகளும் புகுந்து விட்டனவோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆயுள் நிதிப் பணத்திலிருந்து சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு ஒரே கம்பெனியின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சுமார் பத்து தனித்தனி கம்பெனிகளின் பங்குகள் கூடுதலான விலைக்குப் பங்கு மார்க்கெட்டிலிருந்து இரண்டே நாட்களில் (ஜூன் 24, 25 தேதிகளில்) வாங்கப் பட்டதாகவும், இவ்வாறு வாங்கப் பட்ட பங்குகளின் விலை ஓரிரண்டு மாதங்களில் கணிசமான அளவுக்குக் குறைந்து விட்டதென்றும், இவ்வித விலைச்சரிவின் காரணமாக முதலீடு செய்த வகையில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்றும், வெளியான விவரங்களிலிருந்து தெரிகிறது. இவற்றிலிருந்து. கம்பெனி பங்குகளிலும் தொழில் ஸ்தாபனங்களின் பங்குகளிலும் ஆயுள் நிதிப் பணத்தை முதலீடு செய்வது அதன் மூலம் கிடைக்கும் வருஷாந்திர வருமானத்தை மட்டும் கருதியல்ல என்றும், பங்குகளின் விலை ஏற்றத்தால் கிடைக்கும் லாபத்தையும் முக்கியமாகக் கருத்தில் கொண்டு செய்யப் பட்டிருக்கலாமோ என்றும் ஊகிக்க இடம் இருக்கிறது. இவ்விரண்டும் இல்லையெனில் குறிப்பிட்ட பத்து கம்பெனிகளின் நிர்வாகம் கம்பெனியின் மோசமான நிதி நிலைமையைச் சமாளிக்க, தனிப்பட்ட நபர்களுக்கு உதவி செய்ய ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் தூண்டியது என்று எண்ணத் தோன்றும்.

இந்தக் கம்பெனிகளெல்லாம் முந்தராக் கம்பெனியின் நிர்வாகத்தில் இருப்பதால், இவற்றை மொத்தமாக முந்தராக் கூட்டுக் கம்பெனிகள் என்று பொதுவாகக் குறிப்பிடப் படுகிறது. இந்த நிர்வாகக் கம்பெனியே சமீப காலத்தில், இந்தியா சுயராஜ்யமடைந்த பிறகு தான் பிரபலமடைந்தது. ஆங்கிலேயர் நடத்தி வந்த பல தொழில் ஸ்தாபனங்கள் இந்தியா சுயராஜ்யமடைந்த பிறகு, அன்னிய நிர்வாகத்திலிருந்து இந்திய முதலாளிகள் நிர்வாகத்துக்கு மாறியது தெரிந்த விஷயம். இந்தியாவின் எதிர்காலப் பொருளாதார நிலை தமக்குச் சாதகமாக இருக்காதோ என்ற பீதியினால் அன்னியர்கள் தங்கள் ஆதிக்கத்திலிருந்த கம்பெனிகளின் நிர்வாகத்தை இந்தியர்களுக்கு விற்று விட்டனர். இந்திய முதலாளிகள் எதிர்காலம் தமக்கு, சாதகமாக இருக்கிறதென்ற நம்பிக்கையில் நிர்வாக உரிமைகளை நான்கு மடங்கு, ஐந்து மடங்கு அதிக விலை கொடுத்தும் தீவிரமாக வாங்கினார்கள். இதன் விளைவாக முன்னர் சிறு முதலாளிகளாக இருந்தவர்களும் பின்னணியில் இருந்தவர்களும் பெரு முதலாளிகளாக மாறி, முன்னணிக்கு வந்து விட்டனர். இவ்வாறு சமீப காலத்தில் பிரபலமடைந்த கம்பெனிகளில் ஒன்று தான் இங்கே குறிப்பிட்ட முந்தரா கம்பெனியும். ஆங்கிலேயரிடமிருந்து நிர்வாக உரிமையை வாங்கித் தங்கள் ஆதிபத்தியத்துக்குள் எடுத்துக் கொண்ட கம்பெனிகள்தான் ரிச்சர்ட்ஸன் அண்டு க்ருட்டாஸ் கம்பெனி, ஜெஸ்ஸப் அண்டு கம்பெனி முதலியவை. இந்தக் கம்பெனிகளின் பங்குகளைத்தான் பெருவாரியாக ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆயுள் நிதிப் பணத்தைக் கொண்டு வாங்கியிருக்கிறது. இவ்விதம் செய்யப்பட்ட முதலீடு முற்றிலும் சீரிய முறையில் நேர்மையாகச் செய்யப்பட்டதாகக் கருத முடியாது என்ற எண்ணம் தான் லோகசபை விவாதத்திலிருந்து எழுகிறது. அரசாங்கம் இது விஷயத்தில் விசாரணைக் கமிட்டி ஏற்படுத்த ஒப்புக் கொண்டிருப்பது ஓரளவுக்குத் திருப்தியளிக்கும், என்றாலும், ஆயுள் நிதிப் பணத்தைச் செலவிடும் வகையில் பலமான கண்காணிப்பு அவசியம்.

பொதுப் பணத்தைக் கையாளும் விஷயத்தில் அளவுக்கு மீறிய நேர்மை அவசியம். மற்றவர்கள் சார்பில் நிறைவேற்றப்படும் பொறுப்பு அது என்னும் கவனத்துடனேயே செயல் புரிவது அவசியம். இந்தியாவில் பாலிஸிதாரர்கள் பல்லாயிரக் கணக்கில் இருக்கின்றனர்; அவர்கள் எல்லோரும் அரசாங்கத்தின் மேற்பார்வையில் ஆயுள் கார்ப்பரேஷன் வேலை செய்யத் தொடங்கிய பின், முன்பு காணப்பட்ட ஊழல்களும், அவற்றினால் விளைந்த பீதியும் இனி இருக்காதென்று நம்பியிருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கைக்குக் குறைவு ஏற்படாமலிருந்தால்தான் 'யோக க்ஷேமம் வஹாம்யஹம்' என்ற பகவத் கீதையின் லட்சியத்தைக் கடைப்பிடித்ததாகும்.



ஹாஸ்யச் சித்திரம்

'கோன்ஸ்டபின் கந்தசாமி' ஒரு நூதன சிருஷ்டி. வெறும் காதற்கதைகளையும் சார மற்ற விஷயங்களையுமே படித்துப் படித்துச் சலித்துப் போன உள்ளங்களுக்குப் புத்துணர்ச்சியும் உற்சாகமும் தரும் ஹாஸ்யச் சித்திரத்தைக் கண்டு மிக்க மகிழ்கிறேன்.

சென்னை
4-1-58
ஆர். எஸ். பதி

பங்கு கொள்ளவேண்டும்

சமீபத்தில் பெய்த பெருமழையின் காரணமாகவும், வங்கக் கடலிலிருந்து வந்த புயல் காற்றாலும், இலங்கையில் முன் எப்போதும் கண்டிராத அளவு பெரும் நாசம் விளைந்துள்ளதைத் தாங்கள் அறிவீர்கள்.

எண்ணற்ற மக்கள் கோரமாகக் கொல்லப் பட்டனர். பச்சிளங் குழந்தையின் உடல்கள் குப்பைக் கூளங்களைப் போல் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. வீடு இழந்து, பொருள் இழந்து அகதிகளானோர் ஆயிரமாயிரமாகத் தவிக்கின்றனர். சுருக்கச் சொன்னால், இயற்கையின் கோர தாண்டவம் நிகழ்த்திய இக் கொடுமையை மனித மனத்தால் கூடக் கற்பனை பண்ணிச் சகிக்க முடியாதனவாகும்.

இக்கொடுமைக்கு ஆளானோர் பெரும்பாலும் தமிழர்களே. யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு போன்ற தனித் தமிழ்ப் பகுதிகளே முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

நமது இந்தியப் பேரரசும் மீட்பு வேலையில் உதவி, இலங்கை சர்க்காருடன் ஒத்துழைக்கிறது. இலங்கையிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும், பல பொது ஸ்தாபனங்களும், வர்த்தகர்களும், வேற்றுமைகளை மறந்து மனிதகுல சேவைக்கு முனைந்துள்ளனர். இவை பாராட்டுக்குரியன வென்றாலும், வெள்ள அகதிகளுக்குச் செய்யப்படும் இவ்வுதவிகள் தாற்காலிகமானதாகவே கருதக் கொள்ளலாம். ஏனெனில் நிலைமை சீர்பெற்றபின், ஆயிரக்கணக்கான மக்களுக்குப் புனர் வாழ்வு அளிப்பதிலேயே பிரச்னை தங்கியுள்ளது.

ஈழத்துத் தமிழர்களின் இந்த அவல நிலைமையைக் கண்டு இரங்கித் தன்னாலான உதவியைத் தாய்த் தமிழகமும் செய்ய முன்வர வேண்டும்: நம் இந்திய சர்க்கார் உதவிகள் செய்கிறார்கள் என்றாலும், மக்களும், குறிப்பாகத் தமிழகமும் இதில் பங்கு கொள்வது சிறப்புடையதாகும்.

சென்னை
30-12-57
எம். கே. எம். சகெரியா

கட்டுப்பாடு தவறுமா?

நம் நாட்டின் பெரும்பாலான பல்கலைக் கழகங்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் மாணவர்களைத் தவிர, மற்றவர்களை (கல்லூரியில் சேர்ந்து படிக்காத மாணவர்களை) பிரைவேட்டாகப் படித்துப் பரீட்சை எழுத அனுமதி கொடுக்க மறுக்கின்றன. காரணம் பட்டப்படிப்பின் தரமும், மதிப்பும் குறைந்து விடுமாம். இது ஒப்புக்கொள்ள முடியாத ஒரு வாதமாக இருக்கிறது.


பிரைவேட்டாக சர்வகலாசாலைப் பரீட்சைகளுக்கு நாம் அனுமதிக்கப்பட்டால், உத்தியோகத்தில் இருப்பவர்களும், கல்லூரிக்குச் சென்று பணத்தையும் நேரத்தையும் செலவழிக்க முடியாத ஏழை மாணவர்களும், கடுமையான உழைப்பாலும், விடா முயற்சியாலும் பரீட்சைகளில் தேறி நல்ல நிலைமைக்கு வருவது திண்ணம்.

அதிர்ஷ்ட வசமாக, நம் நாட்டிலுள்ள உத்கலா சர்வகலாசாலை (கட்டாக்) தனது இன்டர், பி. ஏ., எம். எல். பி. பி.காம் பரீட்சைகளுக்கு இந்தியாவிலுள்ள ஆண், பெண் எல்லோரையும் எவ்வித நிபந்தனையுமின்றி உட்கார அனுமதி தந்திருக்கிறது. இச் சலுகை 1964-ம் ஆண்டு வரைதான்: எம். எல். பி. பரீட்சை எழுதுவோர் முப்பது வயது பூர்த்தியானவராக இருக்கவேண்டும்.

நம் நாட்டுச் சர்வகலாசாலைகளில் சில, பெண்களுக்கு மாத்திரம் சலுகைகள் காட்டி வருகின்றன.

பம்பாய் எஸ். என். டி. டி. பெண்கள் சர்வகலாசாலையின் எல்லாப் பரீட்சைகளுக்கும் எல்லாப் பெண்களும் பிரைவேட்டாக ஆஜராகலாம். நாக்பூர், பனாரஸ் இன்டர், பி. ஏ. பரீட்சைகளிலும் பிரைவேட்டாகவே எல்லாப் பெண்களும் ஆஜராகலாம்.

உலகத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது லண்டன் பல்கலைக் கழகம்;





அது உலகத்தின் பல பாகங்களிலும் பரீட்சை களை நடத்துகிறது. அதன் எல்லாப் பரீட்சை களுக்கும் யாரும் ஆஜராகலாம், பிரைவேட் டாகவே. ஆனால் இந்தியாவில் அப் பரீட்சை களுக்கான சென்டர் இல்லாததால் பரீட்சை எழுதுவோர் சிங்கப்பூர் செல்ல வேண்டும்.

தாராள மனப்பான்மையுள்ள உத்கலா, லண்டன் பல்கலைக் கழகங்களின் சிறிய உதா ரணத்தை நமது தென் இந்தியப் பல்கலைக் கழகங்கள் பின்பற்றவும், இந்தியாவுக்கு லண்டன் சர்வகலாசாலையின் பரீட்சைகளுக்கு ஒரு சென்டர் கிடைக்கவும் வழி செய்தால் எவ்வளவோ நன்மையாக இருக்கும்.

ஈரோடு
3-1-58 வி. ஈஸ்வரன் பி.ஏ. பி.டி.

ரேடியோச் செய்தி

அகில இந்திய ரேடியோவில் ஆங்கிலத் தில் செய்தி தருவது யாரோ புதிதாகவந்தவர் பேசுவது போல் இருக்கிறது. செய்திகள் தருவதே சற்றுத் துரிதமாக, அதிலும் புரி யாதபடி வாசித்துச் செய்தி என்னவென்றே அறிய முடியாமல் செய்கிறது. இந்நிலையை உணர்ந்து அகில இந்திய ரேடியோ நிலையத் தார் செய்திகளை எல்லோரும் புரிந்து கொள்ளும் முறையில் வாசித்து அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருக்கோவிலூர்
2—1—58 ரா. ராஜசேகரன்

இலங்கையில் வெள்ளம்

பாரத மாதாவின் அருமைக் குழந்தை யைப் போன்ற இலங்கைக்குப் பெரு மழை யாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்ட மகத்தான நஷ்டத்தைப் பற்றித் தாங்கள் எழுதியிருந்த தலையங்கத்தைப் படித்தேன். அதைப் படித்த போது எழுந்த துயரத்தை வர்ணிக்க இயலாது. அதை படித்து வேதனையால் உள்ளம் துடிக்காதவர்கள் பாரத நாட்டில் யாரும் இருக்கமாட்டார்கள். நூற்றுக் கணக் கான உயிர்ச் சேதங்களைப் பற்றியும், குடி யிருக்கும் வீட்டை இழந்த லட்சக் கணக்கான மக்களைப் பற்றியும், இலங்கை அரசாங்கம் எத்தனையோ ரூபாய் செலவு செய்து உரு வாக்க நினைத்த திட்டங்கள் பாழானது பற்றி யும் பத்திரிகைகளில் படிக்கும்போது மனம் பதறாதவர்கள் யார்?

இயற்கை செய்யும் கொடுமைகளை மனிதர் களால் தடுக்க முடியாது. ஆனால் அதன் கொடுமையால் அவதியுறும் மக்களுக்குத் தங்களால் இயன்ற உதவியை ஒவ்வொருவரும் நினைத்தால் செய்ய முடியும். அதை நினை வுறுத்தும் 'கல்கி'யின் தலையங்கம் மிகச் சிறப் பாக அமைந்திருக்கிறது. நம்மால் இயன்ற உதவி நாம் செய்வோம். இயற்கை செய்த சதியின் கோர விளைவுகளை நீக்கக் கதிர்காமக் கடவுள்—சக்திவேல் முருகன் இருக்கிறான்.

கோழிக்கோடு
2—1—58 ஈ. கே. ராஜலக்ஷ்மி

அற்புத மொழிபெயர்ப்பு


ஷெல்லியின் மேல்காற்று ஆங்கில இலக் கியத்தில் ஓர் அற்புத படைப்பு. அக்கவிதை யின் அழகு சிறிதும் குறையாத வகையில் தமிழாக்கிப் பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்கள் தந்துள்ளதை 9-12-57ந் தேதி 'கல்கி'யில் தாங்கள் வெளியிட்டதற்கு என் மனமார்ந்த நன்றி.

தேவகோட்டை
2—1—58 ஜெ. ராமமூர்த்தி

லோஹியாவின் பேச்சு

நம் அருமைத் தலைவர் ராஜாஜியின் இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றி சோஷலிஸ்டுத் தலைவர் லோஹியா அலகாபாத்தில் பேசுகை யில் "இந்தியை உடனடியாகத் தேசிய பாஷை யாக ஆக்க வேண்டும். அதற்கான நட வடிக்கைகளை உடனே எடுக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

இந்தியாவிலேயே சோஷலிஸ்டுகளுக்குக் கொஞ்சம் ஆதரவு இருப்பது உத்தரப் பிர தேசத்தில்தான். இந்தி வெறியர்கள் அதிகம் இருப்பதும் அங்குதான். லோஹியாவுக்கு ராஜாஜியின் வாதம் புரிந்து, நேர்வழி நடக்க ஆரம்பித்தால், உத்தரப் பிரதேசத்தில் அவ ருக்கு மருந்துக்குக்கூட சோஷலிஸ்டுகள் அகப் பட மாட்டார்கள். மேலும் தீவிரவாதியான லோஹியா ஆங்கிலத்தின் மீது வெறுப்புக் கொண்டு அதனை வெளியேற்ற எண்ணினால், ஏன் அவர் இதுவரை இந்தியா காமன்வெல்த்தி



விருக்கும் அவமானத்தை எதிர்த்து அகில இந்தியப் போராட்டம் ஒன்று நடத்தத் தயங்குகிறார்?

சேரமாதேவி
4—1—58
பி. சுப்பிரமணியம்

சிறந்த கதை

"அலை ஓயாதோ!" என்னும் கதை ஒரு சிறந்த கதை. பேராசிரியர் 'கல்கி'யின் பாணி அமைந்திருக்கும் இந்தக் கதையின் ஆசிரியர் ஜெ. ராஜேந்திரன் ரஸிகர்களின் பாராட்டுதலுக்கு உரியவராவர்.

புதுக்கோட்டை
6—1—58
எஸ். எஸ். மூர்த்தி

பஸ் நிர்வாகம் கவனிக்குமா?

தற்சமயம் 5-ம் நம்பர் பஸ் மயிலாப்பூர் குளக்கரையிலிருந்து புறப்பட்டு அடையாறு கவர்னர் மாளிகை வழியாகச் சைதாப்பேட்டை போய்ப் பழையபடி அதே வழியாகத் திரும்பி மயிலாப்பூர் சேருகிறது. அதே போல் 12 ஏ பஸ் மயிலாப்பூரிலிருந்து தேனாம்பேட்டை வழியாகத் தியாகராயநகர் போய்ப் பழையபடி அதே வழியாகத் திரும்பி மயிலாப்பூர் வந்து சேருகிறது. 5 - பி பஸ்ஸைச் சைதாப்பேட்டையில் திருப்பாமல் மவுண்ட் ரோடு வழியாக-சி. ஐ. டி. மெயின் ரோடு வழியாகப் புதிதாகப் போட்டிருக்கும் தியாகராயநகர், தேனாம்பேட்டை வழி போய் மயிலாப்பூர் சேரும்படியும்; 12-ஏ. பஸ் தியாகராயநகருடன் திரும்பாமல் அதை நேரே சி. ஐ. டி. நகர் புது ரோடு வழியாக மவுண்ட் ரோடு சைதாப்பேட்டை கவர்னர் மாளிகை, அடையாறு வந்து சேரும்படியாகவும் செய்தால் பொதுமக்களுக்கு மிகுந்த வசதியாக இருக்கும்.

இதனால் அடையாற்றில் உள்ளவர்கள் சைதாப்பேட்டை வழியாக மாம்பலம் முதலிய இடங்கள் போவதற்கும் மாம்பலத்திலே உள்ளவர்கள் இன்ஜினீயரிங் கல்லூரி, காந்தி மண்டபம் முதலிய இடங்களுக்குப் போவதற்கும் மிகுந்த சௌகரியமாக இருக்கும். இதைச் சர்க்கார் போக்குவரத்து நிர்வாக அதிகாரிகள் ஆராய்ந்து ஆவன செய்வார்கள் என நம்புகிறேன்.

சென்னை
16-12-57
ஆராவமுதன்

மின்சார போர்டு கவனிக்குமா?

என் கணவர் சென்னை ராஜ்ய மின்சார போர்டில் உதவி ஆப்பரேட்டராகத் திருச்சியில் உத்தியோகம் பார்க்கிறார். அவருடைய வேலை ஒரு வாரம் காலை 4 மணி முதல் 12 மணி வரையும், மறுவாரம் இரவு 8 மணி முதல் காலை 4 மணி வரையும். மறுவாரம் பகல் 12 மணி முதல் இரவு 8 மணி வரையும்: சம்பளம் ரூபாய் 60; அலவன்ஸ் ரூபாய் 34. ஆக ரூ. 94. இதில் வீட்டு வாடகை ரூ. 6, பிராவிடெண்ட் பண்ட் ரூ. 4, கரண்ட் ரூ. 2, ஆக ரூ. 12-ம், பல அட்வான்ஸ்கள் வாங்கிய வகையில் பிடித்தம் ரூ. 20-ம் போக மீதம் கிடைப்பது ரூ. 62தான். இதில் புருஷன் மனைவி குடித்தனம் செய்யவேண்டும். அதுவும் திருச்சியில். இரவு வேலை பார்க்கும் பொழுது, பகலிலும், பகல் வேலையிருக்கும் போதுஇரவிலும் தூங்குகிறார். வேலை செய்வதால், வேலைக்குத் தகுந்த போஷாக்கு கிடையாது. ஏன், குறைந்த சம்பளம் திருச்சியில் மட்டும் அல்ல; ஈரோடு, மேட்டூர், மதுரை, இன்னும் பல இடங்களில் இம்மாதிரி சிப்பந்திகள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் படும்பாடு சொல்லி முடியாது.

இம்மாதிரி வேலை செய்வோர்க்குச் சிறிது அலவன்ஸ் கொடுத்தால் கஷ்டம் குறையும்.

திருச்சிராப்பள்ளி
30—11—57
ந. ராஜலக்ஷ்மி

தென்னிந்தியாவில் இதுவரையில் யாரும் கண்டும் கேட்டுமிராத அற்புத ஆலயம் தற்போது தஞ்சைமா நகரைச் சேர்ந்த ஸ்ரீனிவாசபுரத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு



வருகிறது. இந்த சுந்தர விநாயகர் கோவில், கணபதி யந்திராகாரமாய்க் கட்டப்பட்டு வருவது இதன் தனிச் சிறப்பாகும். யந்திரத்தில் உள்ள தேவதைகளும் சங்கநிதி, பதுமநிதிகளும் யந்திரங்களோடு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. மூலஸ்தானம் பஞ்சவர்க்க ரீதியில் சிற்ப சாஸ்திர நுணுக்கங்களுடன் நிர்மாணிக்கப்பட்டிருப்பது இந்த ஆலயத்தின் முக்கியமான அம்சமாகும்.

இந்தக் கோவிலுக்கு 1958-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 5, 6, 7 தேதிகளில் கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். இதன் சம்பந்தமான வைபவங்கள் ஜனவரி 31-ந் தேதி ஆரம்பமாகிப் பிப்ரவரி மாதம் 7-ந் தேதிவரையில் நடைபெறும். கர்ப்பக்கிரகத்துக்கு மேலுள்ள விமானம் பாரத நாட்டின் தனிப்பெரும் விநாயகத்திருத்தலமான புனுவுக்கு அருகில் உள்ள மயூரேச விமான அமைப்பின்படி கட்டப்பட்டுள்ளது. இந்தப் புதிய ஆலயத்தின் கும்பாபிஷேகம் சம்பந்தமாக மேற்கொண்டு விவரம் அறிந்து கொள்ள விரும்புவோர் ஸ்ரீ டி. எஸ். சுந்தரேச சர்மா, மேல வீதி, தஞ்சாவூர் என்ற விலாசத்துக்கு எழுதிக் கேட்டுக் கொள்ளலாம்.

கிராம மக்கள் துன்பம்

எங்கள் ஊரிலும் மற்றும் அடுத்துள்ள கிராமங்களிலும் சுமார் பதினாயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றெல்லாரும் விவசாயத் தொழிலாளர்கள். அங்கு கிளைத் தபால் நிலையம் உண்டு. கவர், கார்டு கேட்டால் தீர்ந்து போய்விட்டது என்று சொல்லுகிறார்கள். தந்தி கொடுக்க வேண்டும் என்றால் பத்து மைல் போய்த் திரும்ப வேண்டியிருக்கிறது. இதனால் இங்கு ஏழை மக்கள் படும் கஷ்டம் மிக அதிகம். இங்கு போலீஸ் நிலையம், உயர் நிலைப் பள்ளி, மின்சாரம் எல்லாம் உண்டு. ரயில்வே தொழிலாளர்களும் இருக்கிறார்கள். ஆகையால் பொதுமக்களின் சௌகரியத்தை உத்தேசித்துத் தபால் நிலையங்களை அதிகப் படுத்த வேண்டும்.

எங்களுடைய ஊருக்கும் மதுரைக்கும் பதினெட்டு மைல் தூரம் இருக்கிறது. அங்கு போய்வர வேண்டும் என்றால் பஸ் கிடைப்பதில்லை. புகைவண்டியோ குறித்த நேரத்தில் வருவதில்லை. ஆகையால் மக்கள் வெகு நேரம் காத்துக்கொண்டு தவிக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் மதுரை - திருப்பாச்சேத்திக்கு இரண்டு பஸ் விட்டால் நலமாக இருக்கும். இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை எடுத்து ஆவன செய்தால் பொதுமக்கள் நன்றியுடையவர்களாக இருப்பார்கள்.

திருப்பாச்சேத்தி
4—12—57
து. சுப்பிரமணியம்

சென்னை அரசாங்கம் கவனிக்குமா?

கை ஏர், மாட்டு வாரதாரர்களுக்குச் சலுகைகள் அளிக்க வேண்டும் என்று போன சட்டசபையில்தான் கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் எம். கல்யாணசுந்தரம் அவர்களால் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பலனாக இன்று சென்னை கவர்னர் ஒரு அவசர சட்டத்தை வெளியிட்டிருக்கிறார். (கை ஏர், மாட்டு வாரம்தாரர்களுக்குச் சலுகைகள்) இதன் பலனாக மேலே கூறப்பட்ட குத்தகைதாரர்களுக்கு அனுகூலம் ஆகிவிட்டது. அதே போல் சென்னை சட்டசபையில் ஏப்ரல் மாதவாக்கில் "சிறு நிலச்சுவான்தாரர்"களின் அவதியுற்ற நிலைமையைப் பல காங்கிரஸ் அங்கத்தினர்களும் எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் எடுத்துக் கூறினர். மேலும் சென்னை மந்திரிகளும் காங்கிரஸ் தலைவரும் திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் முதலிய இடங்களில் "சிறு நிலச்சுவான்களுக்கு" (ஒரு வேலி அல்லது ஐந்து ஏகர் உள்ளவர்களுக்கு) சலுகைகள் அளிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தி இருக்கின்றனர். எனினும் இது வரை "சிறு நிலச் சுவான்களுக்கு" ஒரு வித சலுகையும் அளிக்கப்படவில்லை. வருகிற சட்டசபையிலாவது அவர்களுக்குச் சொந்தத்தில் விவசாயம் செய்து கொள்வதற்கும், மற்றச் சலுகைகளும் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என நினைக்கின்றனர்.

திருமதிகேலூர்
8—1—58
எஸ். நாகராஜன்

'உன் மகளை நரபலியாகத் தர வேண்டும். அப்போதுதான், கன்னித் தெய்வமான அர்தெமிஸ் நீ செய்த குற்றத்தை மன்னிப்பாள்' என்றான் பூசாரி கால்சாஸ்.

'தெய்வத்தின் கட்டளை. நாம் என்ன செய்ய முடியும்? அர்தெமிஸின் கோபத்தினால்தான் நம்முடைய படைகள் இங்கே ஆலிஸ் துறைமுகத்தில் முடங்கிக் கிடக்கின்றன. அந்தக் கோபத்தைத்





தந்தையும் மகளும்

பேராசிரியர் அ. சீநிவாசராகவன்



தணித்துத்தானே ஆகவேண்டும். வேறு வழி ஏது?' என்று கை விரித்தனர் படைத்தலைவர்கள்.

என்ன செய்வான் அரசன் அகமெம்னன்? அவன் மனத்திலே மூன்று உணர்ச்சிகள் போராடின; ஒன்று பயம், தெய்வம் என்ன செய்யுமோ என்ற பீதி; மற்றொன்று கடமை உணர்ச்சி, கிரேக்கர் படைகளைத் தலைமை தாங்கிப் போருக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பு தன்னுடையதாயிற்றே, இதில் தவறலாகாதே என்ற கவலை. மூன்றாவதாக, அன்பு, பெற்ற மகளிடம் தந்தை ஒருவனுக்கு இயற்கையாக உள்ள அளவற்ற வாஞ்சை. என்ன செய்வான் அவன்? பூசாரி கால்சாஸின் இரக்கமற்ற குரலும், தன்னுடன் போருக்குச் செல்லத் துடிக்கும் மற்றைய அரசர்களுடைய முகத்தில் தோன்றிய கவலையும், அகமெம்னனுடைய தந்தை — அன்பைச் சிறிது கட்டிப் போட்டன.

'என் மகளை, இபிஜீனியாவை, இங்கே உடனே வரும்படி நான் சொன்னதாகச் செய்தி அனுப்புங்கள்' என்று கட்டளை இட்டான் அவன்.

இபிஜீனியா அப்போது அந்த ஊரில் இல்லை. மைஸினே என்ற நகரில், தன் தந்தையின் அரண்மனையில், தன் தாயான க்ளிதம்னெஸ்த்ராவோடு அவள் இருந்தாள். அவளுக்கும் அவள் தாய்க்கும் செய்தி சென்றது. 'அர்தெமிஸ் தெய்வத்துக்கு உன் மகளைப் பலியிடப் போகிறேன், அவளை இங்கே வரச்சொல்' என்றால் இபிஜீனியாவின் தாய் கேட்பாளா? எந்தத் தாய்தான் கேட்பாள்? ஆகவே, 'இங்கே இபிஜீனியாவுக்குத் திருமண ஏற்பாடு செய்து வருகிறோம். அக்கில்லிஸ் என்ற வீரனுக்கு அவளை மணம் முடித்துக் கொடுக்கலாம் என்று எண்ணுகிறோம். அவளை உடனே அனுப்பு' என்று பொய் ஒன்றைச் செய்தியாக அனுப்பினார்கள்.

இபிஜீனியா வந்து சேர்ந்தாள். அர்தெமிஸ் தெய்வத்தின் பணியில், கன்னியாகவே வாழ்நாள் முழுவதும் இருந்துவிடலாம் என்று அவள் எண்ணி இருந்தாள். இப்போது, திருமணப் பேச்சு தொடங்கியதும், அவளுக்குச் சிறிது ஏமாற்றம். என்றாலும், தன் தாய் தந்தையரின் விருப்பப்படி நடந்துகொள்வதே சரி என்று தன்னைத் தேற்றிக்கொண்டு, ஆலிஸ் நகருக்கு வந்து சேர்ந்தாள் அந்தப் பேதை.

மந்திராலோசனை சபை மறுபடியும் கூடியது. பழைய முடிவை இப்போது படைத் தலைவர்கள் மாற்ற மாட்டார்களா என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி வீற்றிருந்தான் அரசன் அகமெம்னன். பக்கத்தில் இபிஜீனியா இருந்தாள். பழைய முடிவே அதாவது இபிஜீனியாவை நரபலியாகத் தருவது என்ற முடிவே மறுபடியும் உறுதி செய்

யப் பெற்றது. அரசன் அகமெம்னன் பித்துப் பிடித்தவன்போல அமர்ந்திருந்தான். பூசாரி கால்ஸாஸும், படைத் தலைவர்களும் ஒவ்வொருவராக வெளியே சென்றனர். ஒருவராவது அகமெம்னன் முகத்தைப் பார்க்கத் துணியவில்லை. கவிழ்ந்த தலையோடு வெளியே சென்றனர்.

இபிஜீனியா தன் தந்தையுடன் தனியாக இருப்பதை உணர்ந்தாள். அவனை நெருங்கி, அவனிடம் பேசுகிறாள். தன் உயிருக்காகத் தந்தையோடு மன்றாடத் தொடங்குகிறாள். இந்தக் காட்சியை, லாந்தார்* என்ற ஆங்கிலக் கவிஞன் ஒரு பாடலில் அருமையாகச் சித்திரிக்கிறான். அந்தப் பாடலின் பெயர் 'இபிஜீனியாவும் அகமெம்னனும்'

இபிஜீனியா சிறுமி, கள்ளங்கபடமற்ற கன்னி, உலகைச் சூழ்ந்துள்ள பயத்தையும், தன்னலத்தையும், குரூரத்தையும் உணராதவள். 'கால்சாஸ் கூறியது உண்மையாக இருக்குமா? அர்தெமிஸ் தேவி மனித இரத்தம் சிந்த வேண்டும் என்று கட்டளை இட்டிருப்பாளா? அர்தெமிஸ் கன்னியர் தெய்வமாயிற்றே? அவளுடைய பணியில் வாழ்க்கையைச் செலவிட எண்ணிய பேதை ஒருத்தியின் இரத்தத்தால் தன்னுடைய பலிபீடம் நனைய வேண்டும் என்று அர்தெமிஸ் விரும்பி இருப்பாளா? ஒரு சமயம், தெய்வத்தின் குரலைக் கால்சாஸ் சரியாகப் புரிந்து கொள்ள வில்லையோ?' இப்படியாக எண்ணுகிறாள் இபிஜீனியா. இதைத் தந்தையிடம் சொல்கிறாள். இங்கிருந்து தொடங்குகிறது பாடல்!

அப்பா!
சின்னஞ் சிறுமி நான், மகிழ்ச்சி நிரம்பிய
சிறுமி.
கால்சாஸ் பக்தி உடையவர் தான்
என்றாலும், இறைவி பேசியது
தெளிவாக அவர் காதில் விழுந்திருக்குமா?
ஏது, எனக்குத் தோன்ற வில்லை.
முதுமையில், புலன்கள் மங்குகின்றன.
என் செவியில், என் குரல் அவளுக்கு
நன்றாய்த் தெரியும்,
அவள் கூட,.......நான் அருகில் அமர்ந்து,
என் பேச்சை அவள் கவனிக்க வேண்டும்
என்பதற்காக
அவள் அருகிலே நான் அமர்ந்து,
என்னிரு கைகளையும் அவள் முழங்காலில்
ஊன்றி,
அடிக்கொரு தரம் அவளைத் தட்டித் தட்டி,
அவள் முகத்தைப் பார்த்தபடி பேசுவேன்.
அவளும் என் முகத்தை நோக்கி இருப்பாள்.
அப்போது கூட
நான் ஒன்று சொன்னால் வேறொன்று அவள்
காதில் விழுமே!
அப்படியானால், எங்கோ நெடுந்தொலைவி
லிருந்து,
ஒலிம்பஸ் நெடுமுடியிலிருந்து,
அர்தெமிஸ் பேசியது, அவள் பேசியதில்
ஒரு சொல்,
தவறுகக் கால்சாஸின் காதில் விழுந்திருக்க
லாம், இல்லையா?

இந்தப் பேச்சில் இபிஜீனியாவின் குழந்தை உள்ளம் தெரிகிறது. தெய்வம் எங்கேயோ நெடுந்தூரத்தில் இருக்கிறது என்று எண்ணுவதும், தெய்வத்தின் குரலைக் கேட்பது, உலக ஒலிகளைக் கேட்கும் இந்தக் காதினால்தான் என்று நினைப்பதும் குழந்தை மனத்துக்கே முடியும். 'என் உயிரைக் காப்பாற்றுங்கள்' என்று பய வெறியிலே இபிஜீனியா தொடங்கவில்லை. ஆனால் அதுதான், தன் உயிரைக் காப்பதுதான், அவளுடைய எண்ணம். ஆனால் அதை நேரடியாக இங்கே சொல்லவில்லை. அதை நோக்கி, தயங்கித் தயங்கி, தந்தையின் அன்பில் நம்பிக்கையோடு, இபிஜீனியாவின் பேச்சு தவழ்ந்து செல்கிறது.

தந்தை அகமெம்னனைத் திரும்பிப் பார்க்கிறோம். பேதை இபிஜீனியாவின்

* Walter Savage Landor.

பேச்சு அவள் உள்ளத்தைத் தொட்டிருக்க வேண்டுமே!

மகளுடைய தலை மேல்
கண்ணீர் பெருகி ஓடிய தன் முகத்தைச்
சாய்த்தான் தந்தை. ஆனால்...அரசன்,
மக்களின் தலைவன், அவன் பேச வில்லை.

அகமெம்னன் மனத்திலே நடைபெறும் போராட்டம் இபிஜீனியாவுக்குப் புலப்படவில்லை. தந்தை பேசாமல் இருப்பது அவளுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அவள் பேசுகிறாள்:

'ஏன், அப்பா, வாய் திறக்க வில்லை?
நான் சொல்வது காதில் விழவில்லையா?
என் பேச்சு என்றால் ஆசையோடு
கேட்பீர்களே!
கூட்டிலிருந்து, அங்கே நிறைந்த சிறகும்
கூளமும்
குரலைத் தணிக்க, பறவைகள் பிழற்றும்
போது,
பொருளற்ற அந்தக் குரலோடு குரலாய்
என் மழலையைக் கேட்பதற்காக
என்னை எழுப்பிப் பேச வைப்பீர்களே!'

இதைக் கேட்டும் உருகாத தந்தை இருப்பாளு? என்ன செய்கிறான் அகமெம்னன்?

அப்போதும் அரசன் ஒன்றும் பேசவில்லை.
மெல்ல, தன் கையால், மகளைச் சிறிது
விலக்கித் தள்ளினான்.
அவன் பேசாதது கூட இல்லை,
சாவு நெருங்குவதைக் கண்டாளே, அதுவும்
இல்லை,
இப்படி, தன் தந்தை தன்னை ஒதுக்கியது
தான்,
கையால் மெல்லத் தள்ளி விட்டது தான்,
அவள் விழியைக் கண்ணீரால் நிறைத்தது.
பெரு மூச்சுடன் பேசினாள்:
'என்னென்னவோ எண்ணினேன்.
அருளுடையாள் அர்தெமிஸின் பலி பீடத்தை
கன்னி என் குருதியால் கறைப்படுத்துவேன்
என்று
எண்ணியதே இல்லை.
என் கூந்தலை, காணிக்கையாக,
அவள் பீடத்தில் இடவே எண்ணினேன்
ஆனால்.........பிறகு.........'

பிறகு, தன் தாய் தந்தையரின் விருப்பத்தின்படி, அர்தெமிஸின் கோயிலில் கன்னியாக வாழும் நிலைமைக்கைவிட்டு, திருமணத்தின் தெய்வமான ஹைமனைத் தொழுது, அவன் அருள்பெற்று, இல்லற இன்பங்களைப் பெறலாம் என்று எண்ணிய கதையை இபிஜீனியா சொல்கிறாள். சொல்லிக் கொண்டு வரும் போதே, தன் எண்ணமெல்லாம் கானல் பரிபவம் அவள் நெஞ்சைப் பிய்க்கிறது. தன் தந்தையை இனி காண முடியாது, சாவு நெருங்குகிறது, ஐயோ, சாகுமுன் தந்தையின் அன்பும் செத்து விட்டது என்பதை உணர வேண்டுமா? இப்படியா இருந்தது தலைவிதி, என்று இபிஜீனியா துடிக்கிறாள்.

தந்தையின் அன்பு சாகவில்லை. அது கடமை உணர்ச்சியால் விலங்கிடப்பட்டிருக்கிறது. அகமெம்னன் தன் செல்வ மகளை அருகிலே அழைத்து அணைத்துக் கொள்கிறான். அவள் தலைக்கு மேலே உயர்ந்து நிற்கும் அவன் சிரம் தாழ்கிறது. நெஞ்சின் ஆழத்திலிருந்து, இயற்கைப் பாசம் உடைத்துக் கொண்டு பாய்கிறது, பெருமூச்சாய், கண்ணீராய். என்றாலும் அவன் வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. அவன் அன்பு சிறைப்பட்டே கிடக்கிறது, செயற்படவில்லை.

இபிஜீனியா பார்த்தாள். தந்தையின் மௌனம், நெருங்கும் சாவை அவளுக்கு உணர்த்தியது. கண நேரத்தில், அவள் வளர்ந்தாள்; கன்னிப் பருவத்தில் கவலையற்றுக் களித்து நின்ற அந்தப் பேதை, ஒரு கணத்தில், உலகின் தவிர்க்க முடியாத கொடுமையை உணர்ந்தாள். என்றாலும், தான் சாக வேண்டும் என்று தன்னலத்திலும் பயத்திலும் எழுந்த தீர்ப்பை மாற்ற முடியாதா என்று கடைசியாக ஒரு வார்த்தை பேசுகிறாள்:

அப்பா,
கப்பல்கள் நகரவில்லை என்பதுதானே உங்கள்
கவலை?
தெய்வங்களின் காதில் உங்கள் முறையீடு
விழவில்லை
என்பதுதானே உங்கள் ஏக்கம்?'
பலி பீடத்தில், வாளால் வெட்டுண்டு நான்
வீழ்ந்தால்
உங்களுக்காக, தெய்வத்திடம் முறையிடும்
ஒரு குரல் அல்லவா அடங்கும்?
தன் அன்புத் தந்தையின் நலனுக்காக,
வெற்றிக்காக,
மன்றாடும் மகளின் முறையீட்டை விட
உயர்ந்த பிரார்த்தனை, உருக்கமான வேண்டு
கோள்,
வேறொன்று உண்டா?

அகமெம்னன் சொல்லொணாத வேதனையில் ஆழ்கிறான். அப்போதும் அவன் பேச வில்லை. நீண்ட பொருமல் ஒன்று அவன் உடலையும் உள்ளத்தையும் அசைக்கிறது. ஆனால் அவன் உறுதியை அசைக்க முடியவில்லை.

கிழப் பூசாரி ஒருவன் உள்ளே வருகிறான், நிழல்போல், வந்து, இபிஜீனியாவின் கரத்தைப் பற்றுகிறான். அவன் கண்ணில் இரக்கமற்ற நிச்சலம். இதை நிமிர்ந்து பார்க்கிறாள் இபிஜீனியா, திரும்புகிறாள். தந்தையைப் பார்க்கிறாள்.

'அப்பா, இனி வருந்த வேண்டாம், கப்பல்கள் இனி கடலைக் கடக்கலாம்' என்ற சொற்களோடு சாவை நோக்கி, தீரத்துடன் நடக்கிறாள் இபிஜீனியா. இதோடு பாடல் முடிகிறது.

மாதர்குல திலகங்கள்



ஸ்ரீமதி பெக்

மாகாணம் பற்று மக்களை என்ன பாடுபடுத்தும் என்பதைச் சமீபத்தில் பார்த்து வந்தோம். மொழிப் பற்று என்ன பாடுபடுத்தி வருகிறது என்பதைப் பார்த்து வருகிறோம்!

சொந்த மாகாணம், சொந்த மொழி, பிறந்த பொன் நாடு யாவற்றையும் துறந்து, பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு இப்பால் வேறொரு நாட்டில், ஏழை எளிய மக்களிடையே வாழ்ந்து அவர்கள் வளர்ச்சிக்காகவே பாடுபடுவது என்பது யாராலும் கனவிலும் நினைத்துப் பார்க்கக் கூடிய காரியமா? ஆனால் அத்தகைய அதிசயம் நம் கண் எதிரே நடைபெற்றிருக்கிறது!

அமெரிக்க நாட்டில் தோன்றியவர்கள் பெக் தம்பதிகள். ஸ்ரீமான் பெக் உடற்பயிற்சித் துறையில் தேர்ச்சி பெற்றிருந்தார். ஒய். எம். ஸி. ஏ. சங்கத்திலும் இருந்தார். ஒய். எம். ஸி. ஏ. யினர் ஸ்ரீமான் பெக் அவர்களை, சென்னை ஒய். எம். ஸி. ஏ. சங்கத்தின் உடற்பயிற்சி போதகராகப் பணியாற்றும்படி அனுப்பி வைத்தார்கள். 1918-ல் சென்னைக்கு வந்தவர், சென்னையையே தம் தாயகமாகக் கொண்டு பணி புரியத் தொடங்கினர். அதன் பயனாக சைதாப்பேட்டையில் சென்னை சர்க்காரிடமிருந்து, மிக விஸ்தாரமான இடத்தைப் பெற்று உடற்பயிற்சிக் கல்லூரி நிறுவினார். இந்தக் கல்லூரிக்கு அகில இந்தியாவிலிருந்தும் மாணவர்கள் வருவார்கள். இந்தியா முழுவதற்கும் இது ஒன்றே அத்தகைய கல்லூரி. அதனால் சென்னையின் புகழ் விரிவடைந்தது.

மகாகவி பாரதியார் சொன்னதுபோல்; கொண்ட கணவன், எடுத்த காரியம் யாவினும் கை கொடுத்து உதவியவர் ஸ்ரீமதி பெக். அதனால் இந்தக் கல்லூரியைப் பற்றி நினைப்பவர்கள் யாரும் ஸ்ரீமான் பெக் அவர்களுடைய பணியைப் பற்றி மட்டும் நினைப்பதில்லை; ஸ்ரீமதி பெக்கையும் சேர்த்து நினைப்பார்கள். இந்த மாபெரும் கல்லூரி உருவாவதற்கு எப்படி ஸ்ரீமதி பெக மிகுந்த மகிழ்ச்சியோடு, தமது கணவருடன் சேர்ந்து பாடுபட்டார் என்று நினைத்து நினைத்து வியப்பார்கள்.

உடற் பயிற்சி விஷயம் ஆடவருக்கு மட்டும் ஏற்பட்ட விஷயமல்ல. பெண்களுக்கும் உரிய விஷயம். பெண்களுக்கும் பயிற்சி அளிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்ட போது, இந்தப் பணியை ஸ்ரீமதி பெக் ஏற்றுக் கொண்டார்! அவர்தான் இக்கல்லூரியின் முதல் உடற்பயிற்சி ஆசிரியை!

இப்படிப் பல துறைகளிலும் தமது கணவருக்குத் துணையாக இருந்த ஸ்ரீமதி பெக் 1943ம் ஆண்டு தம் கணவரை இழந்தார். ஆனாலும் அவர் தம் தாய்நாட்டுக்குத் திரும்பிப்போக விரும்பவில்லை. அத்துடன் தமது கணவருடன் சேர்ந்து வளர்த்த ஸ்தாபனத்துடனேயே ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணவில்லை! அதைவிட்டு வெளியேறி வேளச்சேரி என்ற கிராமத்தில் அழகான பண்ணை வைத்து நடத்தி வருகிறார். இப்பொழுது சென்னையை விட்டுப் பதினறு மைல்களுக்கப்பால், திருவான்மியூரிலிருந்து ஆறு மைல் தூரத்தில் மனித சஞ்சாரமற்ற இடத்தில் அழகிய ஏரியின் கரையில் ஒரு இனிய வீடு கட்டிக் கொண்டு அமைதியான சூழ்நிலையில் வாழ்கிறார். அந்த வீட்டைக் கட்டிமுடிப்பதற்கு ரூ 60,000 ஆகும் என்றார்களாம். ரூபாய் இருபதினாயிரத்தில் கட்டி முடித்திருக்கிறார்! அந்த அழகிய எளிய வீட்டைப் பார்ப்பதற்கென்றே தினம் பலர் அங்கு வருகிறார்களாம்! ஸ்ரீமதி பெக் சிறந்த கலையுணர்ச்சி பெற்றவர். இதை அவர் தமது இல்லத்தை அழகுபடுத்திய முறையிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். அதை விட அவர், அகல் விளக்குகள் ஏற்றிக் கார்த்திகை விழா கொண்டாடியதிலிருந்து அவர் நம்முடன் எவ்வளவு ஒட்டிப் போய் விட்டார் என்பது தெரிந்தது!

தற்சமயம், சிம்ஸன் குரூப் கம்பெனி தொழிலாளர்களின் க்ஷேமநலப் பாதுகாப்பு அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்! தொழிலாளர்களுடன் தொழிலாளியாக உற்சாகமும் ஊக்கமும் ஊட்டிக் கொண்டு அவர் பணி செய்யும் காட்சி அரிய காட்சி!


இவ்விதம் எங்கேயோ கடல் கடந்து பல மைல்களுக்கு அப்பால் பிறந்த ஒரு அம்மையார், தமிழ் நாட்டையும் தமிழ் மக்களையும் நேசித்துப் பணி புரிகிறார் என்றால் அவரல்லவோ மாதர்குல திலகம்!







1. திரு வி. சேதுராமய்யா, திரு ஆர். கே. வெங்கட்ராம சாஸ்திரி முதலியோர் சங்கீத கலாநிதி திரு செளடையாவுக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினர். மயிலாப்பூர் சனிவார மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவுக்கு முசிரி திரு சுப்பிரமணிய ஐயர் தலைமை வகித்தார். 2. ஜனவரி நாலாந் தேதி ராஜா அண்ணாமலைபுரம் சங்கத்தின் சார்பில் மதுரை திரு என். கிருஷ்ணன் அவர்களின் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. இந்தக் கச்சேரிக்குத் திரு க. சந்தானம் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். 3. சென்ற மாதம் 30-ந் தேதி தஞ்சை ஸ்ரீ லட்சுமி சங்கீத வித்யாலயத்தின் ஆதரவில் திருப்பாவை திருவெம்பாவை இசை விழா நடைபெற்றது. விழாவுக்குக் கோட்டுவாத்தியம் திரு பீ. துரையப்ப பாகவதர் தலைமை தாங்கினர்.





1. சென்ற மாதம் 25-ந் தேதி ஹைதராபாத் பாரதி சங்கத்தார் கல்கியின் நினைவு நாளைக் கொண்டாடினார்கள். திருமதி ராஜம் கிருஷ்ணமூர்த்தி எழுதிய கல்கியின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துச் சென்னை கவர்னர் திரு ராஜமன்னார் சிறந்த சொற்பொழிவாற்றினார். சங்கத்தின் உபதலைவர் திரு நரசிம்ம ஐயங்கார் நன்றி கூறினார். 2. சங்க இலக்கியங்களின் புதுமுறைப் பதிப்பு வெளியீடு ஜனவரி முதல் தேதி சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில் நடைபெற்றது. கவர்னர் ராஜமன்னார் தலைமையில் பிரதம நீதிபதி பி. ராஜகோபாலன் நூல்களை அறிமுகப்படுத்தினார். 3. சென்ற மாதம் 22 ந் தேதி கும்பகோணம் ராஜாஜி வாசகசாலைக் குழுவினர் ராஜாஜி ஜெயந்தியைக் கொண்டாடினர். குடந்தை நகரசபைத் தலைவர் வி. ஆர். மூர்த்தி தலைமை தாங்கினார். திருவாளர்கள் திருலோக சீதாராம், எஸ் கே. பாலசுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.



பாவை விளக்கு

அத்தியாயம் 8

உள்மனத்தின் உள்மனம்

உமாவின் அத்தை சௌந்தரத்தம்மாள் உலகம் தெரிந்தவள். அவளுடைய உலகம் அண்டை அயல் வீடுகளும் அண்டை அயல் தெருக்களுமே. மத்தியதர வர்க்கம் என்ற இரண்டுங்கெட்டான் அந்தஸ்தின் கடைசிப் படியில் நின்று கொண்டிருந்தவள், அதன் முதல் படிக்குத் தாவுவதற்கு முழுமூச்சுடன் முயன்று கொண்டிருந்தாள். தன்னுடைய மகளையும் மகனையும் பணமாக்கி அந்தஸ்தின் உச்சிக்குப் போய் விட வேண்டுமென்பது அவளுடைய ஆசை.

வீட்டுக்காரரின் சம்பளமோ, உடன்பிறந்த பேராசிரியர் அனுப்பி வைத்த தொகையோ அவளுக்குக் கட்டிவரவில்லை. தன்னுடைய கௌரவத்தை அந்தத் தெருவாரிடம் நிலைநாட்டிக் கொள்ள அவள் கல்யாண மார்க்கெட்டையே நம்பியிருந்தாள். கல்லூரிப் படிப்பு படித்த பெண்களுக்கு அவள் சுற்றுப்புறத்தில் மாப்பிள்ளைகள் கிடைப்பது அரிது. ஆகவே அவள் தன் மகள் ருக்மிணியை அளவோடு படிக்க வைத்து வீட்டில் அடைத்துக் கொண்டாள். பெரிய இடத்தில் அவளைத் தள்ளி விடுவதற்காக அலமாரியில் பட்டுப் புடவைகளும், பெட்டியில் தங்கம்-வைரம் நகைகளும் குட்டி போடத் தொடங்கின. மாப்பிள்ளை குறைந்த பட்சம் சீமையில் படித்துத் திரும்பிய ஒரு 'கோட்டு - சூட்டு'க்காரனாக இருக்க வேண்டும்; அல்லது படிப்பு வாசனை இல்லாத பத்து லட்சத்தின் வாரிசாக இருக்க வேண்டும். அவனுக்கு நான்கு இலக்கமாவது மாத வருமானம் அல்லது ஏழு இலக்கமாவது சொத்து மதிப்பு.

மகன் பாலு இன்னும் விற்பனைக்குத் தக்க பொருளாக வளரவில்லை. ஆனால் திட்டம் தயாராகி விட்டது. படித்து முடித்தவுடன் அவனுக்கு ஒரு வேலையும் வாங்கி வைத்து, காரும் வாங்கிக் கொடுத்து, வீடும் எழுதி வைத்தால் — அப்படிச் செய்யும் யாருடைய பெண்ணையும் அவன் எப்படியிருந்தாலும் அவன் கட்டிக் கொள்வான்.

இந்த இரண்டு முயற்சிகளுக்குமான வெளி அலங்காரப் பூச்சு வேலைகளும், பேச்சு வார்த்தைகளும், சௌந்தரத்தம்மாளைப் பொறுத்த மட்டில் உருவாகி விட்டன. போகும் வீடுகளிலெல்லாம் அவள் தன் வாய் என்ற பிரசார பீரங்கியைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்தினாள்: அவர்கள் வீட்டில் கொப்பளிப்பதெல்லாம் பன்னீர், துடைப்பதெல்லாம் பாதாம்கீர், அழிகிற பணத்துக்கோ கணக்கு வழக்கு இல்லை. அவர்கள்





வீட்டில் சம்பந்தம் செய்து கொள்வதற்கு எந்த அதிர்ஷ்டசாலிகள் கொடுத்து வைத்திருக்கிறார்களோ! தனிகாசலம் அவள் குடியிருக்கும் வீட்டில் தானும் குடியிருப்பது துரதிர்ஷ்டம் என்று நினைத்துக் கொண்டான். அவன் அடித்துக் கொண்ட பெருமையில் தன் மனைவியும் தாயாருமே மயங்கிப் போய் விடுவார்கள் போல் தோன்றியது. 'குடிக்கக் கூழ் இல்லாவிட்டாலும் கொப்பளிக்கப் பன்னீர் கொண்டு வா!' என்று கௌரி தன்னிடம் சொல்லாதிருக்க வேண்டுமே? கல்யாணி அம்மாளே அடிக்கடி தன் கணவர் அந்தக் காலத்தில் வாழ்ந்த வாழ்வைப் பேச ஆரம்பித்து விட்டாள். பிள்ளைத்தாய்ச்சி என்ற சாக்கில் தன் மருமகளின் அசட்டுத்தனமான ஆசைகளை மறுக்கவில்லை. பாங்கியில் போட்ட பணமும் வேகமாகவே கரைந்து வந்தது.

உமாவைப் பற்றிச் சௌந்தரத்தம்மாளுக்கு எவ்வித அக்கறையும் இடையாது. தலையிடாக் கொள்கையைத் தாராளமாகக் கடைப்பிடித்தாள். உமா அந்த வீட்டில் இருந்ததால சகோதரர் பணம் அனுப்பினர். அந்த வீட்டைத் தன் வீடு என்று நாலுபேரிடம் சொல்லிக்கொள்ளமுடிந்தது. அவளுக்குக் கல்யாணம் காட்சி எதற்காக? கிடைத்த உத்தியோகத்தைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கட்டுமே! கல்யாணப் பேச்சை உமா விரும்பாததால் அது அவளுக்கொரு நல்ல சாக்காகப் போய் விட்டது. ''இந்தக் காலத்துப் பெண் என் பேச்சைக் கேட்கவா போகிறாள்?''

தனிகாசலம் முதல் வேலையாகத் தன்னுடைய கல்யாணக் கடனைப் பாட்டி கொடுத்த பணத்திலிருந்து அடைத்தான். வட்டியும் முதலுமாகத் தேவகிக்கு அனுப்பிவைத்து நீண்டதொரு நன்றிக்





கடிதம் எழுதினான். பணத்தை எந்தக் காரணம் கொண்டும் அவள் பெற்றுக்கொள்ள மறுக்கக் கூடாது. அது அவனுக்குப் பிடிக்காது.

பணத்தை வாங்கிக் கொண்டு தேவகி அவனுக்குச் சுருக்கமாகப் பதில் போட்டிருந்தாள் :

"நான் எதிர்பார்த்தபடி நீ நடந்து கொண்டிருக்கிறாய். இந்தப் பணம் எனக்கு இப்போதும், எப்போதும் தேவையில்லை. நான் ஒற்றைக் கட்டை. நீ குடும்பத்தின் தலைவன். இது உனக்கு உதவியாக இருந்திருக்கும். உன் பாட்டி வேறு, நான் வேறு என்று நினைத்து இதனால் என்னைப் பிரித்துக் காட்டி விட்டாய். எனக்கும் 'கடன்' என்ற பெயர் இருந்ததால் அதை நான் வாங்கிக் கொள்கிறேன். நானும் உனக்குக் கடன் கொடுக்க வேண்டியிருக்கிறது. பணத்தினால் தீர்க்க முடியாத கடன் அது. நீ அதை உணரும் காலம் வர வேண்டும்.

கௌரியின் பிரசவத்தை எங்கே வைத்துக் கொள்வதாக உத்தேசம்? சென்னையிலா? பொன்வயலிலா? எங்கே யிருந்தாலும் சரி; அந்தச் சமயத்தில் நான் அவள் பக்கத்தில் இருக்க வேண்டும். எனக்கு எழுது! நான் வருகிறேன். கௌரி, உமா, அம்மா எல்லாருக்கும் என்னுடைய அன்பு. இங்கே அண்ணா அண்ணி, பையன் யாவரும் சுகம்.

உன் அன்புள்ள,

தேவகி

கடிதத்தைப் பல முறை படித்து விட்டுத் தாயாரிடம் கொடுத்தான் தணிகாசலம். பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டதற்காக வேதனைப்படும் மனம் கூட ஒன்று இருக்கிறதே! மனிதர்களிடம் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்கு அவனுக்கு ஒரே ஒரு வழிதான் தெரிந்தது; அவர்களுடைய வெள்ளை மனத்தை வெள்ளைக் காகிதத்தில் எழுதி விடுவது......

கௌரிக்கு அப்போது ஏழு மாதம். பிரசவத்தைச் சென்னையில் வைத்துக் கொள்வதென்றும், அதற்காகப் பாட்டியும் அத்தையும் வருவதென்றும் ஏற்பாடு இப்போது தேவகியும் இங்கே வரப் போகிறாள். ஒரு குழந்தையை வரவேற்பதற்கு ஒன்பது பெண்கள்!


"இப்போதெல்லாம் உமா என்னைக் கேலி செய்து உயிரை வாங்குகிறாள்!" என்று பெருமையுடன் சிணுங்கி விடடுப் போனாள் கௌரி. 'உமாவுக்கு வாழ்க்கையே கேலி, பரிகாசம், வம்பு, வீம்பு தானே!' என்று நினைத்துக்கொண்டான் அவன்.

குடும்ப வாழ்க்கையைப் பற்றி உமா அரிச்சுவடி கூடப் படிக்கவில்லை. அவள் படித்துப் பட்டம் பெற்றது பெண்கள் கல்லூரியாக இருந்தாலும், அதில் அப்போது ஆண்களுக்குள்ள அதே பாடத்

திட்டந்தான். பெண்களுக்கு உத்தியோகம் பார்க்கப் படிப்புச் சொல்லிக் கொடுத்தார்களே தவிர, குடும்பம் நடத்த ஒன்றும் சொல்லித் தரவில்லை. வீட்டில் கற்றுக் கொள்ளும் அனுபவமும் வீணாகி, பெண்மையின் இயற்கைக்கு ஒவ்வாத மேல் நாட்டுச் சரக்குகளை அங்கே இறக்குமதி செய்தார்கள்.

'ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானந்தான். ஆனால் ஆண் வேறு; பெண் வேறு. வாழ்க்கையின் ஆணிவேர் பெண்; வெளியில் படரும் ஆலமரம் ஆண். ஒரே உடையை மாட்டி விடுவது போல் ஒரே மாதிரியான கல்வித் திட்டம்!'

தணிகாசலம் உமாவின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு நாற்காலியில் சாய்ந்து கிடந்தான். நாவல் வளர்ந்து கொண்டிருந்தது. முற்பகலில் எழுத வேண்டிய பகுதி முடிந்து விட்டது. பிற்பகல் எழுத வேண்டிய பகுதி மனக் கருவில் உருவாகித் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தது. கௌரியின் கருவில் புரண்டு கொடுத்து வலி ஏற்படுத்திய சிசுவைப் போல.



நாவல் வளர்ந்து கொண்டுதான் இருந்தது. பரிமாறிய உணவு இலைக்கு வந்தவுடன் சாப்பிட உட்காருகிறவர்கள் சமையல் கட்டைத் திரும்பிப் பார்ப்பதில்லை. அழகான படங்களுடன் அச்சுத் தாளில் கதை படிப்பவர்கள் அது உருவாகும் விதத்தை நினைத்துத் தொல்லைப் படுவதில்லை. அப்படி இருப்பதும் நல்லது தான்! ரிஷி மூலம், நதி மூலம் ஆராயக் கூடாதென்று சொல்வதைப் போலக் கதை மூலமும் ஆராயக் கூடாதுதான். ஆனால் இது தணிகாசலத்தின் வாழ்க்கையாயிற்றே! எப்படி அவனால் அதை விட்டுவிட முடியும்?

எழுத்தாளனின் மூளைக் குழப்பத்தின் தெளிந்த வடிகால் அவன் எழுதும் எழுத்து: அவனுடைய இருதயத்தின் ரத்தச் சாற்றைத் தன் முரட்டுக் கரத்தால் பிழிந்தெடுத்து அவன் கறுப்பு மையாக்குகிறான். ரத்தம், வேர்வை, மூச்சுக் காற்று, எலும்பு, சதை, லட்சியப் பிதற்றல் இன்னும் எத்தனை எத்தனையோ மூலப் பொருள்கள் அவனுடைய உழைப்புக்குப் பின்னே பலியாகி நிற்கின்றன. அவன் கட்டும் மனக்கோட்டையின் மேஸ்திரி அவன்; கொத்தன், சித்தாள், தச்சன், கொல்லன் எல்லாமே அவன்தான்; சுண்ணாம்பும், களிமண்ணும் சேறும், சகதியுமே அவன்தான். அந்த வீட்டில் வாசகர்கள் குடியிருக்கிறார்கள், பாராட்டுகிறார்கள், குற்றம் குறைகள் சொல்லுகிறார்கள்.

உயிரை உறிஞ்சக் கொடுத்த உணர்ச்சியில் தணிகாசலம் பத்துப் பக்கம் எழுதிய பிறகு சோர்ந்து கிடந்தான். கை வலித்தது; தலை கொதித்தது! நெஞ்சு கனத்தது. இந்த நிலையிலும் அவனுடைய இரக்கமற்ற கதாபாத்திரங்கள் உள்ளுக்குள்ளே குதித்துக் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள்; படைப்பவனுக்கே கட்டுப்படாத அடங்காப் பிடாரிகள் அவர்கள்!

கண்களைப் பாதி மூடியும் மூடாமலும் அவன் தன்னுடைய கற்பனையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தான்.

"மாமா!"

மூடிய கண்கள் திறந்தன. எதிரில் உமா நின்று கொண்டிருந்தாள், புன்னகையும் புது முகமுமாக. பாடம் நடத்தி விட்டு வந்த களைப்பின் சுவடுகூட அவளிடம் தென்படவில்லை.

"அடடே! நீயும் வந்து விட்டாயா?"

"வந்து கால் ஓய நிற்கிறேன்; முனிவரின் தவம் கலையவில்லை."

"இவர் பெண்டு - பிள்ளை முனிவர்; கௌரியிடம் போய்க் காப்பி வாங்கிக் கொண்டு வா; உனக்கு எழுதச் சொல்லி வரம் கொடுக்கிறேன்."

காப்பி உள்ளே போனவுடன் நெஞ்சில் சூடு பிறந்தது. உமாவின் முகத்திலிருந்து களைப்பைப் போக்கும் காற்று வீசியது. நாற்காலியிலிருந்து துள்ளி எழுந்து கூண்டுக்குள் அகப்பட்ட புலி போல், கைகளைக் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்கும் அறைக்குள் நடந்தான். நடந்துகொண்டே அவன் கதை சொல்ல, மேசையின் எதிரில் குனிந்து அவள் எழுதத் தொடங்கினாள். சொல்லின் வேகம் பிறந்தது; உமாவின் கைகள் அதற்கு ஈடு கொடுக்கப் பார்த்தன.

கதை எழுதும்போதுள்ள தணிகாசலம் தன்னுடைய கற்பனையின் கையிலுள்ள விளையாட்டுப் பொம்மை. தன்னை மறந்த மனித இயந்திரம். சொற்கள் ஆட்டுவிக்கும்படி ஆடக்கூடிய வெறும் கருவி. கதையின் ஒரு சுவையான கட்டம், நல்ல திருப்பம் அன்றைக்கு அவனை அறியாமல் அவன் வாயிலாக உருவாகிக் கொண்டிருந்தது.

'நிலவொளி பட்டப் பகல்போல் வீசியது! மரங்களில் கவிந்திருந்த இலைக் கூட்டம் ரகசியம் பேசியது; தாமரைக் குளத்தின் கரையோரமாகத் தவளைகள் ராகம் போட்டன; படிக்கட்டில் உட்கார்ந்து உல்லாசமாக அவனுடைய கதாநாயகியும் கதாநாயகனும் உரையாடிக் கொண்டிருந்தார்கள்; தூரத்துக் குயிலோசை அவர்கள் காதில் விழவில்லை.'—எல்லாம் அவனுடைய கள்ளமில்லா வெள்ளை மனத்திரையில்.

உண்மையில் அப்போது அறைக்குள் எரிந்தது மின்விளக்குதான்; வேப்ப மரக் கிளையில் (குயில்களுக்குப் பதிலாக) காக்காய்கள் கத்தின. சிரிப்பை அடக்கிக்கொண்டு உமா எழுதினாள்.

தணிகாசலம் இன்னும் ஒரு படி மேலே போய்க் காதலர்களின் ரகசியப் பேச்சை ஒட்டுக் கேட்டு அப்படி அப்படியே கூறினான். அவர்கள் சிரித்ததையும், சிணுங்கியதையும், பிணங்கியதையும் ஒன்று விடாமல் வர்ணித்தான். அவனுடைய கதையின் முக்கியமான கட்டம் அது. பின்னால் வரும் எதிர் நிகழ்ச்சிகளுக்கு அவன் அவற்றை இப்போதே சொல்லித்தான் ஆகவேண்டும். சிந்திக்கத் தெரிந்த வாசகர்களுக்காக அவன் சொல்லம்புகளை வேகமாக வீசத் தொடங்கினான்.

"நிறுத்துங்கள்!" என்று ஒரு இடி முழக்கம் கேட்டது.

திரும்பிப் பார்த்தான்; உமா என்ற ஒருத்தி அந்த அறைக்குள் தன்னுடைய வலது கையாக இருந்து எழுதுவது அவனுக்கு நினைவில்லை. தடைப்பட்ட கோபத்துடன் நெற்றியைச் சுருக்கினான்.

"என்ன சொன்னீர்கள்?" என்று அதட்டிக் கேட்டாள் உமா.

சொன்னதையே திரும்பவும் சொல்லி விட்டு, நடந்து போய்ச் சன்னலோரமாக நின்று கொண்டு, வான வெளியைக் கூர்ந்து பார்த்தான்.

அவள் அதை எழுதிக் கொண்டே, "என்ன சொன்னீர்கள்?" என்று திரும்பவும் கேட்டாள்.

புரியாமல் கேட்ட கேள்வி இல்லை அது! வேண்டுமென்றே பொங்கும் ஆத்திரத்துடன் கேட்ட கேள்விதான் அது.

அதற்குள் அவனுக்குச் சொன்ன வார்த்தைகள் மறந்து விட்டன. கற்பனை நூலேணியின் உச்சியில் தொங்கியவனுக்கு, அவன் பிடி நூலை அறுத்து, அவனைக் கீழே தள்ளிவிட்டாள். "சொல்லும்போது நினைவு ஒரு பக்கமாய் இருந்தால்தானே?" என்று உறுமிவிட்டு, வேப்பமரத்தைப் பார்த்தபடியே, "முன்னால் எழுதியதைப் படித்துக் காட்டு!" என்று கத்தினான்.

"படிக்க முடியாது!"

"என்ன!" என்று திருப்பினான்.

"ஆமாம்; நீங்கள் சொன்னதை நீங்களே வந்து படித்துப் பாருங்கள்!"

"படிக்கப் போகிறாயா, இல்லையா?"



"முடியாது, முடியாது, முடியாது!" காகிதத்தின் கீழே வைத்து எழுதும் பலகையைச் சுவரில் வேகமாய் எறிந்தாள். எழுதிய காகிதங்கள் மூலைக்கொன்றாய்ப் பறந்தன. நாற்காலி கிரீச்சிட்டது. பெண் புலி ஒன்று உக்கிரத்தோடு அவனைக் கொன்று விடுவது போல் பார்த்துக்கொண்டு நின்றது.

தணிகாசலம் பதறிப் போனான்!

"இதென்ன, பைத்தியமா?"

"யாருக்குப் பைத்தியம்?"

உமாவின் உதடுகள் துடித்தன; முகத்தில் ரத்தம் பாய்ந்தது; கண்களில் பளீர் பளீரென்று மின்னல் வீசியது. "இனிமேல் என்னை எழுதச் சொல்லாதீர்கள்!" என்று கத்தி விட்டு, மாடிப்

படிகளில் இறங்கித் தடதடவென்று கீழே ஓடினாள். இல்லை; பறந்தாள்.

எதற்காக இந்த ஆர்ப்பாட்டம்? இப்போது என்ன நடந்தது? எதற்காகப் பத்திரகாளியாக மாறிவிட்டாள்?

"உமா!...உமா...!" என்று அவன் பின்னால் ஓடினான்; காலின் கீழ் ஒரு தாவுக்கு மூன்று படிகள். "உனக்கு என்ன வந்தது? சொல்லித் தொலை."

நின்று திரும்பிப் பார்த்தாள் உமா. பார்வையா அது!

"சொல்லப் போகிறாயா? உன் கழுத்தை நெரித்துக் கொல்லட்டுமா? கோபம் வந்தால் நான் மனிதனில்லை!"

"எப்போதுதான் நீங்கள் மனிதர்?"

கை பரபரத்தது தணிகாசலத்துக்கு. அவள் ஓர் அழகான இளம் பெண், எம். ஏ. படித்தவள், பெரிய மனிதரின் மகள், தன்னுடைய முதல் ரசிகை என்பதெல்லாம் அவனுக்கு மறந்து விட்டன. எழுத்தென்ற இறைவனோடு ஒன்றிப்போன பக்தனை, எழுத்தென்ற காதலியோடு கலக்கப்போன பித்தனை, எழுத்தென்ற காலனோடு இணையப் போன உயிர் மூச்சை அவள் தடுத்து நிறுத்தி விட்டாள்! பெண் என்ற மாயப் பிசாசு தன்னை மடக்கி நிறுத்திய தோடல்லாமல், 'மனிதனா?' என்றும் கேட்கிறது; என்ன அகந்தை அவளுக்கு...

அவளை எட்டிப் பிடித்துச் கவரில் மோதிக் காரணம் கேட்க வேண்டு மென்ற ஆத்திரம் அவனுக்கு. அவள் அருகில் நெருங்கினான். பயங்கரமாய் நெருங்கிச் சென்றான்.

"போய் நீங்கள் கூறியதை ஒருமுறை படித்துப் பாருங்கள்!"

"என்ன?"

"படித்துப் பார்த்து விட்டு, 'ஏன்?' என்று கேளுங்கள்."

ஓட்டோடியும் திரும்பி வந்து காற்றில் பறந்த காகிதங்களை ஒன்றாய்ச் சேர்த்து இணைத்து வைத்தான். கடைசியாகத் தான் சொன்ன வார்த்தைகளை அவள் எழுதியிருந்தாள். அதுவரையில் மணி மணியாக இருந்த அவளுடைய கையெழுத்து அப்போது கோணலும் மாணலுமாகக் காட்சியளித்தது.

படித்தான்! அவனுக்கு அதில் ஒன்றும் புதுமை தெரியவில்லை. எழுதக்கூடாத, படிக்கக் கூடாத எழுத்துக்கள் அல்ல அவை. அச்சில் அவைகளை உமா படித் திருந்தால் 'ஆஹா! ஓஹோ!' என்று கூறிக் கூத்தாடுவாள்.

அவள் கையெழுத்தின் கோணலையும், அந்த எழுத்துக்களின் பொருளையும் சேர்த்து நினைத்துப் பார்த்தான் தணிகா சலம். இப்போது அவன் கலை உள்ளம் கொண்ட தன்னை மறந்த பித்தனில்லை; அவனுடைய விஞ்ஞான மூளையில் இடி இடித்தது! மின்னல் மின்னியது! புயல் வீசிற்று. ஆ! ஐயோ, உமா!......

அவன் திரும்பவும் மாடிப் படியை நோக்கி வேகமாக ஓடினான்.

அத்தியாயம் 9

புயலுக்குப் பின்

தங்கப் பேழை என்றோ, குப்பைக் கூடையென்றோ, சமயத்துக்குத் தகுந்த படி மனித மனத்தை எப்படி வேண்டு மானாலும் ஒப்பிட்டுக் கூறலாம். தேவை யான பொருள்களையும் தேவையற்ற பொருள்களையும் அது தனக்குள்ளே போட்டு மூடி வைத்துக் கொள்ளுகிறது. இடம், காலம், ஏவலுக்குத் தக்கபடி அந்த மனச் சுரங்கத்தின் அடித்தளத்தி லிருந்து சிற்சில பொருள்கள் சிற்சில சமயங்களில் மேல்தளத்துக்கு மிதந்து வருகின்றன. அப்படி வரும்போதே அவை பலவித மாறுதல்களுக்கு உட் பட்டு, வெவ்வேறு தோற்றங்களில் நினைவு-சொல்-செயலாக வெளிப்படுகின் றன. மனத்தின் சொந்தக்காரருக்கே, அல்லது சொந்தக் காரிக்கே, இந்த விசித்திர மாறுதல்கள் புலனாவதில்லை.

தணிகாசலம் என்றோ ஒருநாள் இரவு புதுப்பட்டிக் குளத்தங்கரையில், செங் கமலத்தின் அருகில் இருந்து கொண்டு, அவளது நடனமும் அழகும் கொடுத்த போதையில் மயங்கிப் பிதற்றின னல்லவா? அவளும் பதிலுக்கு அவனிடம் உளறினாள் அல்லவா? — அன்றைக்கு அவர்கள் இருவரும் காதல் போதையில் பேசிக் கொண்ட பேச்சு, தணிகாசலத் துக்கே தெரியாமல், அவன் சொல்லி வந்த கதையில் பிரதிபலித்தன.

உமாவின் ஆத்திரத்துக்கு உள்ளான வரிகள் மிக மிகச் சாதாரணமானவை. காட்சியிலே கோளாறு ஒன்றுமில்லை; அந்தக் காட்சியைக் கண்ட கண்களிலே தான் கோளாறு இருந்தது.

கதாநாயகன் கூறினான்:

"நீ என்னை எங்கேயோ கோபுரத்தின் உச்சியில் தூக்கி வைத்துவிட்டாய். என் உயிர் உன்னுடைய உயிரின் ஒவ்வொரு அணுவிலும் ஒட்டிக் கொண்டு ஊசலாடு கிறது. மென்மையே தெரியாத என்

கல் மனத்தை நீ கரைத்துக் குழைத்தெடுத்து உன் கண்களிலே வண்ண மையாகத் தீட்டிக் கொண்டாய்.''

கதாநாயகி பதிலளித்தாள் :

'' நீங்கள் இப்போது என்னை எங்கெல்லாமோ வான வெளியில் தூக்கிக் கொண்டு பறந்து செல்வது போலிருக்கிறது. இந்த ஒரு நாளை, இந்த இன்ப நன்னாளை, என்னால் என் வாழ்நாளில் என்றைக்கும் மறக்கவே முடியாது.''



தணிகாசலம் தன்னுடைய கதாபாத்திரங்களைப் பின்பற்றி இந்தக் கதைப் பகுதியைச் சொல்லும்போது அவனுக்குச் செங்கமலத்தின் நினைவு வரவே இல்லை. என்றைக்கோ அவன் வாழ்க்கையில் பெற்ற அநுபவச் சிறு துளி, கனவாக, கற்பனையாக, (பொய்யுரை என்ற அழகான போர்வையோடு) வெளிப்பட்டு விட்டது.

உமாவுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? மேற்குக் கடலில் காற்றடித்தால் கிழக்குக் கடல் கொந்தளித்து ஏன் ஆர்ப்பாட்டம் செய்கிறது? தணிகாசலம் தான் கூறிய வரிகளையே ஊன்றிப் படித்து யோசனை செய்தான். தான் எழுதிய முதல் சிறுகதையையும் எடுத்துப் புரட்டிப் பார்த்தான். இதே வரிகள் அதிலும் வந்திருந்தன! அந்த முதல் கதையை உமா பத்து முறையாவது படித்து மனப்பாடம் செய்திருப்பாள். பிறகு ஏன் இந்த வெறியாட்டம்?

ஏன்?

இரண்டையும் அவளிடம் ஒப்பிட்டுக் காட்ட வேண்டுமென்பதற்காகத்தான் அவசரமாக அவன் அவளைத் தேடிக் கொண்டு ஓடினான். ஆனால் அவளை அந்த மாடிப்படியின் திருப்பத்தில் காணவில்லை. கீழே இறங்கிப் போய் வீட்டில் எட்டிப் பார்த்தான். அதற்குள் அவள் எங்கோ தன்னை மறைத்துக் கொண்டு விட்டாள். தணிகாசலத்தின் மனம் மாறியது : 'கேவலம், இந்தச் சிறுமியோடு என்ன பேச்சு வார்த்தை? இவளோடு எதற்குச் சமாதானம்? செய்ததையும் செய்து விட்டு யார் மேல் கோபப்படுகிறான்?'

அவனுடைய அறையில் இப்படி ஒரு சிறு புயல் வீசியது. வீட்டின் மறுகோடியிலிருந்த கௌரிக்கோ, கல்யாணி அம்மாளுக்கோ தெரியாது. அவர்கள் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். தணிகாசலம் தன் அறைக்குத் திரும்பி வந்து, எழுதிய காகிதங்களை அடுக்கி வைத்து விட்டு, வெளியில் உலவி வரக் கிளம்பினான். நெஞ்சில் கசப்பு மிகுந்திருந்தது. இனி அவளை எழுதச் சொல்லக் கூடாது. நெருங்கிப் பழகுவதற்கு இடம் கொடுத்தால் இப்படி ஒரு அலட்சியமா? அன்றைக்கு ஒரு நாள் நாகநாதன் காகிதங்களைத் தூக்கி எறிந்தது போலல்லவா இவளும் செய்துவிட்டாள்!

இரவில் கௌரி அவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தபடி அவனுடைய காலடியில் உட்கார்ந்திருந்தாள். மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க, நடந்து வந்து சோர்வும் தளர்ச்சியுமாய்க் கைகளை ஊன்றிக் கொண்டு அவள் உட்கார்ந்த காட்சி அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. அவளுடைய கஷ்டத்தைப் பார்த்து அவன் சிரித்தான்.

'' என்ன சிரிக்கிறீர்கள்?''

'பெண்கள் கஷ்டப்படுவதும் சிரமப்படுவதும் ஆண்களுக்காக; ஆண்களை அதிகாரம் செய்வதற்காக!' என்று அவனுக்குச் சொல்லத் தோன்றியது. உமா அவன்மீது எரிந்து விழுந்த கோபம் அவனுக்கு இன்னும் மறக்கவில்லை.

'' என்ன சிரிக்கிறீர்கள்?'' என்று திரும்பவும் கேட்டாள் கௌரி.

'' பயலோ, பெண்ணோ பிறந்து விட்டால், நீயும் என்னை அதிகாரம் செய்வாய்! தாய் என்ற கர்வம் வந்துவிடும்.''

'' அதிகாரத்துக்கு அடங்குகிற ஆண் பிள்ளையைப் பாருங்கள்'' என்று வாய் நிறையச் சிரித்தாள் கௌரி. '' உங்கள் வாயால் பையன் என்று சொல்லுங்கள்; பையன் பிறப்பான்.''

'' அப்படியே பையன் பிறக்கட்டும்! தப்பித் தவறிப் பெண் பிறந்தாலும் அதை ஆண் பிள்ளையாக வளர்ப்போம், உமாவைப் போல!''

உமாவின் நினைவு அவனுக்குத் தூக்கம் வராமல் கெடுத்தது. கீழே தனியாகக்

கெனரியும் உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தாள். வயிற்றில் ஓழுங்கை புரளும்போது பெண்ணுக்கு எப்படித் தூக்கம் வரும்? — தணிகாசலம் அந்த இருட்டு வேளையில் தர்க்க ரீதியாக உமாவின் மனப் போக்கை ஆராய்ச்சி செய்யத் தொடங்கினான்.

மனித உடலைக் கூறு போட்டு, வியாதியைக் கண்டு பிடித்து, நோய் தீர்க்கும் தொழிலை டாக்டர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். மனித மூளையின் சக்திகளைக்கூடக் கண்டு பிடிக்கும் கலையில் சிலருக்குத் தேர்ச்சியுண்டு. எழுத்தாளர்கள் மனத்தைக் கொண்டு தொழில் புரிபவர்கள். ஆதலால், எப்படியோ இயற்கையாகவே அந்தக் கலை அவர்களிடம் குடி புகுந்து விடுகிறது.

தணிகாசலம் உமாவின் உள்ளப் பாங்கை ஆராயத் தொடங்கினான்: வயதான பெண், ஆண்பிள்ளை போல் வளர்ந்தவள், அவள் எழுதிய கவிதைகளில் காதல் தென்படவில்லை. கல்யாணப் பேச்சை வெறுப்பவள், தன்னிடம் சிறிதும் விகற்பமின்றிப் பழகினாள்.

அறையின் மையிருட்டில் உமாவின் உருவம் ஒளி பெற்ற கண்ணாடிச் சிலை போல் தோன்றியது. பழகிய தோஷத்தால் இதுவரை அவள் ஒரு அழகிய பெண் என்பதையே மறந்து விட்டான். முன்பின் அறிமுகமில்லாத ஒருத்தியின் உருவம் இப்படித் தோன்றினால் அதை ஓர் சுந்தர வடிவமென்று அவன் ஒப்புக் கொள்வான்.

மின்னல் பளிச்சிட்டது அவனுடைய தலைக்குள்ளே: அவள் பெண்! - பெண்ணைப் பெண் என்று தெரிந்து கொள்வதற்கு, பாழாய்ப் போன மனோதத்துவம் தேவையாக இருக்கிறது. இந்த விஞ்ஞான யுகத்தில்! - 'பெண் என்பதைதான் தெரிந்து கொண்டது பெரிதில்லை; அவள் தெரிந்து கொண்டாளே, அதுதான் பெரிது.

உள் மனத்தின் உள் மனம் எரிமலையாக வெடித்துத் தன்னைத்தானே காட்டிக் கொள்ளத் துடிக்கிறது. பிறந்ததிலிருந்து பசும் பால் குடித்து வளர்ந்த புலிக் குட்டி என்றைக்குமே பூனைக் குட்டியாக இருப்பதில்லை. என்றைக்காவது தன் பிறந்த இனத்தைத் தெரிந்து கொண்டு விடுகிறது. சூழ்நிலை, சுற்றுப்புறம், கொள்கை, தன்னைத் தானே ஏமாற்றும் தன்மை - இவை என்றுமே நிலைத்து நிற்பதில்லை. உமா தன்னைத் தெரிந்து கொண்டு விட்டாள்!

'எழுதச் சொன்னபோது இயந்திரமாக - வெறும் கருவியாக - இருந்திருக்க வேண்டியதுதானே அவள்? முட்டாள்! ஏன் எழுத்தையும் தன்னையும் இணைத்துப் பார்த்துக் கொள்ளுகிறாள்?

அட, முட்டாளே! எழுத்துத் தொழில் இயந்திரத் தொழில் இல்லையடா, மனித இயந்திரங்களை முடுக்கி விடும் மூல சக்தியடா, தொக்லைப்படுத்தும் மனத்தின் தொல்லைகொடுக்கும் தொழிலடா என்று யார் தணிகாசலத்திடம் சொல்வது?

குடும்பம் சென்னைக்கு வந்த ஒரு வாரத்தில் உமாவையும் அழைத்துக் கொண்டு எல்லோருமாக சர்க்கஸ் ஆட்டம் பார்க்கப் போயிருந்தார்கள். மலையாளத்து யானைகள் வந்து விளையாடின; ஆப்பிரிக்கச் சிங்கம் ஆட்டின் தலைக்கு வாயைப் பிளந்து கொடுத்து விட்டு, அதன் தலையைக் கடிப்பதற்குப் பதிலாக, தன்னுடைய நாக்கில் வழிந்த எச்சிலைத் தானே நக்கிக் கொண்டது; வங்கத்து வரிப் புலி நாய்க்குட்டிக்குக் குனிந்து கொடுத்துத் தன்மேல் சவாரி செய்ய இடம் கொடுத்தது; - பணத்துக்கு அடிமையாகும் மனிதர்கள் தங்களுடைய விருப்பத்துக்கு விரோதமான காரியங்களைச் செய்வது போல.

'மனிதன் மிருகங்களைக் கூடப் பயமுறுத்திக் கோழைகளாக்கி விட்டான்'



என்று முணுமுணுத்தான் தணிகாசலம். உமா பயந்து போய் வெளுத்த முகத்துடன் மூச்சுப் பேச்சற்று அந்தக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மனிதர்கள் ஆட்டம் போட்டபோது விழுந்து விழுந்து கைகொட்டிச் சிரித்து ஆர்ப்பாட்டம் செய்தவள் அப்போது அவள் இருந்த இடம் தெரியவில்லை.

அதற்கு முன்பு கொட்டகையில் கத்தி வீச்சுக் காட்சி ஒன்று நடந்தது. அப்போது உமா நடந்துகொண்ட முறையையும், அன்று மாலை நடந்து கொண்ட விதத்தையும் அவன் ஒப்பிட்டுப் பார்த்தான்: வேடிக்கை, விநோதம், வேதனை எல்லாம் கலந்த காட்சி....

அழகான யுவதி ஒருத்தியை மரப்பலகைக்கு அருகில் நிறுத்தி வைத்து ஆண் பிள்ளை கத்தி வீசும் வழக்கமான நிகழ்ச்சி அது. முதலில் கூரான வெறும் கத்திகள் பாய்ந்தன; அடுத்தாற்போல் நெருப்புப்



பந்தம் சுற்றிய கத்திகள் பாய்ந்தன. அந்தப் பெண் பிள்ளையைச் சுற்றிலும் மிக நெருக்கமாக அவன் நெருப்புக் கத்திகளை வீசினான். அவள் தன் பல் தெரியச் சிரித்துக் கொண்டு நின்றாள்.

'வீல்!' என்று கத்தினாள் உமா.

தணிகாசலமும் மற்றவர்களும் திடுக்கிட்டார்கள். உமா கண்களை மூடிக் கொண்டு நடுங்கினாள். வீடு திரும்பும் வரையில் அவளுக்கு அந்தப் பயம் நீங்கவில்லை. ''நெருப்புக் கத்தி ஒன்று எனக்கு நேரே பாய்ந்து வந்தது!'' என்று சாதித்தாள் அவள்!

உண்மையை அவளுக்கு விளக்கிக் கூறுவதற்குள் தணிகாசலத்தின் பாடு பெரும்பாடு ஆகி விட்டது. ''காட்சியிலே கோளாறில்லை; உன் கண்களும் மனமும் உன்னை ஏமாற்றி விட்டன; ரசிகர்களை வியக்கச் செய்வதற்காக, அவன் அவ்வாறு கத்தி வீசினான். அதை உன் மேல் எறிந்ததாக நீ நினைத்துக் கொண்டு அலறி விட்டாய்.''

கிட்டத்தட்ட அதே கதை இப்போது திரும்பவும் நடந்து விட்டது. அவன் வாசகர்களை நோக்கி வீசிய அந்தச் சொல்லம்புகளில் கூர்மையுமில்லை, நெருப்புமில்லை; மெல்லிய மலர்ச் செண்டுகள் அவை. - இதற்காகவா அவள் அப்படி வெகுண்டெழுந்தாள்? கடவுளே!

பொழுது விடிந்தவுடன், முதல் நாள் விட்டுப் போன இடத்திலிருந்து தொடர்ந்து எழுதினான் தணிகாசலம். கோணல்மாணலாக அவள் எழுதியிருந்த கடைசி வரிகளை அடித்து விட்டுத் திரும்பவும் எழுதிக் கொண்டு போனான். கதைக்குள் மனம் பதிந்தவுடன் மற்ற விவகாரங்கள் மறந்து விட்டன.

உமா ஓசைப் படாமல் அறைக்குள்ளே நுழைந்தாள்.

தணிகாசலம் தலை தூக்கிப் பார்க்கவில்லை; எழுத்து வேகம் தடைப்பட்டது. மனத்துக்குள் கிளம்பிய புகைச்சலை அடக்கிக் கொண்டான். உமா அவனுக்கு நேர் எதிரில் வந்து மேசையைப் பிடித்துக் கொண்டு நின்றாள். அவள் தலையில் சூடியிருந்த முல்லை தன் மணத்தைக் கட்டவிழ்த்து விட்டு அவன் முகத்தைச் சுற்றி வட்டமிட்டது. அப்படியும் அவன் எழுத முயன்றான்.

''மாமா!''

உணர்ச்சியற்ற பார்வையோடு அவன் தலையை உயர்த்தினான். அந்தப் பார்வையில் கோபமுமில்லை; பிரியமும் இல்லை.

''என்ன மாமா, இது!''


கண்களைக் கவனித்தான்; பெண் புலியின் சீற்றத்துக்குப் பதில் அவள் விழிகளில் மானின் மருட்சி தென்பட்டது.

வெகு நேரம் அவள் நின்று கொண்டிருந்தாள்! வெகுநேரம் அவனும் அவளை உணர்ச்சியின்றிப் பார்த்தான்: பார்த்துக் கொண்டிருந்தான்.

''நான்..நான்தான்..தப்புச் செய்து விட்டேன்'' என்று தொண்டை அடைக்கக் கூறினாள் உமா. பிறகு கைக்குட்டையால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள். ''சாயங்காலம் நான் வந்து எழுதிக் கொடுக்கிறேன், மாமா!''

'வேண்டாம்' என்று தலையாட்டினான்.

கேவிக் கேவி அழுதபடி வாயில் துணியை வைத்து அடைத்துக்கொண்டு அவள் அந்த இடத்தை விட்டு மெல்லத் திரும்பி நடந்தாள். (தொடரும்)




அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்


நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும் பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயிலை தடவுங்கள். கூந்தலின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப் படுத்துக.
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில்

நாட்டு வைத்தியம்

ஸ்ரீ ஹரி

44. ஆமவாதம்—உள்ளுக்கு மருந்து

ஆமவாதத்தில் உள்ளுக்குக் கொடுக்கக் கூடிய மருந்துகளை யல்லவா விவரிப்பதாக வாக்களித்தேன்?

உள்ளுக்குக் கொடுக்கும் கஷாயங்களால் தோஷத்துக்குப் பாகம் வரும். மேலுக்கு உபயோகிக்கும் தைலங்கள், கொடுக்கும் ஒத்தடங்கள் - பூச்சுக்கள் ஆகியவை தோஷங்கள் பாகமடையத் துணை புரிகின்றன.

இவ்வுபாயங்களால் பாகமடையும் தோஷங்களைத் தக்க முறையில் சரீரத்தினின்றும் களைய வேண்டியது அவசியம். இதற்காக அவசியமான போதெல்லாம் பேதிக்குக் கொடுக்க வேண்டும்.

இவ்விஷயங்களை விவரிக்கும் முன், ரத்த வாதத்தில் குறிப்பிட்ட பிண்ட தைலத்தின் செய் முறையை விளக்குவதும் அவசியம்.

பிண்ட தைலம்: உள் நரம்பை நீக்கி - மேல் தோலை மட்டும் எடுத்துக்கொண்ட நன்னாரி, மஞ்சிட்டி இவை இரண்டும் வகைக்கு ½ பலம் (1½ தோலா)

இவற்றை அம்மியிலிட்டு வெண்ணெய் போல் அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

பிறகு ½ படி ஜலத்தில் மேற்சொன்ன அரவை (கல்க) மருந்துகளைக் கரைத்து ஒரு பெரிய இரும்புச் சட்டியிலோ உருளியிலோ அல்லது வாய் அகன்ற பாத்திரத்திலோ எடுத்துக் கொள்ளவும்.

ஜலத்துக்குப் பதிலாகச் சீந்தில் கொடியை இடித்துப் பிழிந்த ஜலம் நல்லதென்று சிலரும் சீந்தில் கொடி புளியன் இலை இவற்றை இடித்துப் பிழிந்த ரசம் நல்லதென்று வேறு சிலரும் அரிசி கழுவிய நீரைக் கூட்டிக் கொள்வது நல்லதென்று மற்றும் சிலரும் சொல்கிறார்கள். இது குறிப்பிட்ட நோயாளியின் சரீர தத்துவம், நோயின் நிலை ஆகியவற்றை உத்தேசித்து நிச்சயிக்க வேண்டிய விஷயம். அனுபவமுள்ளவருக்குத்தான் சாத்தியமாகும். மற்றவர்கள் மேற்சொன்ன விதம் ஜலத்தைக் கூட்டிக் கொள்வதே போதுமானதாகும்.

இத்துடன் ½ வீசை நல்லெண்ணெயும் கூட்டி, அடுப்பில் ஏற்றிக் காய்ச்சவும். ஜலம் சுண்டி, கல்கத்திலுள்ள ஈரமும் வற்றி, கல்கத்தை விரலால் உருட்டினால் ஒட்டாமல் திரி போல் வரும் போது, அடுப்பிலிருந்து இறக்கி வடிகட்ட வேண்டும்.

ஜலம் வற்றி, கல்கத்திலுள்ள ஈரம் சுண்டும் போது, எண்ணெய் மிகவும் பொங்கி வரும். எனவே ஆகவே நிலையில் பொங்குவது அதிகமாகிப் பாத்திரத்திலிருந்து எண்ணெயெல்லாம் அடுப்பில் வழிந்து பெரிய ஆபத்து ஏற்படும். கவனமில்லாமல் இருந்தால் கல்கம் அடிப்பிடித்து விடும். ஆகவே தீயை மிகவும் குறைப்பதும் கவனமாக மாறிமாறி வெகு ஜாக்கிரதையுடன் காய்ச்ச வேண்டும். பொறுமை, விழிப்பு, இவ்விரண்டும் இருக்குமானால் சிரமமிராது.

ஒருபாத்திரத்தில் நன்றாய்ப் பொடித்த வெள்ளைக் குங்கிலியம் ½ பலம், சிறு சிறு துண்டுகளாக நறுக்கின தேன்மெழுகு [மஞ்சள் நிறம்] ½ பலம் - இரண்டையும் இட்டு, அதில் மேற்படி தைலத்தை வடிகட்டிக் கொள்ள வேண்டும். கல்கமெல்லாம் வடிகட்டும் துணியில் நின்றுவிடும். சிறிது ஆறினதும் இதைப் பிழிந்து கொள்ளலாம். வடிகட்டும் எண்ணெய் சூடாக இருக்கும்போதே அதைச் சிறிது கரண்டியால் கலக்கி அதில் இட்ட குங்கிலியத்தையும் மெழுகையும் கரைந்து விடச் செய்ய வேண்டும். இதுதான் பிண்ட தைலம். இதை ரத்தவாதத்தில் உபயோகிக்கும் விதத்தை விளக்கியுள்ளேன். தினசரி உடம்புக்குத் தடவிக் குளிக்கலாம். முக்கியமாக, வேர்க்குரு, கோடைக் கொப்புளம் முதலியவை உள்ளவருக்கு மிகவும் நல்லது.

ஆமவாதத்தில் உள்ளுக்குக் கொடுக்கக் கைகண்ட பலனளிக்கும் இரண்டொரு கஷாயங்கள்.

கந்தர்வஹஸ்தாதி கஷாயம்: கந்தர்வ ஹஸ்தம் [ஆமணக்கின் வேர்], கண்டு பறங்கி, சித்திரமூலம், சுக்கு, கடுக்காய், மூக்கரட்டை வேர், பூனைக் காஞ்சியின் வேர், நிலப்பனங் கிழங்கு ஆகியவற்றை ஓர் எடையாக எடுத்துப் பெருந்தூளாக இடித்து வைத்துக்கொண்ட சூரணத்தில் 1½ பலம் எடுத்து 16—20 அவுன்ஸ் ஜலம் விட்டுச் சிறு தீயால் 4 அவுன்ஸ் ஆகும் வரையில் காய்ச்சி மருந்துகளைக் கசக்கிப் பிழிந்து களைந்து, கஷாயத்தை வடிகட்டிக் காலை மாலை 2 அவுன்ஸ் வீதம் குடித்தல் நல்லது.

நோயின் நிலை கடுமையா யிருப்பின் 2 பலம் மருந்திலிருந்து 6 அவுன்ஸ் கஷாயம் காய்ச்சி, வேளைக்கு 2 அவுன்ஸ் வீதம் கொடுக்கவும்.

கஷாயத்தைக் கொடுக்கும்போது அதில் 2 - 3 சிட்டிகை வறுத்துப் பொடித்த இந்துப்புவையும் - கழற்சியளவு வெல்லத்தையும் கஷாயத்துடன் கூட்டிக் கொடுப்பது சிறந்தது. மிக நுண்ணிய நாடிகளில் ஒட்டிக் கிடக்கும் தோஷாம்சங்கள் [வியாதிக்குக் காரணமான விஷ சுவபாவமுள்ள கழிவுப்

பொருள்கள்] யாவும் விடுவிக்கப்பட்டுச் சரீரத்திலிருந்து வெளியாகும்.

ராஸ்னாதி கஷாயம்: ராஸ்னா [சித்தரத்தை. இதைச் சிலர் ஸந்நராஷ்ட்ரம் என்பர்] ஆமணக்கின் வேர், சிற்றாமுட்டி வேர், மருதாணி வேர், கடுக்காய்த் தோல், பூனைக் காஞ்சிரையின் வேர், ஆடாதோடை வேர், சீந்தில் கொடி, தேவதாருக் கட்டை, அதி விடயம், கோரைக் கிழங்கு, நீர்முள்ளி ஸமூலம், கிச்சிலிக் கிழங்கு [இதைச் சிலர் பூலாங்கிழங்கு என்பர்]. ஆகியவற்றைச் சமன் எடையில் எடுத்து இடித்த பெருந்தூள். இதுதான் ராஸ்னாதி கஷாயமென்பது. இவற்றுடன் தசமூலம் என்னும் பத்துச் சரக்குகளையும் சேர்த்துக் கொண்டால் அது மஹாராஸ்னாதி கஷாயமாகும். கஷாயம் செய்யும் முறையும் குடிக்கும் அளவும் கந்தர்வஹஸ்தாதிக்குச் சொன்னது போலவே.

அமுக்கராக் கஷாயம்: அமுக்கிரான் கிழங்கு, பிரப்பன் கிழங்கு, கடுக்காய்த் தோல், தானிக்காய்த் தோல், நெல்லி முள்ளி, சிவதை வேர், ஆமணக்கின் வேர், சாத்தரணை வேர், சுக்கு ஆகியவற்றைச் சமன் எடையில் எடுத்துப் பெருந் தூளாக இடித்துக் கொண்டது.

இதன் கஷாயத்தை வைப்பது குடிக்கும் அளவு ஆகியவை ஏற்கெனவே தெரிவித்ததைப் போலவேதான்.

இவை தவிர, வேறொரு ராஸ்னாதி கஷாயம் ஸஹசராதி கஷாயம் ஆகியவைகளையும் வெளியிட்டுள்ளேன்.

பேதிக்குக் கொடுப்பதும் அவசியம் என்றேன் அல்லவா? அதற்குகந்த இரண்டொரு மருந்துகளையும் சொல்லி விடுகிறேன்.

ரத்த வாதத்தில் குடற்சுத்திக்காகச் சொன்ன திராக்ஷாதி கஷாயம் இதில் சிறந்ததல்ல.

நாந்நீ தைலம்: பிரமி (நீர்ப் பிரமி) என்னும் ஒரு கொடி. சிறிய இலையுடனுள்ள இது தண்ணீர் ஓடும் வாய்க்கால்கள் — ஓடைகள் — ஆற்றங்கால் முதலிய இடங்களில் கிடைப்பது. இதை இடித்துப் பிழிந்த ரஸம் 1 படி. கொழகொழவென்று நிற்குமல்லாது, ரஸம் பிழிந்தெடுக்க எளிதில் வராது. கிடைக்கும் ரஸமும் நொப்பும் நுரையுமாக இருக்கும். தெளிந்த பிறகு வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

தோல் நீக்கிய பூண்டு 15 பலத்தை ஜலத்தில் வேகவிட்டுக் கசக்கிப் பிழிந்து எடுத்த ரஸம் 1 படி.

இவ்விரண்டுடன் ஆமணக்கெண்ணெய் 1 வீசையுங் கூட்டி, 10 தோலா கடுகரோஹிணியை வெண்ணெய் போல் அரைத்துக் கூட்டி யாவற்றையும் ஒன்றாய் அடுப்பிலேற்றிக் காய்ச்சவும். பிண்ட தைலத்தில் சொன்ன பாகத்துக்குக் கல்கம் வரும்போது இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும். இதில் ½ அவுன்ஸ் முதல் 1 அவுன்ஸ் வரையில் வயதுக்கும் சரீர பலத்துக்கும் வியாதியின் கடுமைக்கும் தக்கபடி சிறிது வெந்நீரிலோ அல்லது மேற்சொன்ன கஷாயங்களில் ஒன்றுடனோ சேர்த்துக் காலையில் குடிப்பிக்கவும். பிறகு ஒருதரம் வெளிக்குப் போகும் வரையில் அவ்வப்போது ஒவ்வொரு வாய் சுடச்சுட வெந்நீர் குடித்து வரவும். இதனால் ஏற்படும் குண குணத்தையொட்டி மறுமுறை முதல் அளவைக் கூட்டியோ குறைத்தோ ஏற்கவும்.

நாந்நீ தைலத்தைப் பல்வேறு சந்தர்ப்பங்களில், முக்கியமாகக் குழந்தைகளின் நோயில் உபயோகிக்கலாம்.

ஹிங்குத்ரிகுண தைலம்:—இதையும் மேற்சொன்ன விதத்தில் ஆமவாதத்தில் உபயோகிக்கலாம். வேறு பல வியாதிகளிலும் இது பயன்படுகிறதாதலின் செய்முறையை இங்கு விளக்குகிறேன்.

ஒரு பலம் பெருங்காயத்தைக் கொள்ளுமான அளவு ஜலத்தில் கரைத்து வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். இதில் 3 பலம் இந்துப்புவைக் கரைத்துக் கொண்டு 9 பலம் ஆமணக்கெண்ணெயையும் கூட்டிக் கொள்ளவும். இத்துடன் 5 பலம் பூண்டை வேக விட்டுப் பிசைந்து கரைத்தபின் வடிகட்டின கஷாயம் ¾ படியைக் கூட்டிக் காய்ச்சவும். ஜலமெல்லாம் சுண்டினபிறகு மருந்துகளெல்லாம் சேர்ந்துகொண்டு ஒரு களி போல் உருளியில் இருக்கும். அடிப்பிடிக்க வொட்டாமல் கிளறிக் கொண்டிருந்தால் சிறுகச் சிறுக எண்ணெய் இக்களியிலிருந்து பிரிந்து வரும். உற்ற பாகம் [பிண்ட தைலத்தில் சொன்னது] வரும்போது இறக்கி எண்ணெயை எடுத்துக் கொள்ளவும்.

குறிப்பு:- வடிகட்டினதும் கல்கன் மருந்துகளும் வடிகட்டும் துணியிலிருந்து பிச்சிக் கொண்டு வரும். ஆகவே, இறக்கி வைத்த பிறகு கல்கனை உருளியின் ஒரு ஓரத்திலாக்கிச் சட்டுவத்தால் அமர்த்தி. அமர்த்தி ஒழுகும் தைலம் பாத்திரத்தின் நடுவில் வரும்போது எடுத்துக் கொள்ள வேண்டும். தனிப்படுத்தப்பட்ட கல்களிலும் சிறிது எண்ணெய் தேக்கிக் கொண்டு நின்றுவிடும். கூடுமான வரையில்தான் இதை மேற்சொன்ன விதத்தில் பிரித்து எடுத்துக் கொள்ளலாம்.

இக் கல்கனைத் தனியாக லேகியம் போல் எடுத்து வைத்துக் கொண்டு உபயோகிப்பார் உண்டு. இதை ஹிங்குத்ரிகுண தைலத்தைப் போலவே உள்ளுக்கும் உபயோகிக்கலாம். சாப்பிடுவதுதான் மிக மிகக் கஷ்டம்.



எவ்வளவு கெட்டிக்காரி நீ...
பார்க்கிறேன்!

அசல் பெரகான் நைலானைக் கண்டு பிடிக்கக்கூடிய கெட்டிக்காரியா அல்லது கடைக்காரன் சொல்வதை அப்படியே நம்புகிறவளா ?

பெரகான் விரயச்சீட்டுடன் பெரகான் பெட்டியிலேயே இருக்கும் புடவை அசல் பெரகான் என்று சொல்வதற்கில்லை. அசல் பெரகான் புடவை என்பதற்கு அடையாளம் புடவையின் இரு தலைப்பிலும் தங்க நிறத்தில் PTM டிரேட் மார்க் முத்திரை இருக்கும். வாங்கும் பொழுது தவறாமல் அதைப்பார்த்து வாங்குங்கள்.

அசல் பெரகான் நைலான்களில்தான் PTM டிரேட் மார்க் இருக்கும். ஆறு கஜத்தில்தான் பெரகான் புடவைகள் தயாரிக்கப் படுகின்றன... சுலபமான இந்த இரண்டு விஷயங்களை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் உங்களுக்கு எப்பொழுதும் அசல் பெரகான் நைலான் புடவை கிடைக்கும்...மடிப்புக் கலையாத நைலான்... சுத்தம் செய்தபின்னர் இஸ்திரிபோட அவசியமில்லாத நைலான்...பெரகானால்தான் சிறந்த புடவைகளைத் தயாரிக்க முடியும்.

உங்கள் சிநேகிதிகளையும், உறவினர்களையும் ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லுங்கள். பெரகானையல்லாமல் இதர போலிகளை வாங்கி ஏமாறாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

பெரகான்

நைலான் புடவைகள்

பெரகான் டெக்ஸ்டைல் மில்ஸ்
வொர்லி—பம்பாய் 13.

PF. 67.17.A.TAM.

EVEREST



மாப்பிள்ளை விருந்து

எஸ்.ரங்கநாயகி

ஸ்ரீ நாராயணனின் திரு உருவத்தைப் பூஜித்துக் கொண்டிருந்தாள் கோதை. விவாகமான பின்பும் இத் திரு வழிபாட்டில் அவள் குறை வைப்பது கிடையாது. காலையில் எழுவாள். தன் கைகளினாலேயே அறையைச் சுத்தமாக ஜலம் விட்டுத் துடைப்பாள். முத்தெனக் கோல மிடுவாள். அன்றலர்ந்த மலர்களைப் பறித்து வருவாள். சரம் சரமாகத் தொடுத்து நாராயணனுக்குச் சாத்திவிட்டுப் பூஜையில் அமர்ந்து விடுவாள்.

அப்பொழுது அதிகாலை வேளை. மலர்க் கொடிகள் தங்கள் ஆனந்தத்தை இதழ் விரித்து இன்சிரிப்புடன் பறைசாற்ற ஆரம்பித்து விட்டன. வண்டினங்கள் அவற்றிடமிருந்து பெண் மலர்களுக்குத் தூது செல்லக் களிப்பு அலையுடன் கிளம்பி விட்டன. காற்றின் இசையில் வந்த தெள்ளமுதம் கோதையின் காதுகளை ஸ்பரிசித்தது.

'எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும் நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்......'

"எங்களை முதலில் எழுப்புவதாகச் சொன்னவள் நீதானே? இன்னும் உன் தூக்கம் கலையவில்லையே. எழுந்து வா. கண்ணனைப் புகழ்ந்து பாடுவோம்."

கோதை சற்றே திடுக்கிட்டாள். கண்களைக் கசக்கி விட்டுப் பார்த்தாள். தோழிகள் ஒருவரும் எதிரில் இல்லை. அவளும் நன்றாக விழித்துக் கொண்டுதான் இருந்தாள். எல்லாம் மனப் பிரமை; சென்ற வருடம் வரையில் அவள் மார்கழி மாதத்தில் நோற்ற நோன்பின் சாயை. மார்கழி மாதத்தைச் சுபமான காரியங்களுக்கு ஒதுக்க மாட்டார்கள். ஆனால் கோதையோ சுபமான நோன்பு ஒன்றை நோற்று அம்மாதத்துக்குச் சிறப்பு தேடித் தந்தவளாயிற்றே! அந்த மாதத்தில் எப்படி அவளுக்குக் கடந்த கால நிகழ்ச்சி தோன்றாமல் இருக்கும்!

இனி, புக்ககத்துக்கு வந்து விட்டாள். அரங்கமா நகருளானை அன்புக்கிசைந்த மணாளனாக அடையும் பேரின்பத்தையும் பெற்று விட்டாள். மீண்டும் ஸ்ரீ வில்லிப்புத்தூர் மண்ணில் அடி வைத்து, தோழிகளின் வீட்டுக்குச் சென்று அவர்களை எழுப்பி நன்னீராடி, கொண்டை முடியுடன் நோன்பு நோற்கும் பாக்கியத்தை அடைய முடியாதே என்று அவள் மனம் ஒரு கணம் ஏங்கியது. நோன்பின் பலன் ஒருபுறம் இருக்கட்டும். தோழிகளுடன் இன்பமாக நோன்பு நோற்கும் ஆனந்தத்துக்கு ஒரு எல்லை உண்டோ!



மானசீகமாகவே கோதை ஸ்ரீ வில்லிப்புத்தூர்ப் பெண்களுடன் கலந்து கொண்டாள். தன்னைப் போலவே தன் தோழிகளுக்கும் நல்ல கணவர் வரவேண்டுமென அவள் நினைத்துக் கொண்டபோது, அவள் முகம் மலர்ந்து தேன்சிரிப்பு ஒன்று இதழ்களில் தோன்றியது.

"கோதை!"

கோதை மெதுவாகத் திரும்பினாள். அவள் மலர்க் கரம் பிடித்த ரங்கநாதர் ஆனந்த சொரூபியாக நின்று கொண்டிருந்தார். கோதை அவர் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"கோதை! உன் பிரசன்ன முகத்தைக் கண்டு நீ ஏற்றி வைத்த தீபச் சுடரும் களிப்புடன் காற்றில் ஆனந்த நடனம் புரிகிறது பார்த்தாயா?" என்றார், அவள் தோள்களில் கை போட்டபடியே பரந்தாமன்.

"இல்லை, நீங்கள் சொல்வது தவறு. நீங்கள் இருக்குமிடத்தில் ஒவ்வொரு வஸ்துவும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு ஆனந்த நடனம் புரிகின்றது."

"அப்படியே இருக்கட்டும். ஆனால் என் மனம் சதா ஆனந்தக் கிளர்ச்சியில் மூழ்கி இருப்பதன் காரணமோ ...?"

அவர் உள்ளம் கவர்ந்தவளின் முகத்தில் சற்றுச் செம்மை படர்ந்தது. அவள் நாணத்துடன் தலை குனிந்தாள். அந்த அழகை அனுபவித்தார் ரங்கராஜன்.

இச்சமயம் தீபத்தில் எண்ணெய் குறைந்திருப்பதைக் கண்ட கோதை அதில் எண்ணெய் விட்டாள். அப்பொழுதும் அவள் மனம்





மீண்டும் பின்னோக்கிச் சென்றது. தோழிகள் அனைவரும் மானசீகமாகக்கண்ணனின் வாயிற் கடையில் நின்று 'குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில் 'மேல்' சயனித்திருக்கும் எம்பெருமானைத் தரிசித்து உள்ளம் குளிர்க்க நினைவுச் சுடர் பளிச்சிட்டது. இதோ இப்பொழுது அந்த மன்மத வடிவனைக் கண் முன்னே கண்டு நிற்கிறாள். மணாளனை ஒரு முறை அவள் கண்குளிரப் பார்த்துப் பரவசம் அடைந்தாள்: உள்ளத்தின் பூரிப்பு முகத்தில் பிரதிபலித்தது.

"கோதை! திடீரெனத் தனக்குள் சிரித்துக் கொள்வதன் காரணம் என்னவோ? மணாளனைக் கைப்பிடிக்கும்போது சுகத்திலும் துக்கத்திலும் சமமாகப் பகிர்ந்து கொள்வேன் என்று சபதம் செய்து விட்டு, மனத்துள் எழும் ஆனந்தத்தைச் சுயநலத்துடன் நீ மட்டும் அனுபவிக்கலாமா?" என்றார் பள்ளிகொண்டார்.

"ஒன்றுமில்லை. மார்கழி நோன்பின் நினைவு ஒன்று வந்தது."

"ஓகோ, பிறந்த நினைவோ? அந்த மாதம் முழுதும் மனச் சிறையில் என்னை அடக்கி வைத்து விட்டனையே! ஆனால் கோதை, அந்த நோன்பில் நான் மிகவும் ரசித்தது ஒரே ஒரு பொருள் உண்டு."

'என்ன?" என்னும் பாவனையில் கோதை அவரை நிமிர்ந்து நோக்கினாள்.

"பாற்சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவார' அமுதம் படைத்தீர்களே, ஆகா அதன் ருசியே தனி மகிமையுடன் கூடியது!"

கோதையின் மனம் குதூகலத்தில் நிரம்பியது. பரந்தாமன் அவளுக்குத் தெரியாமலே அவ விட்ட அமுதத்தை உண்டிருக்கிறாரே!

இந்த நினைவுடன் அவளுக்கு மேலும் ஒரு நிகழ்ச்சி நினைவு வந்த போது அவள் மனம் சற்று வருத்தத்தில் ஆழ்ந்தது. நோன்பு முடித்த கையோடு பொங்கல் திருநாள் வந்து விட்டது. கோதை வீட்டைத் தோரணங்களால் அலங்கரித்து, பளிச்செனக் கோலமிட்டு, பொங்கல் அமுதம் தயாரித்திருந்தாள். சாப்பாட்டு நேரத்தில் தந்தைக்கு ஸ்தல சுத்தி செய்து நுனியுடன் இலைபரப்பிப் பரமான்னங்களைப் பரிமாறினாள். தந்தைக்கு ஒரே குதூகலம்; ஒவ்வொரு பண்டமும் ஒரு தனிச் சுவையுடன் இருந்தது.

வயிறுநிறையப் பரமான்னங்களைச் சாப்பிட்டபின், பெண்ணின் தலையை அன்புடன் கோதி, "அம்மா, கோதை! இவ்வருடம் உனக்கு எப்படியும் விவாகம் முடிந்துவிடும் என்று என் அந்தராத்மா கூறுகிறது; அப்பொழுது அடுத்து வரும் பொங்கல் தலைப் பொங்கலாக இருக்கும். வீட்டுக்கு வரும் மாப்பிள்ளைக்கு நீ இதுபோல் சுவை மிகுந்த பொங்கல் செய்து விட வேண்டும்; அவன் ருசித்துச் சாப்பிட வேண்டும். என்னம்மா கோதை, என் விருப்பத்தை நிறைவேற்றுவாய் அல்லவா?" என்றார், விஷ்ணுசித்தர். கோதை வெட்கித் தலைகுனிந்தாள்.



இதோ வந்து விட்டது அந்நன்னாள். இது அவள் தலைப்பொங்கல். ஆனால் அவளோ பொங்கலுக்குப் பிறந்த வீட்டில் இல்லை. புக்ககத்திலும் தனி ஏற்பாட்டுடன் பொங்கலுக்கு அழைக்க முடியாதபடி கைப் பிடித்த நாளே கணவனுடன் வந்து விட்டாள். அவள் தந்தையும் மாப்பிள்ளையைப் பொங்கல் விருந்துக்கு அழைக்க முடியாதபடி தொலைதூரத்துக்கு வந்து விட்டாள். விருந்துக்கு அழைக்கும் பாக்கியம் மாமனாருக்கு இல்லை; 'மாப்பிள்ளை விருந்து' அனுபவிக்கும்பாக்கியம் அவள் கணவருக்கு இல்லை; இருவர் ஆனந்தத்தையும் கண்டு களிக்கும் பாக்கியம் கோதைக்கு இல்லை. கோதையின் முகத்தில் விசனக்குறி பரவியது.

"கோதை, முகத்தில் ஒரே நிமிடத்தில் ஏன் இந்த இருள்!" சற்று வருத்தம் தோன்றக் கேட்டார் அரங்கமா நகரத்து அரசன்.

"ஒன்றுமில்லை. பொங்கல் திருநாள் வருகிறது. அதைப் பற்றி நினைத்தேன்."

"இதில் வருத்தம் தோன்றக் காரணமென்ன? உலக இருளைப் போக்க உத்தராயணத்துக்குச் சூரியனின் தேர் திரும்பிவிடும். இனி எங்கும் சுபிக்ஷம்!"

"அதனால்தான் மனத்தில் மேலும் புதிதான ஏக்கம் ஒன்று பிறந்திருக்கிறது."

"கோதை, இதில் ஏக்கம் ஏது? பாலுக்கும், பஞ்சமில்லை, புத்தம் புது நெல் மணிகள் அறுசுவை அளிக்கத் தயாராக இருக்கின்றனவே!"

"இவ்வளவிருந்தும் என்ன? என் மனத்தை உங்களால் இச் சமயம் அறிய முடியவில்லை. விவாகம் நடந்த ஆண்டில் வரும் பண்டிகைகளை அனுபவிக்க உங்களுக்குத் தெரியவில்லையே என்றிருக்கிறது."

"என்ன கோதை, சொல்லுகிறாய்?" ஆச்சரியத்துடன் கேட்டார் கோதைமணாளன்.

"மாமன் வீட்டில் மாப்பிள்ளையாக எழுந்தருளி அங்கு நடக்கும் விருந்து உபசாரத்தில் எவ்வளவு ஆனந்தம் அடைய முடியும் தெரியுமா? அடுத்து வரும் ஆண்டுகளில் கணவனும் மனைவியும் என்றென்றும் பண்டிகைகளைச் சேர்ந்து கொண்டாடுவார்கள். ஆனால் தலைப் பண்டிகைகளை மாமனார் வீட்டில்தான் ஆனந்தமாகக் கொண்டாட முடியும். மாப்பிள்ளையை அழைத்து ஒவ்வொரு பண்டிகைக்கும் உபசரிக்க வேண்டும் என்று என் தந்தைக்கும் விருப்பம் உண்டு. ஆனால் எம்பெருமானாகிய உங்களை அவர் எவ்விதம் தலைப்பண்டிகைக்கு அழைக்க முடியும்? நானும் உங்களுடன் கைப்பிடித்தநினமே வந்து விட்டேன்" என்றாள் கோதை. அவள் குரலில் சற்று வருத்தம் தோய்ந்திருந்தது. பிறந்த வீட்டு ஏக்கம் வந்து விட்டது.

ரங்கராஜனின் உடலில் ஒரு நிமிஷம் புல்லரிப்பு ஏற்பட்டது. ஆகா, கோதையை மணந்தது எவ்வளவு பாக்கியம்? அவரும் எவ்வளவோ அவதாரங்கள் எடுத்து விவாக மஹோத்ஸவத்தை அனுபவித்து மனைவியுடன் கூடிக்குலாவி இருக்கிறார். ஆனால் ஒருத்திக்காவது அவரைப் பிறந்தவீட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்றே தோன்றவில்லையே! அவருக்கும் மாப்பிள்ளை முறையில் மாமனார் வீட்டில் விருந்து உண்ண, திடும்மென ஒரு ஆசை உதித்தது. ஆனால்......

"எல்லாம் சரிதான், கோதை! உன் விருப்பத்தைத் தடை செய்ய நான் விரும்பவில்லை. மாமனாரிடமிருந்து நேரில் அழைப்பு வராவிடினும் நான் கோபிக்காமல் வரத் தயார்தான். ஆனால்......"

கோதைக்கு மனத்தில் குதூகலம் பிறந்தது. "......ஆனால் என்ன?"

"நீயே யோசித்துச் சொல். உன் தந்தை என் மாமனார் என்ற முறையில் எனக்குப் பெரியவர். ஆனால் சதா என்னைக் கடவுள் ரூபத்தில் தியானித்து என் பாதார விந்தங்களைப் பூஜிக்கும் அவர், என்னை நேரில் கண்டு விட்டால் என்ன செய்வார் என்று உனக்குத் தெரியுமல்லவா?"

மணாளனின் மனத்தைப் புரிந்து கொண்டாள் கோதை. அவர் கூறியது உண்மையெனப்பட்டது அவளுக்கு. அவளும் சற்று யோசனையில் ஆழ்ந்தாள். எவ்விதமாவது பொங்கல் தன்னாளைத் தந்தையுடன் கழிக்க விரும்பினாள்.

"அப்படியானால் ஒன்று செய்யலாம். உங்களையும் என்னையும் அவர் அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி சென்றுவிட்டு

வரலாம்; மாமனார் வீட்டில் விருந்து உண்ட ஆனந்தம் உங்களுக்காவது கிடைக்கட்டும்.''

சம்மதம் கிடைத்தது அவள் நாயகனிட மிருந்து. கோதையின் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பியது. பொங்கல் திருநாளை அப்பொழுதி லிருந்தே எதிர்பார்த்தாள்.

* * *

அன்றையதினம் பால் பொங்கும் நன்னாள். ஸ்ரீ வில்லிப்புத்தூர் ஆண்டவனின் சந்நிதியிலிருந்து ஓங்கார சப்தத்துடன் மணி யோசை ஒலமிட்டுக் கொண்டிருந்தது. வயல் வெளிகளில் அறுவடை செய்யப்பட்ட நெற் கதிர்கள் இங்கும் அங்கும் சிந்திக்கிடக்க, அந்த அன்னைக் களஞ்சியத்தின் நடுவில் பறவைகள் தங்கள் சபையைக் கூட்டியிருந்தன. தாமரைத் தடாகத்திலிருந்த பங்கஜம் தன் மலர்க் கரங்களை விரித்து நர்த்தனம் ஆடத் தொடங்கியது. வண்டினங்கள் அதற்கேற்ப இசையமுதம் இசைத்தன; அலைகள் தாளமிட்டன. கரையி லிருந்த சிறுசெடிகள் தலையை ஆட்டி ரசித்தன.

தொழுவத்தில் கட்டப்பட்டிருந்த பசு ''அம்மா'' என்று கத்திக் கொண்டிருந்தது. இளங்கன்று அதன் மடியைச் சுவைத்து நின்றது; விஷ்ணு சித்தருடைய மனம் இவை யொன்றிலும் ஈடுபடவில்லை. பூக்கூடையில் வண்ண மலர்கள் வழிய வழிய இருந்தன. ஆனால் அவற்றைத் தொடுத்து ஆண்டவனுக்கு அலங்காரம் செய்ய வேண்டுமென்ற நினைப்பே இல்லாமல் உட்கார்ந்திருந்தார் அவர்.

இன்று பண்டிகை நாளில் ஏகாங்கியாக இருந்தார் அவர். கோதை புக்ககம் சென்றதும் மனைவி க்ஷேத்திராடனத்துக்குச் சென்று விட்டாள். ஆகா, கோதை மட்டும் இன்று இங்கிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! முத்தென வீடு முழுவதும் கோலமிட்டு, பூக்களை ஒரே நிமிஷத்தில் தொடுத்துத் தன் குழ லிலும் சூட்டிப் பரமனுக்கு எடுத்து வைத்து விடுவாளே! அது மட்டுமா, நாக்கிலும் கையி லும் நெய் சொட்ட இன்னமுதம் தயாரித்து விடுவாளே! இன்று குழந்தையைத் தலைப் பண்டி கைக்கு அழைக்காம லிருக்கிறேனே...... நான் யாரிடம் விஷயம் அனுப்புவது? அந்த ரங்கராஜ னிடம் யார் போக முடி யும்? என் செய்வேன்...

''சுவாமி......''

ஏதோ பழகின குரல் போல் இருக்கிறதே! எழுந்து வாசலுக்கு ஓடி னார்......யார் அது? என் கோதையா? அவளாக இருந்தால் தலைக் கொண்டை கம்பீரமாக இருக்குமே...கோதை போலவும் இருக்கிறது. அவள் இல்லை போல வும் இருக்கிறது.........கூடவே தேஜோமய ரூபியாக நிற்கும் அந்த இளைஞன் யார்? அவ ருக்கு ஒன்றுமே புரியவில்லை. கோதையும், எம்பெருமானும் தங்கள் உருவத்தில் மாறு பாடு செய்து கொண்டு வந்திருக்கின்றனர் என்பது அவருக்கு எப்படித் தெரியும்!

''சுவாமி! நாங்கள் வழிப் போக்கர்கள்; இன்று பண்டிகை தினமாதலால் யார் வீட்டிலாவது தலைப் பண்டிகை கொண்டாட விட்டுச் செல்ல நிச்சயம் செய்துள்ளோம்; தங்கள் இல்லத்தில் இடம் கிடைக்குமோ?'' என்றார் அந்தக் கபட வேஷதாரி ஸ்ரீரங்கநாதன். அவர் நடிப்பைக் கண்டு தனக்குள் சிரித்துக் கொண்டாள் ஆழ்வார் திருமகள்.

விஷ்ணு சித்தரின் உள்ளம் குதூகல மடைந்தது. இவர்களைச் சாக்கிட்டாவது வீட்டில் இத் திருநாளில் ஆனந்தம் நிறைந்து கிடக் கட்டுமே! ''ஆகா, என் இல்லம் உங்களுக் காகத் திறந்தே இருக்கிறது...ஆனால் ஒரு விஷ யம். என் வீட்டில் மனையாள் இல்லை. என் பெண் புக்ககத்தை நாடிச் சென்றுவிட்டாள்; இவ்வருடம்தான் விவாகமாயிற்று.''

''அப்படியானால் பண்டிகைக்கு அவளுக்கும் மாப்பிள்ளைக்கும் அழைப்பிதழ் அனுப்பியிருக்க வேண்டுமே?'' என்றாள் கோதை மெதுவாக.

''ஆமாம்...ஆனால் அவள் ஆண்டவனின் கைப் பிடித்து அவனுடன் ஐக்கியமாகி விட்டாளே. அந்தப் பரமனுக்கு நான் யார் மூலம் செய்தி அனுப்ப முடியும்! என் நெஞ்சம் என் மகளைப் பார்க்கத் துடிக்கிறது.''

''அப்படியானால் ஒன்று செய்யுங்கள்; இதோ நிற்கிறாளே என் மனைவி. இவளும் இவ் வருடம்தான் என் கரம் பிடித்தாள். அவளுக் கும் தலைப் பண்டிகைக்குப் பிறந்த வீடு போக முடியவில்லையே என்று வருத்தம்!''

''ஏன் அப்படி? அழைப்பு வரவில்லையோ? இவள் தாய் தந்தை யாவர்?''

''அதெல்லாம் எனக்கு விவரமாகத் தெரி யாது ஸ்வாமி. தாயின் பெயர் பூமா என்று இவள் என்றோ ஒரு நாள் சொல்லி இருக் கிறாள். என்னைப் பார்த்ததும் 'உன்னைத் தான் கரம் பிடிப்பேன்' என்று என் காலைப் பிடித்துக் கொண்டு விட்டாள். உடனே நான் அவள் கையைப் பிடித்துக் கொண்டு விட் டேன்'' என்றார் வேடிக்கையாக ரங்கநாதர். கோதை வெட்கித் தலை குனிந்தாள். விஷ்ணு சித்தர் வாய்விட்டுச் சிரித்தார்.



''அம்மா குழந்தை, நீ வருத்தப்படாதே! உன்னை நான் என் குழந்தை போலவே நினைத்துக் கொள்வேன்; இன்று என் வீட்டில் உங் களுக்குப் பண்டிகை கோலாகலமாக நடக் கட்டும். உள்ளே வாருங்கள்'' என்று இரு வரையும் உள்ளே அழைத்துச் சென்றார். தானே அடுப்பைப் பற்ற வைத்து அவர் சமைக்கக் கிளம்பியபோது கோதை அவரைத் தடுத்தாள். ''ஸ்வாமி! நீங்கள் என்னை உங்கள் பெண்ணாகப் பாவிப்ப தாகச் சொன்னீர்களே, அப்படியானால் நான் தானே சமையல் செய்ய வேண்டும்?''

பிறகு பரக்கப் பரக்க வீட்டை மெழுகிக் கோலங்களினால் அலங்கரித்தாள். தொழுவத் துக்குச் சென்று பசுவுக்கு மஞ்சள் குங்கும மிட்டு அதன் கழுத்தை அன்புடன் தடவிக் கொடுத்தாள். பறித்த மலர்களைத் தொடுத் தும் வைத்தாள்.

விஷ்ணு சித்தரின் மனமும் குதூகலத்தில் நிரம்பி இருந்தது. வாசற்படியில் மாவிலைத் தோரணம் கட்டினார். சாமான்கள் வாங்கி வந்தார்: பெண்ணுக்குப் புதுச் சேலையும், மாப்பிள்ளைக்கு ஆடையும் வாங்கிக் கொடுத்தார். மாப்பிள்ளை முறையில் புது ஆடையை உடுத்தியதும் ரங்கநாதருடைய மனம் விவரிக்க முடியாத ஆனந்தத்தில் ஆழ்ந்தது.

பிறகு விஷ்ணுசித்தர் வாசல் பக்கம் சென்றிருந்த போது புத்தம் புது ஆடையில் ஒளி படர வீட்டின் பின்புறத்திலேயே சுற்றிச் சுற்றி வரும் மனைவியைக் கண்குளிரக் கண்டு அன்புடன் அரவணைக்க உள்ளே நுழைந்தார் அரங்கமா நகரபதி.

இதற்குள் ''அம்மா குழந்தை...'' என்று கூப்பிட்டபடி வந்து விட்டார் விஷ்ணுசித்தர்: மெதுவாகச் சொக்லைப்புறம் நழுவிவிட்டார் மருமகப் பிள்ளை.

கோதை நாணத்துடன் தலைகுனியும் விஷ்ணு சித்தருக்கும் பொங்கலமுதப் பரிமாறிய அழகைக் கண்டு வியந்து நின்று விட்டார், பள்ளி கொண்டவர். பிறந்த வீட்டில் இப் பெண்களுக்கு எங்கிருந்து இவ்வளவு வெட்கம் வந்து விடுகிறது? மேல் பார்ப்பவர் ஒருவர் இருந்தாலே இந்த வெட்கம் சூழ்ந்து காதலையும் வளரச் செய்து விடும் போலும். ஆகா, இந்த நாணமுற்ற நிலையில் பெண்களின் அழகு பன்மடங்காகச் சோபிக்கிறதே! இந்த நிலையில் தம் மனைவியை வாரி அணைத்துத் தழுவ அவர் கைகளும் உள்ளமும் துடிதுடித்தன! ஆனால் இந்த மாமனார் ஒருவர் எதிரில் இருக்கிறாரே...!

விஷ்ணுசித்தர் ஒரு குறையும் வைக்கவில்லை: சொந்த மாப்பிள்ளை என்று அறியாமலிருந்தும் மாப்பிள்ளையாகவே பாவித்து உபசாரம் செய்தார். மாப்பிள்ளை முறையில் ரங்கராஜருக்கு என்றும் காணாத ஆனந்தம்.

மாலையில் இருவரும் விடைபெற்றனர்: தந்தையை விட்டுப் பிரிகிறோமே என்று கோதைக்கு வருத்தம். ஆனால் கணவரை விட்டு விட்டு அவளால் இருக்க முடியாது. அவர்கள் உண்மையில் யார் என்பதை அறியாமலே விஷ்ணுசித்தருடைய மனம் அவர்களிடம் முற்றிலும் ஐக்கியமாகிக் கிடந்தது. ஒரே நாளில் தன்னிடம் இவ்வளவு ஒட்டிப் பழகின அவ் இருவரும் பிரிந்தபோது கண்களில் நீர் முட்டியது.

மீண்டும் அவர் தம் விழிகளை வீட்டின் பக்கம் திருப்பியபோது கோதையின் அந்தரங்கத் தோழி கமலி உள்ளே நுழைவதைக் கண்டார்.

'' சுவாமி, இன்று ஆண்டவனுக்கு நீங்கள் பூ எடுத்து வரவில்லையோ?''

விஷ்ணுசித்தருக்கு அப்பொழுதுதான் நினைவு வந்தது. ஆகா, பெரிய அபசாரம் செய்து விட்டோமே! முன் பின் தெரியாத புதுமணத் தம்பதிகளை உபசரிப்பதில் நித்திய கைங்கரியத்தை மறந்து விட்டோமே. ஓடோடிச் சென்றார் உள்ளே. ஆனால் இதென்ன, சொந்தம் கொண்டாடின அப் பெண் தொடுத்து வைத்திருந்த மாலையில் முக்கால் பாகத்தைக் காணோமே! அப்பொழுதுதான் அவருக்கு மற்றொரு நினைவும் வந்தது. விடை பெற்ற அந்த இளைஞன் ஒரு மாலை இதுபோல் கதம்பச் சரட்டில் அணிந்து சென்றதாக ஞாபகம். என்ன துஷ்டத்தனம்!

''ஐயோ கமலி, நான் மோசம் போய்விட்டேன்: ஆண்டவனுக்குச் சாத்த வேண்டிய பொருளை அபகரித்துச் சென்று விட்டான்'' என்று அலறினார் விஷ்ணுசித்தர். பிறகு அவளிடம் புதுமணத் தம்பதிகளைப் பற்றிய முழு விவரங்களையும் கூறி மிகுந்திருந்த பூச்சரட்டை அவளிடம் காட்டினார்.

''கமலி, பார்த்தாயா? அப்பெண்ணேதான் பூவைத் தொடுத்தாள். ஆனால் அவன் என்னை வஞ்சித்துப் பூச்சரட்டில் பாதியை அபகரித்துச் சென்று விட்டான்.''

கமலி பூச்சரட்டைக் கையிலெடுத்தாள்: அதைப் பலமுறை பார்த்தாள். ''சுவாமி, இதென்ன இப்படி ஒன்றும் தெரியாமல் பேசுகிறீர்கள்...? கோதை வந்தாளா? நீங்கள் என்னிடம் மறைக்கிறீர்களே, இது நியாயமா?''

''இல்லையம்மா, கோதை வரவில்லை. என்னை வஞ்சிக்க வேண்டுமென்றே முன்பின் அறியாத தம்பதிகள் வந்தனர்.''

'' சுவாமி, உங்கள் கண்கள் திறந்திருந்தும் நீங்கள் தூங்கியிருக்கிறீர்கள். இன்று வந்தவர்கள் கோதையும் அவள் மணாளனும்தான்: ஆண்டவனுக்கு விருந்து படைக்கும் பாக்கியத்தை நீங்கள் அடைந்து விட்டீர்கள்: இதோ பார்த்தீர்களா, இந்தக் கதம்பச் சரட்டை! இந்த முறையில் மலர்களை அமைத்துத் தொடுப்பவள் நம் கோதை ஒருத்திதான்: அவள் தோழிகளான எங்களுக்கு இது நன்றாகத் தெரியும். அவள் வந்தது எனக்குத் தெரியாமல் போய் விட்டதே!'' என்றாள் கமலி.

அப்பொழுதுதான் விஷ்ணு சித்தருடைய கண்கள் திறந்தன. கமலி கூறியது உண்மை என ஒரே நிமிடத்தில் புரிந்தது. மாமனார் வீட்டுக்கு வந்து மாப்பிள்ளை விருந்து களித்து, தமக்கென வைக்கப்பட்டிருந்த மாலையைத் தாமே சாத்திச் சென்றுவிட்டார் பெருமாள்: ''கமலி, நான் மகாபாபி. நீ சொல்வதுபோல் கோதையும் அவள் மணாளனும்தான் மாறு வேடத்தில் வந்திருக்கிறார்கள். எவனுடைய பாதார விந்தங்களை நினைத்து உள்ளம் உருகுகிறேனோ, அந்தப் பரந்தாமன் அருகில் வந்தும், அவன் பாத தூளிகளைத் தலையில் ஏற்று, பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ளாமல் போய் விட்டேனே!'' என்று புலம்ப ஆரம்பித்து விட்டார் விஷ்ணுசித்தர்.

இவ் வார்த்தைகளைக் கேட்டதும், அவ்வளவு நேரம் கோதையும் அவள் மணாளனும் மாறு வேடத்தில் வந்ததன் காரணம் புரியாமல் தவித்த கமலிக்கு ஒரு உண்மை பளிச்சிட்டது: ''ஸ்வாமி, மாமனார் ஸ்தானத்தில் நீங்கள் மாப்பிள்ளையின் காலைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்வது நியாயமில்லையே! இனியாவது அவரது இதய கமலத்தில் இடம் தேடுங்கள். பிரத்யக்ஷமாகும் காலம் வரும்'' என்றாள். விஷ்ணுசித்தர் ஆனந்த நிலையை எய்தினார். உள்ளமுருக ஆண்டவனைத் துதித்தார்:

அங்கு, 'மாப்பிள்ளை விருந்து' உண்ட மயக்கத்தில் என்றும் காணாத களிப்புடன் அரங்கமா நகரத்தரசனான ரங்கநாதன் சயனித்திருக்க, கோதை உள்ள நிறைவுடன் முகத்தில் பொலிவு பொங்க அருகில் அமர்ந்திருந்தாள்:



தமிழர் வளர்க்கும் சீனக்குழந்தைகள்

டி.கே.சண்முகம் - புத்தனேரி சுப்பிரமணியம்

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்னும் தத்துவத்தை வெறும் இலக்கியப் பொது மொழியாக மட்டும் கொள்ளாமல் வாழ்வியல் புது வழியாகவும் ஏற்று மகிழ்ச்சியுடன் பின்பற்றும் தமிழன்பர்கள் பலர் மலேயாவில் வாழ்கின்றனர்.

அந்நாட்டில் குடியேறிய தமிழர் சிலர் சீனப் பெண்களை இல்வாழ்க்கைத் துணைவியாக ஏற்று மகிழ்கின்றனர். இத்தகைய கலப்பு மணத்தால் அவர்கள் உலப்பிலா இன்பந் துய்க்கின்றனர். மக்கட்பேறும் பெற்று வாழ்வாங்கு வாழ்கின்றனர். கொண்டவர் மனங் கோணாமல் தொண்டு செய்யும் பண்பு சீனப் பெண்களிடமும் உண்டு என்பதை அநுபவ வாயிலாகக் கண்டு பாராட்டுகின்றனர், கலப்பு மணம் பெற்ற தமிழன்பர்கள்.

மலேயாவில் குடியேறிய தமிழர்களில் வேறு சிலர் சீனக் குழந்தைகளை 'எடுத்து' வளர்ப்பதில் தனி இன்பம் காணுகின்றனர். இன்னும் தெளிவாகச் சொல்வதானால் சீனக் குழந்தைகளை 'வாங்கி' வளர்ப்பதில் மனமகிழ்ச்சி எய்துகின்றனர். பிள்ளைப்பேறு நிலையங்களிலே சீனக் குழந்தைகளை விலைக்கு வாங்கலாம் என்றும், ஆனால் பெண் குழந்தைகள் மட்டுமே கிடைக்கும் என்றும் கேள்விப்பட்டோம்.

தமிழருடைய இல்லங்களிலே வளரும் சீனக் குழந்தைகள் சிலரைக் காணும் வாய்ப்பும் எங்களுக்குக் கிடைத்தது. கன்னங் கரிய கூந்தல், பொன்னை நிகர்க்கும் உடல் வண்ணம், சின்னஞ் சிறிய கண்கள், 'எடுப்பில்லாத' மூக்கு முதலிய அங்க அமைப்புக்களுடன் முகத்திலே பாச உணர்ச்சி தவழும் எழிலும் ஏந்தியுள்ள சீனக் குழந்தைகள் தமிழ்க் குழந்தைகளாக வளரும் சிறப்பு எங்கள் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது: அக்குழந்தைகள் நமது தமிழ் மரபை ஒட்டிப் பட்டுப் பாவாடையும் சட்டையும், அணிந்து நமக்கே உரிய முறையில் பொன் நகைகளும் பூண்டு விளங்கும் காட்சி என்றைக்கும் இதயத்தை விட்டு அகலாத ஒன்று. அவர்கள் வெறும் தோற்றத்தால் மட்டும் தமிழ்க் குழந்தைகளாக வளரவில்லை: தமிழை அழகுறப் பேசும் ஏற்றமும் அவர்களிடம் காணப்படுகின்றது. தமிழ்ப் பாடல்களைத் நன்கு தடையின்றி ஒப்பிக்கும் சிறுமிகளும், தமிழ் இசை முழக்கும் சீனத்து மழலைச் செல்வங்களும் பலர் உள்ளனர்.

கோலாலம்பூரிலிருந்து இருபத்தைந்து கல் தொலைவில் கிள்ளான் என்ற ஊர் ஒன்று உள்ளது. மலேயாவின் பழம்பெரும் பதிகளில் இதுவும் ஒன்று. இந்த ஊருக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு; மலேயாவிலே உள்ள மக்கள் அனைவரும் 'எச்சிற் கையால் காக்கை ஓட்டாதவர்கள்'' என்று சொல்லலாம்! திடுக்கிட வேண்டாம்! எச்சிற் கையால் மட்டுமல்ல, எந்தக் கையாலும் அவர்கள் காக்கையை ஓட்ட முடியாது! ஏனென்றால் மலேயாவில் காகம் என்ற பறவையையே காணமுடியாது! இந்தச் செய்தியை முதலில் கேள்விப்பட்டதும் எங்களுக்கும் வியப்பாகவேஇருந்தது. ஆயினும் 'கிள்ளான்' என்ற ஊர் இந்தச் செய்திக்கு 'விதி விலக்கு' என்றும் அறிந்தோம். மலேயாவில் வேறெங்கும் காகத்தைக் காண முடியாவிட்டாலும் கிள்ளானிலே அபூர்வமாக ஒரு சில காகங்கள் வாழ்கின்றன என்று நண்பர்கள் குறிப்பிட்டார்கள். ஆயினும் அவற்றில் எதுவும் எங்கள் கண்களில் தென்படவில்லை.

கிள்ளானில் அபூர்வமாகக் காகம் இருந்தாலும் அங்கு வாழும் தமிழன்பர்கள் எவ்

மலாய்க்காரரின் பெரிய பரண் வீடு.

களைக் 'காக்கை' பிடிக்கவில்லை! உள்ளன்போடு தான் வரவேற்றார்கள். அவ்வூரின் பண வரும் மனவளமும் செறிந்து வாழும் இலங்கைத் தமிழர் திரு டி. டி. குணரத்னம் அவர்களும், ஏனைய அன்பர்களும் மாரியம்மன் கோவில் மண்டபத்தில் நமது குழுவினருக்கு மாபெரும் வரவேற்பு விழா ஒன்று நடத்தினார்கள். தமிழ்ப் பெருமக்கள் ஏராளமாகக் கூடி, இசையக் களித்து பாராட்டிய இவ் விழாவிலே குறிப்பிடத்தக்க சிறப்பு ஒன்று உண்டு. தமிழரால் வளர்க்கப்படும் ஒரு சீனச் சிறுமி செஞ்சொல் அன்னம் அமுதத் தமிழிலே அழகான சொற்பொழிவு நிகழ்த்திய சிறப்பைத்தான் குறிப்பிடுகிறோம்.

இன்னாவில் மட்டுமல்ல; நாங்கள் மூகாமிட்ட நகரங்கள் பலவற்றிலும் எங்களோடு பழகிய அன்பர்கள் சிலரிடம் வளரும் சீனச் சிறுமிகளின் அன்பு முகங்கள் எங்கள் இதயத்தை மிகவும் கவர்ந்தன. எங்களை யறியாமலே ஒரு பாச உணர்ச்சி அச் சிறுமிகளிடம் ஏற்பட்டது. அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும் அந்தச் சிறுமிகளிடம் பொங்கிப் பொலிகின்றன என்பதையும் அன்பர்கள் உவகையோடு குறிப்பிட்டனர்.

ஆனால் அந்தச் சிறுமிகளோடு நாங்கள் பேசும்போது அவர்கள் 'சீனக் குழந்தைகள்' என்பதை நினைவுபடுத்தும் முறையில் எந்தக் கேள்வியும் கேட்கக்கூடாது என்று அவர்களை வளர்க்கும் அன்பர்கள் எச்சரிக்கைசெய்தனர்; அவர்களுடைய பொறுப்புணர்ச்சியையும் பாசத்தையும் வியந்து பாராட்டினோம்.

பிறப்பால் வேறு இனத்தவராயினும் வளர்ப்பால் தமிழினமாக ஒன்றியுள்ள சிறுமிகளின் எதிர்காலம் சீரும் சிறப்பும் உடையதாக வளர்க்க வேண்டும்; அவர்கள் வழியே ஒட்டுமாங்கனி இனம் போன்ற ஒவ்வொரு புதிய தமிழினம் தமிழ் மரபு வழுவாமல் வாழவேண்டும். இதுவே சீனக் குழந்தைகளை எடுத்து வளர்க்கும் தமிழன்பர்களின் சிறந்த ஆவலாக இருக்கும் என்று கருதுகிறோம்.

இன்னாவைப் பற்றிக் குறிப்பிட்ட பிறகு கோலக்கிள்ளான்பற்றிய செய்தியைக் கூறாமல் செல்வது கூடாது. 'போர்ட் ஸ்வெட்டன்ஹாம்' என்னும் கோலக் கிள்ளான் மலேயாவின் துறைமுகப் பட்டினங்களில் ஒன்று; கிள்ளானிலிருந்து ஐந்து கல் தொலைவில் உள்ளது. மலேயாவின் விளை பொருள்கள் இந்தத் துறைமுகத்தின் வழியே உலகத்தின் பல பாகங்களுக்கும் ஏற்றுமதி ஆகின்றன.


இடங்குகளிலிருந்து பெரிய பெரிய மூட்டைகளையும் 'ரப்பர் பெல்ட்' வழியாக வெகு விரைவில் படகுகளிலே ஏற்றும் வேகம் வியக்கத் தக்கதாக உள்ளது. சரக்குக் கப்பல்களைக் கரையோடு அணைப்பதற்கு விசைப் படகுகள் உள்ளன. இந்தப் படகு ஒவ்வொன்றுக்கும் ஒருமணி நேரத்துக்கு இருநூறு வெள்ளி, அதாவது சுமார் முந்நூறு ரூபாய் வாடகை. ஒரு மணி நேரத்துக்கு மேல் ஏழு நிமிடம் அதிகமானாலும் அரை மணி நேரத்துக் குரிய வாடகை தரப்பட வேண்டுமாம்.

கோலக்கிள்ளானில் கொள்கை வேறுபாடுள்ள ஐந்து சங்கங்கள் கலப்புணர்வோடு ஒன்றுசேர்ந்து நமது குழுவினருக்கு வரவேற்பளிக்க முன் வந்த மாண்பையும் குறிப்பிட வேண்டும். மலேயா இந்தியர் காங்கிரஸ், மலேயா தமிழர் சங்கம், கேரள சமாஜம், உதய சூரியன் கலை மன்றம், திராவிடர் கழகம் ஆகிய ஐந்து சங்கங்களும் இணைந்து நடத்திய அந்த வரவேற்பு சீ-வியூ ஹோட்டலில் சீனப் பிரமுகர் ஒருவரின் தலைமையில் நடைபெற்றது. கருத்து வேற்றுமைகளை மறந்து கலையின் பெயரால் ஒன்றுபட்ட இந்தியர்களின் கலையார்வத்தையும் பெருந்தன்மையையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

** ** **

கோலாலம்பூரிலிருந்து சுமார் இருபத்தைந்து கல் தொலைவில் உள்ள பத்து ஆராங் என்ற சிற்றூரில் ஒரு நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. அந்தச் சுரங்கத் தொழிலாளர் சங்க ஆண்டு விழாவில் நமது குழுவினரில் சிலர்

செம்பாவில் இருக்கும் மலாய்க்காரர்களின் பிரதிநிதிப் பரண் வீடு.



கலந்து கொண்டு, சீனர், மலாய்க்காரர், இந்தியர் ஆகிய முப்பெரும் இனத் தொழிலாளர்களின் அன்பு வரவேற்பை ஏற்றனர்.

ரவாங் என்னும் சிற்றூர் கோலாலம்பூரிலிருந்து பத்தொன்பதாவது கல்லில் உள்ளது. அங்கு இயங்கும் மலேயா இந்தியர் காங்கிரஸ் கிளை நிலையத்தாரும் நமது குழுவினரை வரவேற்றுப் பாராட்டினர். இந்தக் கிளை நிலைய நிர்வாகங்களில் முக்கியமானவர்கள் கேரள நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆயினும் மொழி வேற்றுமை கருதாது எல்லாரும் இந்தியர் என்ற முறையில் கலை ஆர்வத்துடன் தமிழ் நாடகக் குழுவுக்கு உற்சாகத்துடன் வரவேற்பளித்தது கண்டு பெருமிதம் அடைந்தோம்.

24. மூவாருக்குப் புறப்பாடு

ஜொகூர் ராஜ்யத்தில் உள்ள மூவார் என்னும் சிற்றூரில் இந்தியர் சன்மார்க்க சங்கம் ஒன்று சிறந்த பொதுநல மன்றமாகத் திகழ்கிறது. இந்தச் சங்கத்தின் சார்பில் ஒரு பள்ளிக்கூடமும் இயங்கி வருகின்றது. கல்விப் பணியாற்றும் சங்கத்துக்கு நல்லதொரு கட்டடம் அமைக்க வேண்டும் என்ற ஆவல் மூவாரில் வாழும் இந்தியப் பெருமக்களுக்கு எழுந்துள்ளது. சங்கப் பணியில் தளராது உழைத்து வரும் அன்பர் திரு சி. நாராயணன் செட்டியார் அவர்கள் பள்ளிக்கூட நிதிக்காக மூவாரில், நமது இராஜ ராஜ சோழன், கள்வனின் காதலி ஆகிய நாடகங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார்.

திரு நாராயணன் செட்டியார் அவர்கள் சிறந்த கலையன்பர். மூவார் ஜெயங்கொண்டான் ரப்பர் தோட்டத்தின் அதிபர். எடுத்த காரியம் எதிலும் வெற்றி காணும் திறம் படைத்தவர். எனவே அவருடைய ஏற்பாட்டின்படி ஜூன் இருபத்தோராம் தேதி கோலாலம்பூரிலிருந்து மூவாருக்குப் புறப்படுவதென்று முடிவு செய்தோம்.

மலேயாவின் கலைநகரில் ஏறக்குறைய ஒரு மாதகாலம் தங்கி அவர்கள் பலருடைய நட்புறவை ஈட்டினோம். ஆதலால் நகரை விட்டுப் புறப்படப் போகிறோம் என்ற செய்தி கேட்டு நண்பர்கள் கண் கலங்கினர். கோலாலம்பூர் தமிழர் பிரதிநிதித்துவ சபையார் செந்தூர் செட்டியார் மண்டபத்தில் திரு ஜி. குமாரசாமி அவர்கள் தலைமையில் ஒரு வழியனுப்பு உபசார விழா நடத்தினர்.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்ற வள்ளுவர் வாக்கின்படி, "நண்பர்களைப் பிரியப் போகிறோமே!" என்ற துயரம் எங்களுக்கும் கோலாலம்பூர் நண்பர்களுக்கும் இடையே பொங்கி எழுந்தது.


"எங்களைப் பற்றிய நினைவு உங்கள் கலை உள்ளங்களிலே பசுமையாக இருக்கட்டும்!" என்று சொல்வது போல் நமது வர்த்தக அடையாளமான பசுவின் சின்னத்தைப் பொன்னிலே பொறித்து வழங்கினார் அம்பாள் கம்பெனி அதிபர் திரு வி. பி. லிங்கத் தேவர்.

நாடகக் கலையின் புகழைப் "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே!" என்ற கருத்துடன், ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்து கொண்டு அழகிய பாராட்டுமொழிகளைப் பொழிந்த சட்டசபை உறுப்பினர் 'நாவலர்' எஸ். ஓ. கே. உபயதுல்லா அவர்கள், பிரிந்து செல்ல ஆயத்தமாக இருந்த எங்களுடன் என்ன பேசுவதென்றே தெரியாமல், அளவற்ற அன்பு காரணமாகத் திணறினார்.

இவர்களைப் போலவே எங்களோடு நெருங்கிப் பழகிய கெழுதகை நண்பர்களான திருவாளர்கள் பொன்னுத்துரை, பழனிவேல் பிள்ளை, 'மனோன்மணி விலாச' ராமசாமி, கே. கே. சாமி, கனகரத்னம் முதலியோரும் பிரிவுத் துயரத்தை எப்படியோ சமாளித்துக் கொள்ள முற்பட்டனர்.

கோலாலம்பூரில் எங்களிடம் உள்ளன்பு செலுத்திய இன்னொரு நண்பரைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். அவர் பெயர் திரு வெ. செல்லமுத்து. 'வெம்பிளி' சிகை அலங்கரிக்கும் நிலையத்தின் அதிபர் அவர். செந்தமிழ்

சிரம்பான் நகரின் எழில்மிக்க புகைவண்டி நிலையம்.





சிந்தாதிரிப்பேட்டை இளைஞர் சங்கத்தின் ஆதரவில், திரு எம். என். சீனிவாசனின் புத்திரியும் மகா வைத்தியநாத சிவனின் பேத்தியுமான குமாரி ஜயஸ்ரீயின் பரத நாட்டியம் சிறப்பாக நடைபெற்றது. எழும்பூர் ஒயிட்ஸ் மெமோரியல் ஹாலில் நடைபெற்ற இந்த நடன நிகழ்ச்சிக்குக் கர்நாடக சங்கீதக் கல்லூரியின் தலைவர் மூசிரி சுப்பிரமண்ய ஐயர் தலைமை வகித்தார். மேயர் தாராசெரியன் குமாரி ஜயஸ்ரீயின் நடனத்தைப் பாராட்டிப் பேசினார். ஜயஸ்ரீயின் ஹஸ்த அபிநயங்களில் பாவமும் லயமும் நிரம்பியிருந்தன.

ஆர்வமும், சீர்திருத்த நோக்கமும் கொண்டவர். எங்கள் குழுவினரில் சிலர் வெம்பிளி நிலையத்துக்குச் சென்ற சமயம் திரு செல்லமுத்துவும், அவருடைய நிலைய நண்பர்களும் மகிழ்ச்சிக் கடலிலே மூழ்கி, எங்களை எப்படி உபசரிப்பது என்ற உற்சாகத்தில் திணறினர். எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் உள்ளன்பும் உயர்ந்த தமிழ்ப் பற்றும், இருக்குமானால் எவருடைய உள்ளத்தையும் எளிதில் கவர்ந்துவிட முடியும் என்பதற்கு வெம்பிளி நிலையத்தார் எடுத்துக் காட்டாக விளங்கினர்.

ஏற்கனவே திட்டமிட்டபடி ஜூன் மாதம் இருபத்தோராந் தேதி காலையில், குழுவினர் அனைவரும் கோலாலம்பூரிலிருந்து கார்களிலே மூவார் நோக்கிப் புறப்பட்டோம். நகர எல்லையைக் கடந்ததும் மலாய்ப் போலீஸ்காரர்கள் கார்களைத் தடுத்து நிறுத்தினர். ஒருகணம் நாங்கள் திடுக்கிட்டோம்!

''ஏதாவது உணவுப் பொருள்கள் கொண்டு போகிறீர்களா ?'' என்று கேட்டனர்.

''ஒன்றும் எடுத்துப் போகவில்லை.''

''சரி, போகலாம்!'' என்று கைசைத்து அனுமதி தந்தனர் போலீஸார்.

நகரத்திலிருந்து சாலை வழியே பிரயாணம் செய்யும் எவரும் உணவுப் பொருள்களைக் கொண்டு செல்லக் கூடாது என்பது மலேயா அரசாங்கத்தின் ஆணை. காடுகளில் தலைமறைவாக வாழும் 'பயங்கரவாதி'களுக்கு யாரேனும் உணவுப் பொருள்களைக் கொண்டு போய்க் கொடுத்து விடாமல் தடுப்பதற்காகவே நகர எல்லையில் போலீஸ் சோதனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு எல்லா நகரத்தின் எல்லைகளிலும் போலீஸ் சோதனை நிலையங்கள் உள்ளன.

மலேயா அரசினர் பெண் போலீஸாரை இரண்டு ஆண்டுகளுக்கு முன் நியமித்துள்ளனர் என்பதையும் குறிப்பிடவேண்டும். பெண் போலீஸார் தேர்ந்தெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதும் நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் வந்தனவாம். ரப்பர் பால் வெட்டும் பெண் தொழிலாளி முதல் பள்ளி ஆசிரியைகள் வரை, பல துறைகளிலிருந்தும் பெண்கள் போலீஸ் வேலைக்கு விண்ணப்பம் இட்டார்கள். அவர்களில் 54 பேர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை உதவி போலீஸ் சூபரின்டென்டு திருமதி பர்பாரா வென்ட்வொர்த் என்னும் அம்மையார் ஏற்றார். தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களுக்குத் துப்பாக்கி பிடித்துச் சுடுவது முதல் எல்லாவிதமான பயிற்சிகளையும் திருமதி வென்ட் வொர்த் அளித்தார். இந்தப் பயிற்சி ஏழு மாதங்கள் நடைபெற்றது. இவ்வாறு பயிற்சி பெற்ற பெண்களில் நாற்பத்தேழு பேர் மலாய் இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆறு பேர் சீனப் பெண்கள். ஒருவர் இந்தியப் பெண். கோலாலம்பூர், ஈப்போ, பினாங்கு ஆகிய நகரங்களில் பெண் போலீஸார் பணியாற்றுகின்றனர். குறைந்தது நாலடி பத்து அங்குலம் உயரமுள்ள பெண்களே போலீஸாராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

முதன் முதலில் இன்ஸ்பெக்டர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பெண்களில் ஒரே ஒரு இந்தியப் பெண்ணும் பணியாற்றுகிறார்; இவர் பெயர் குமாரி எமிலி மாத்யூஸ்.

எங்கள் பிரயாணத்தின் போது சாலை ஓரங்களிலே ஆங்காங்கு டொரியான் பழங்களையும், மங்குஸ்தான் பழங்களையும் குவித்து வைத்துக் கொண்டு விற்பனை செய்யும் காட்சிகளைக் கண்டோம். மலாய்க்காரர்களுக்கே உரித்தான பரண் வீடுகள் பல எங்கள் கண்களுக்குத் தென்பட்டன. பெரும்பாலும் மரத்தினால் கட்டப்பட்ட இவ்வீடுகளின் தோற்றமும் அமைப்பும் புதுமையாகவும் வனப்பாகவும் உள்ளன.

முற்பகல் பத்தரை மணிக்கு, கோலாலம்பூரிலிருந்து நாற்பத்திரண்டு மைல் தொலைவில் உள்ள 'சிரம்பான்' என்னும் நகரத்தை அடைந்தோம். சிரம்பான் நகர் செம்பியான் மாகாணத்தின் தலை நகரம். ஒழுங்காக அமைந்துள்ள வீதிகளும், உல்லாசப் பூங்காவும் நகரத்துக்கு அணி செய்கின்றன. மலாய்க்காரர்களின் மாதிரிப் பரண் வீடு ஒன்று மக்கள் கண்டு மகிழ்வதற்காகவே சிரம்பானில் அமைக்கப்பட்டுள்ளது. காட்சிக்குரிய வீடாதலால் இதில் யாரும் குடியிருக்கவில்லை.

சிரம்பானில் பாரதி அச்சக உரிமையாளர் திரு இராம சின்னையன் அவர்கள் தம் குழுவினர் அனைவரையும் வரவேற்றுப் பாராட்டி விருந்தளித்தார். விருந்துக்குப் பின் பிற்பகல் இரண்டு மணிக்கு மீண்டும் பயணத்தைத் தொடங்கினோம். நாலு மணி அளவில் மூவார் படகுத் துறையை அடைந்தோம். (தொடரும்)

கல்கெமிகோவின்

காந்தரிடைன்

கூந்தல் தைலம்



கூந்தலை செழுமையாக வளரச் செய்வதில் இணையற்ற தெனப் பண்டைக்காலம் முதல் புகழ்பெற்ற **ஆலிவ் ஆயில்** அடங்கியுள்ளது.

மென்மையான நறுமணம் கொண்டது.

5 அவுன்ஸ் கொண்ட அழகான பாட்டிலில் கிடைக்கும்.

கல்கத்தா கெமிகல் கோ. லிட்., கல்கத்தா - 29.

CAN-TM-4

தென் இந்திய ஆபீஸ் : 5/149, பிராட்வே, சென்னை-1

ஆரோக்கியம் அளிப்பவை
அனைவரும் விரும்புபவை

TSR

ஊறுகாய்கள் : எலுமிச்சை, மாங்காய்
மற்றும் கதம்ப காய்கறி ஊறுகாய்கள்
ரோஜாப்பூ குல்கந்து





டி. எஸ். ஆர். & கோ

வாசனைத் திரவியங்கள் தயாரிப்பவர்கள்


கும்பகோணம் (S. India)

EP

தேனாம்பேட்டையில் நடைபெறும் காங்கிரஸ் பொருட்காட்சியிலுள்ள எமது ஸ்பெஷல் ஸ்டாலுக்கு விஜயம் செய்யுங்கள்




ஜனவரி 14ந் தேதி முதல்
சென்னை மற்றும் தென்னுடெங்கும்
அசோகா
பிக்சர்ஸ்....
பூலோக
ரம்பை
டைரக்ஷன்
D.யோகானந்த்





கிண்டி தொழிற் பேட்டை திறப்பு விழா



சென்னைக்கு அருகில் இருக்கும் கிண்டி ஏற்கெனவே குதிரைப் பந்தயத்திடலினால் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இப்பொழுது அங்கு உருவாகி இருக்கும் தொழிற்பேட்டையின் மூலம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்கிறது. இங்கு எழுபது லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் தொழிற்பேட்டையைப் பாரதத்தின் பிரதமர் நேரு அவர்கள் சென்ற ஏழாம் தேதி காலையில் திறந்துவைத்தார். பேட்டையைத் திறந்து வைக்க வந்த பிரதமரைச் சென்னை ராஜ்ய தொழில் மந்திரியும், தொழில் வர்த்தக டைரக்டரும் வரவேற்றுப் பேசிய பின் விழா ஆரம்பமாகிறது. இந்த விழாக் காட்சிகள் சிலவற்றை இந்தப் பக்கத்தில் காணலாம்.

1. பிரதம மந்திரி மேஜை மீது இருந்த சிறிய அட்டையில் கையொப்பமிட்டதும் மேடையிலிருந்த திரை தானாகத் திறந்து கொண்டது. சரஸ்வதி கையில் வீணையுடன் காட்சி அளித்தாள். எல்லா விளக்குகளும் எரிந்தன. தானாகவே தேங்காய் உடைந்தது. கற்பூரம் எரிந்தது. நாகஸ்வர இசை எழுந்தது. இந்தக் காட்சியைக் கண்டு நேருஜி வியப்படைந்தார். 2. 3. தொழிற்கூடப் பகுதிகளைப் பிரதமர் பார்வையிடுகிறார். 4. அதிகாலையிலேயே ஆயிரக்கணக்கில் கூடியிருந்த மக்கள் முன்னிலையில் தொழிற் பேட்டையைத் திறந்து வைத்து உணர்ச்சியுடன் பேசுகிறார் பிரதமர் நேரு. போட்டோ: விக்க







தமிழ்க் கலைக் களஞ்சிய ஐந்தாவது தொகுதி வெளியீட்டு விழாவைப் பிரதமர் ஜவாஹர்லால் நேரு ஆரம்பித்து வைத்த காட்சிகளை இந்தப் பக்கத்தில் காணலாம்.

1-2. பிரதம மந்திரி தமிழ்க் கலைக் களஞ்சிய வெளியீட்டில் பேசுகிறார். 3. தமிழ்க் கலைக் களஞ்சிய ஐந்தாவது தொகுதிப் பிரதியைக் கழகத் தலைவர் திரு அவிநாசிலிங்கம் செட்டியார் பிரதம மந்திரிக்கு அளிக்கிறார். 4. தமிழ் வாழ்த்துப் பாடலுக்குத் தலைவர்கள் கரம் குவித்து நிற்கின்றனர்.

தமிழ் கலைக் களஞ்சிய வெளியீட்டு விழா



விஞ்ஞான காங்கிரஸ்






சென்னையில் ஜனவரி ஆறாந் தேதி நாற்பத்தைந்தாவது இந்திய விஞ்ஞான காங்கிரஸ் கூடியது. இந்த விஞ்ஞான மகா நாட்டைப் பாரதப் பிரதமர் நேருஜி துவக்கி வைத்தார். தேசத்தின் முன்னேற்றத்துக்கு அடிப்படைத் தேவையான விஞ்ஞானத்தை மகாநாட்டில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட இந்திய, அயல் நாட்டு விஞ்ஞானிகள் கூடி ஆராய்ந்தனர். இந்த மகாநாட்டுக் காட்சிகள் சிலவற்றை இந்தப் பக்கத்தில் காணலாம். 1. பாரதப் பிரதமர் விஞ்ஞான காங்கிரஸ் மகாநாட்டுக்கு வருகிறார். 2. அயல் நாடுகளிலிருந்து விஜயம் செய்த விஞ்ஞான மேதைகள். 3. நேருஜி மகா நாட்டுத் துவக்கவுரை நிகழ்த்துகிறார். 4. விஞ்ஞானக் கண்காட்சியில் விஞ்ஞானத்தின் விந்தைகளை நேருஜிக்கு விளக்குகிறார் ஒரு விஞ்ஞானி.











செஞ்சி எஸ். சந்தானம் அவர்களுக்கும் செளபாக்யவதி பங்கஜத்துக்கும் டிசம்பர் முதல் தேதியன்று திருச்சியில் திருமணம் நடந்தேறியது.




பம்பாய் மாதுங்காவில் திரு எம். ஆர். ராமச்சந்திரன் அவர்களுக்கும் திருமதி பி. எஸ். சீதாலக்ஷ்மிக்கும் விவாகம் விமரிசையாக நடந்தேறியது.




தக்ஷிண ரயில்வேயைச் சேர்ந்த திரு எம். கே. சீனிவாசனுக்கும் திருமதி பானுமதிக்கும் சமீபத்தில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்



ஏர் இந்தியா இண்டர் நேஷனலைச் சேர்ந்த திரு கிருஷ்ணமூர்த்திக்கும் திருமதி லக்ஷ்மிக்கும் பம்பாயில் விவாகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.



இக்கர பிரைவேட் கம்பெனியைச் சேர்ந்த திரு ராமகிருஷ்ணனுக்கும், பொன்னம்மாளுக்கும் பூனாவில் திருமணம் விமரிசையாக நடந்தது.

புதிய வர்ணத்திருத்த வசதியுள்ள ஐஸோலா காமிரா மூலம் புது வண்ணக் குதூகலமடைக

Agfa ஐஸோலா

வண்ணப் புகைப்படக் கலையில் முதல்வர்களால் மலிவு விலையில் 6.3 லென்ஸ் பொருத்தப்பட்டு விற்கப்படும் முதல் காமிரா யுத்த காலத்திற்குப் பிறகு இதுதான். அக்பா 120 பிலிம் சுருளில் பெரிய 2¼"×2¼" அளவில் 12 கலர் அல்லது சாதாரப் படங்கள் எடுக்கலாம். மாதரும் ஆடவரும் ஒருங்கே விரும்பும் காமிரா!



ஐஸோலாவின் முக்கியாம்சங்கள்:

★ விசேஷ முறையில் முப்பொருள் சேர்ந்த வர்ணத் திருத்தமுள்ள, பூச்சு வகை அக்பா அக்ஷர் 6.3 லென்ஸ்

★ புதிய ஷட்டர்—மூன்று வேகங்கள் 1/30, 1/100 & B.

★ பிளாஷ் இணைக்கக்கூடியது.

★ இரட்டை எக்ஸ்போஷர் தடுப்பு விசை

★ தெளிவான வியூபைண்டர்

★ கேபிள் ரிலீஸ் ஸாக்கெட், இதர வசதிகளடங்கிய பெட்டி.

ரூ. 80/- விலைக்கே கிடைக்கும்

அழகிய பிளாஸ்டிக் எவர் ரெடி கேஸ் ரூ. 14/-

அசல் தோல் கேஸ் ரூ. 27/-

அக்பா இந்தியா பிரைவேட் லிமிட்.

பம்பாய் ● புதுடில்லி ● கல்கத்தா ● சென்னை

AGFA.56.30 TA

விசித்திரச் சலங்கை

— கதை —
வாண்டு மாமா
— படம் —
பாபு

5




சமையலோ ஆகி விட்டது. நேரத்தை வீணாக்காமல் இந்தப் பானைகளில் சித்திர வேலை செய்து வைப்போம்
சித்திரக்கலையிலே வல்லவளான மஞ்சு தேவதத்தன் வீட்டுப் பானைகளில் சித்திர வேலைப்பாடு செய்து வைக்கிறாள்.
அதோ அவர்கள் வந்து விட்டார்கள். பசியால் களைத்து வரும் அவர்கள் சாப்பிட ஏற்பாடு செய்வோம்.
ஆ... ஆ.. இதென்ன பதார்த்தங்களைப் பாழாக்கி இருக்காளே! அந்த மோசம்! இன்னிக்குப் பட்டினி தான் போ.
பசிக்குச் சோறு ஆக்கிப் போடக் கூடத் தெரியாதா நீ என்ன பெண்? ம்... குழம்பையும் கறிகாயையும் வாயில் போட்டுப்பார்
தொடரும்...

மாயப் பந்து

ராஜி

42. அழியாச் செல்வம்

மால்கோஷின் சுய புத்தியை இழக்கக் கார்குரு ரகசிய மருந்தை உபயோகித்தான் அல்லவா? அவன் யாரிடமாவது அந்த ரகசியத்தைச் சொல்லி விட்டானோ என்று எண்ணிப் பயந்தான் கார்குரு. சிந்தித்ததில் கார்குருவுக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது.



'நான் மால்கோஷின்மீது உபயோகித்த மருந்தைப்பற்றி எனது குருவாகிய மந்திரக் கிழவிக்குத்தான் சொன்னேன். ஆனால் மால்கோஷுக்கும் மந்திரக் கிழவிக்கும் என்ன சம்பந்தம்? அவர்கள் ஒருவரை யொருவர் கூட அறிந்து கொண்டிருக்க மாட்டார்களே. அப்படி மால்கோஷ் அவளுக்கு வேண்டியவனாக இருந்தால் அதைப் பற்றி என்னைச் சந்தித்தபொழுது ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் போயிருப்பாளா? இந்த விஷயத்தில் நான் என் குருவாகிய மந்திரக் கிழவிக்குக் கோபம் வராமல் நடந்து கொள்ள வேண்டும். இப்பொழுதே சென்று மந்திரக் கிழவியைப் பார்த்து அவளுக்கு ஏதாவது உண்மையான விவரம் தெரிந்தால் அதை அறிந்து கொண்டு வரலாம்' என்று நினைத்து மந்திரக் கிழவியைச் சந்திக்கப் புறப்பட்டான்.

கார்குரு மந்திரக் கிழவியைச் சந்தித்தவுடன் மரியாதையாக வணங்கி நின்றான். அவனைப் பார்த்த மந்திரக் கிழவி, "கார்குரு! நீ மால்கோஷின்மீது உபயோகித்த மருந்து கடைசியில் பலனற்று அல்லவா போய்விட்டது? நான் உன்னைச் சந்தித்தது அவர்களைப் பற்றிச் சொல்லவே தான். ஆனால் நான் உன்னைச் சந்திப்பதற்கு முன்பேதான் நீ மால்கோஷுக்குத் தீங்கு விளைவித்து விட்டாயே. அதனால்தான் நான் ஒன்றும் பேசாமல் மால்கோஷின்மீது நீ உபயோகித்த மருந்தின் விவரத்தை மாத்திரம் அறிந்தேன். கலாவை உன் வீட்டுக்கு நீ அழைத்து வந்தபொழுது நான் உன் வீட்டை விட்டுப் போவதாக நடித்தேனே தவிர,



உன் வீட்டுக்குச் சமீபத்தில் தான் இருந்தேன். கலாவுக்கு நீ ஏதாவது தீங்கு இழைப்பாயோ என்று எண்ணினேன். அப்படி இருந்தால் அந்த விஷயத்தில் குறுக்கிட்டிருப்பேன். ஆனால் மறுநாள் காலையில் சௌக்கியமாக உன் வீட்டைவிட்டு அவன் சென்ற பிறகுதான் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வந்தேன்" என்றாள்.

"அப்படியானால் மால்கோஷ் தன் ஞாபகசக்தியை மறுபடியும் பெறுவதற்கு நீங்கள் உதவி செய்வீர்களா ?"

"ஆமாம்!"

"என் தவறை நான் உணர்ந்தேன். நான் ஒரு பைத்தியக்காரனைப் போலவேதான் நடந்திருக்கிறேன். நான் செய்ததை நினைத்தாலே எனக்கு வெட்கமாக இருக்கிறது."

"நீ செய்ததை நினைத்து வருந்தினால் அதுவே போதும். மால்கோஷைச் சந்திப்பதற்கு முன்பு நானும் சரியாக நடந்து கொண்டிருந்தேன் என்று சொல்ல முடியாது. போனது போகட்டும். மால்கோஷ் உன்னைச் சந்தித்தபொழுது அவனிடம் இருந்த மாயப் பந்தை நீ எடுத்து வைத்திருக்கிறாயா ?" என்று கேட்டாள் கிழவி.


உடனே கார்குரு, "அம்மா! நான் மாயப் பந்தை அவன் சட்டைப் பையிலேயேதான் வைத்து விட்டேன். ஞாபக சக்தியை இழந்திருக்கும் மால்கோஷுக்கு அந்தப் பந்து உதவிபுரியட்டும் என்ற நோக்கத்துடனே தான் அந்தப் பந்தை அவனிடமே விட்டு வைத்தேன். அந்தப் பந்து மால்கோஷிடமிருந்து காணாமல் போய் விட்டதாக உங்களுக்குச் செய்தி கிடைத்திருக்கிறதா?" என்று கேட்டான்.

"ஆமாம். பந்து அவனிடத்தில் இப்பொழுது இல்லை என்று தெரியும். அந்தப் பந்து இல்லாமல் மால்கோஷும் கலாவும் அவர்கள் தகப்பனாரைப் பார்க்க முடியாது. அதனால்தான் அதைப் பற்றிக் கவலை கொண்டிருக்கிறேன்" என்றாள் மந்திரக் கிழவி. உடனே கார்குரு, "நானும் என்னால் முடிந்த வரையில் அந்தப் பந்து இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்கிறேன்" என்று உறுதி கூறிவிட்டு, மந்திரக் கிழவியிடம் விடைபெற்றான்.

மாஞ்சி நாட்டு அரசனும், ராணியும் தனது புதல்வனான இலெந்திரனுக்குக் கலாவை மணம் முடிக்க வேண்டும் என்று ஆவல் கொண்டிருந்தார்கள். அவர்கள் கருத்தை மால்கோஷிடம் தெரிவித்தார்கள். அதைக் கேட்ட மால்கோஷ் சந்தோஷமடைந்தான். "அரசே! எனக்கும் அதுதான் அபிப்பிராயம். ஆனால் இதைப் பற்றித் தாங்கள் என் தகப்பனாரிடம் தெரிவித்து அவருடைய சம்மதத்தைப் பெறுவதுதான் நியாயம்" என்றான்.

அதற்கு அரசன், "ஆமாம்; அதற்கு என்ன சந்தேகம்! உங்கள் விருப்பத்தைத் தெரிந்துகொண்டு மால்மாவைக் கேட்கலாம் என்று நினைத்தேன். நாளைக் காலை நாம் அனைவரும் புறப்பட்டு மால்மாவைச் சந்திக்கலாமா?" என்றான்.

"எங்கள் தகப்பனாரை நாங்கள் சந்திக்க முடியாத நிலையில் இருக்கிறோம். எங்கள் தகப்பனார் எங்களிடம் ஒரு மாயப்பந்து கொடுத்திருந்தார். அது இப்பொழுது



காணுமல் போய் விட்டது. அந்தப் பந்து இல்லாமல் நானும் என் தங்கை கலாவும் என் தகப்பனரைப் பார்க்கக் கூடாது என் பது நிபந்தனை.''

''பந்து இருக்கும் இடம் தெரிந்தால் அல்லவோ நீங்கள் அதைத் திரும்பிப்பெற லாம்? பந்து இருக்கும் இடத்தை எப்படிக் கண்டு பிடிப்பது?'' என்ருன் அரசன்.

உடனே மால்கோஷ், ''எனக்கு ஒரு வழி தோன்றுகிறது. நாளைக் காலை நானும் கலாவும் எங்கள் மந்திர ஜமக்கா ளத்தில் புறப்பட்டுப் பந்தைத் தேடுகிறோம். கட்டாயம் பந்தைக் கண்டுபிடித்துத் திரும்பி மாஞ்சி நாட்டுக்கே வந்து உங்களைச் சந்திக் கிறோம்'' என்ருன்.

மறுநாள் காலையில் மால்கோஷும், கலாவும் மந்திர ஜமக்காளத்தில் பிரயாணம் செய்வதற்குத் தயாராக இருந்தார்கள். அவர்களை வழியனுப்பும் நோக்கத்துடன் மாஞ்சிநாட்டு அரசனும், ராணியும், ஜிலேந் திரனும் அவர்கள் அருகில் நின்று கொண் டிருந்தார்கள்.

பள்ளிக்கூடம் அடர்ந்த காட்டிலிருந்து ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த பொழுது மாயப் பந்தை உபாத்தியாயர் பையன்களிடமிருந்து பிடுங்கி விட்டெறிந் தார் அல்லவா? அந்தப் பந்து கீழே விழ வில்லை. பந்து எறிந்த சமயத்தில் சூரிய னைப் பார்த்து ஒரு துறவி இரண்டு கைகளை யும் பிரித்து வைத்தபடியே தியானம் செய்து கொண்டிருந்தார். எறியப்பட்ட பந்து தொப்பென்று துறவியின் கைகளில் வந்து விழுந்தது. ''இது என்ன என் கைகளில் பந்து விழுந்திருக்கிறதே'' என்று கண்ணை விழித்துப் பார்த்தார் தவசி. கைகளில் ஒரு புதிய பந்து இருப்பதைப் பார்த்தார். பிறகு ஒரு பெரிய கட்டடம் பறந்து போவதையும் பார்த்து வியந்தார்.

''இந்தப் பந்து ஒரு புதிய பந்தாகவே தோற்றமளிக்கிறது. அந்தக் கட்டடத்தில் இருக்கும் ஒரு பையன் கைகளிலிருந்து தான் கை தவறிக் கீழே விழுந்திருக்க வேண்டும். இந்தப் பந்து அதன் சொந்தக் காரரிடம் போய்ச் சேர்ந்தால் நன்ருக இருக் குமே'' என்று சொல்லிக்கொண்டே பந்தை இரண்டு முறை கீழே போட்டுப் பிடித்தார். அடுத்த கணம் பந்து பறந்தது. மந்திர ஜமக்காளத்தில் பறந்து செல்வதற்குத் தயாராக இருந்த மால்கோஷின் காலடி யில் போய் அது விழுந்தது.

''இதோ மாயப்பந்து! இதோ மாயப் பந்து!'' என்று குதித்தாள் கலா.

''எங்கே? எங்கே?'' என்று ஆவலுடன் எடுத்தான் மால்கோஷ். பந்து எப்படிச் சமயத்தில் அங்கு வந்து சேர்ந்தது என்று அனைவருக்கும் ஆச்சரியமாகவே இருந்தது.

மாஞ்சி நாட்டு அரசன் சந்தோஷங் கொண்டு, ''மால்கோஷ்! இது உன் மாயப் பந்துதானு? எங்கே அதன் சக்தியைக் காட்டு, பார்க்கலாம்'' என்ருன்.

மால்கோஷுக்கும் அந்தப் பந்து தன் பந்தாகத் தோன்றிய போதிலும் இரண் டாம் முறையாகத் தண்ணீரில் விழுந்ததி ஞல் அதன் சக்தி அதனிடம் இருக்குமோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. அந்தப் பந்து தண்ணீரில் விழவில்லை என்பது அவனுக்கு எப்படித் தெரியும்? சற்றுப் பயந்துகொண்டே 'மாஞ்சி நாட்டு அரசனின் கழுத்தில் நல்ல ரோஜா மலர்களினுல் செய்யப்பட்ட ஒரு மாலை வர வேண்டும்' என்று நினைத்துக் கொண்டே பந்தைக் கீழே போட்டுப் பிடித்தான். ஒரு ரோஜாப்பூ மாலை அரசனின் கழுத்தில் தோன்றியது.

அதைப் பார்த்த கலா சந்தோஷத்தினுல் குதித்தாள். ''அண்ணு! நாம் நினைத்த படி இந்தப் பந்து இரண்டாவது தடவை தண்ணீரில் விழவில்லை. அப்படி இருந் தால் அதன் சக்தி அதனிடம் இருக்காது. கடவுளின் கருணையால் இந்தப் பந்து யார் யார் கைகளிலோ சிக்கி சமயத்துக்கு நம்மைவந்து அடைந்திருக்கிறது''என்ருள்.

பிறகு, மந்திர ஜமக்காளத்தில் மாஞ்சி நாட்டு அரசனும், ராணியும், ஜிலேந்திர னும் உட்கார்ந்தார்கள். கலாவுக்குப் பக்கத் தில் மால்கோஷ் உட்கார்ந்தான். ஜமக் காளம் 'ஜாம் ஜாம்' என்று பறந்து மால்மா வின்வீட்டை அடைந்தது. மால்கோஷையும், கலாவையும் அன்புடன் மால்மா தழுவினுர்.

அதே சமயத்தில் மஹாராணு பட்டணத்து அரசன் தன் புதல்வி ரூபிகாவையும் அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தான்.

எல்லோருடைய விருப்பத்தின்படியும் மால்மாவின் வீட்டிலேயே ஜிலேந்திர னுக்கும் கலாவுக்கும், மால்கோஷுக்கும் ரூபிகாவுக்கும் கலியாணம் வெகு விமரிசை யாக நடைபெற்றது. மந்திரக் கிழவி, ஏழு சித்திரக் குள்ளர்கள், கார்குரு அனைவரும் திருமணத்துக்கு வந்திருந்தார்கள்.

தான் செய்த குற்றத்துக்குக் கார்குரு மால்மாவிடம் மன்னிப்பு கேட்டுக் கொண் டான். ஆனுல் மால்மா ''அப்பா! நீ அப்படிச் செய்திராவிட்டால் என் குழந்தை கள் எப்படி அனுபவசாலிகளாக ஆக முடியும்?'' என்று கூறினுர்.

மந்திரக் கிழவிக்கும், ஏழு சித்திரக் குள்ளர்களுக்கும் மால்மா தன் நன்றி யைத் தெரிவித்தார்.

மால்கோஷையும், கலாவையும் அணைத் துக் கொண்டு, ''நான் உங்களுக்குத் தேடி வைத்திருக்கும் செல்வம் அழிந்து போகக் கூடியது. ஆனுல் நீங்கள் பல ஊர்களுக் குச் சென்று தேடி வந்த அனுபவம் தான் உங்களது அழியாச் செல்வம்!'' என்று அவர்களை ஆசிர்வதித்தார். (முற்றும்)


ஏழாம் அத்தியாயம்
கல்யாண விஷயம்

அவளுக்குப் பதினேழு பதினெட்டு வயது இருக்கும். கண்ணை ததும்பும் மாநிற முகத்தில் ஆளை மயக்கும் கருவிழிகள். இளமையின் பரிபூரண ஆசியைப் பெற்ற அங்கங்களில் ஒரு அபூர்வமான கவர்ச்சி, அநாயாசமான தெளிவு, அலட்சியமான அலங்காரப் பேச்சு!

கந்தசாமி மலைத்து நின்றான்.

"ரோட்டிலே நடக்கறச்சே பார்த்துப் போக வேண்டாமா என்று கேட்டால் முழிக்கிறாயே?" என்றாள் அவள்.

இரவு பூராவும் கண் விழித்த கலக்கத்தினால் ஏற்பட்ட கனவுக் கோளாறு அல்லது உண்மையாகத் தான் எதிரே அந்த அழகி நிற்கிறாளா என்று மீண்டும் டபடா வென்று கண்களைக்கொட்டிக் கொட்டிப் பார்த்தான்கந்தசாமி. கனவல்ல என்று நிச்சயமானதும் தொண்டையைக் கனைத்தான். ஆனால் பேச்சு வெளிவர மறுத்தது. தான் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்கவும் அவனது 'அந்தஸ்து' இடமளிக்க வில்லை.



கான்ஸ்டபிள் கந்தசாமி

ஏ.கே.பட்டுசாமி

எச்சிலைக் கூட்டி விழுங்கிக் கொண்டே வேறு பக்கமாகத் திரும்பிப் பார்த்தான்.

அவனது முகச் சேஷ்டைகளைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்து விட்டது. 'களுக்' கென்று அவள் நகைத்தாள். அதைக் கேட்டவுடனேயே கந்தசாமி கீழே குனிந்து ஒரு கல்லைப் பொறுக்கி எடுத்துக் கையை ஓங்கினான்.

"ஐயையோ!" என்று தலையைப் பிடித்துக் கண்களை மூடிக்கொண்டு அவள் அலறினாள். அடுத்த கணம் 'வள் வள்' என்று ஊளையிட்டுக் கொண்டே ஓடியது தூரத்திலிருந்த நாய்.

அவள் பெருமூச்சு விட்டாள். அவன் கலகல வென்று நகைத்தான்.

"நல்ல ஆளையா நீ! என்னைத்தான் கல்லாலே அடிக்கப் போகிறாயாக்கும் என்று பயந்தே போயிட்டேன்."

"ஹூம், உன்னைக் கல்லாலே அடிக்க எனக்குப் பயித்தியமா புடிச்சிருக்குது? பொது வழியிலே அநாவசியமாக நின்று தொந்தரவு கொடுக்கும் ஒரு பிராணிக்குத் தண்டனை கொடுத்தேன்; அவ்வளவு தான்" என்றான். ஹாஸ்யமாகப் பேசி விட்டதாக அவனுக்கு எண்ணம்!

அவளும் சிரித்துக் கொண்டே, "வாஸ்தவம்தான், மனுஷக் கேசு ஒன்றும் சரியாகக் கிடைக்காமப் போனால் இந்த நாய்க் கேசையாவது கவனிக்க வேண்டியதுதானே!" என்றாள்.

அவளது துடுக்கான பேச்சு அவனைச் சுருக்கென்று குத்தியது. ரோஷத்தோடு தனது இளம் மீசையை முறுக்கிய வண்ணம், "இதோ பாரு. உன்னைத் தவிர இந்தப் பேச்சை வேறே யாராவது பேசி யிருந்தால் சும்மா விட்டிருக்க மாட்டேன்! இந்தக் கந்தசாமி சமாசாரம் உனக்குத் தெரியாது. கேடிங்களுக்கும் பிக்பாக்கெட்காரன்களுக்கும் ஐயா பேரைக் கேட்டாலே குலை நடுக்கமாக்கும், தெரியுமா? நேத்து சாயங்காலம் கூட இந்திரா டாக்கீஸுக் கருகிலே ஒரு கிழவனைப்புடிச்சு..." என்றான்.

"கிழவரையா?... இந்திரா டாக்கீஸுக்குப் பக்கத்திலேயா?" என்று ஆவலோடு கேட்டாள் அவள்.

"ஆமாம், அவனைப் புடிச்சு...."

"அவர் பெயர் என்ன தெரியுமா உங்களுக்கு?....பார்வைக்கு எப்படி இருந்தார் அவர்?"

அவளது குரலில் தொனித்த ஆதுரத்தைக் கண்டு கந்தசாமி வியப்படைந்தான். ஒரு கணம் யோசித்தான். போலீஸ் மூளையல்லவா? நாலும் நாலும் எட்டு என்று கணக்குப் போட்டுப் பார்த்ததும் பளிச்சென்று விஷயம் புரிந்து போய் விட்டது. அவளை ஏற இறங்க உற்றுப் பார்த்தான். மூத்துப் புலவர் வர்ணித்தபடியே 'பச்சைக் கிளி' போலத்தான் இருந்தாள் அந்தச் சொர்ணக் கொடி.



அவனுக்குத் தெம்பு பிறந்து விட்டது. தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டே, "கொஞ்சம் பொறு சிங்காரி! பொறு!" என்றான்.

அவளது முகம் ஆச்சரியத்தினால் மலர்ந்து வெட்கத்தினால் சிவந்தது.

"என்னுடைய பெயர் உங்களுக்கு..."

"எப்படித் தெரியும்னு கேட்கிறாயா? ஹூம், இப்பத் தெரியுதா இந்தக் கந்தசாமி எப்படிப் பட்டவன் என்று? உன் பெயரை மாத்திரமில்லே, உங்க பாட்டி பெயரை வேணுமென்றால் கூடக் கண்டு பிடிச்சுடுவேன்! பக்கா 'ஸி. ஐ. டி.' போலீஸ்காரனுக்கும் தெரியுமா? இன்னும் கேளு! இப்ப நீ உன் அப்பாவைத் தேடிக்கிட்டு வந்திருக்கே! சரிதானா?"

கைதேர்ந்த ஆருடக்காரனைப் போல் பளிச் பளிச்சென்று விஷயங்களைக் கூறும் அவனைப் பிரமிப்போடு பார்த்துக் கொண்டே நின்ற சிங்காரி, "இப்போது அவர் எங்கே இருக்கிறார்?" என்று மிக ஆவலோடு கேட்டாள்.

"பயப்படாமல் வீட்டுக்குப் போ. இவ்வளவு நேரம் அங்கு வந்திருப்பார்."

அவனது பேச்சை நம்புவதா கூடாதா என்று புரியாமல் தயங்கித் தயங்கி நின்றாள் சிங்காரி.

"என் பேச்சை நம்பிப் போ சிங்காரி. காளிங்கராயன் தெருதானே? அப்புறமா வந்து பார்க்கிறேன்; உன் அப்பா கிட்டே சொல்லி வை. கட்டாயம் வருவேன். மறந்துடாதே!"

அவளது உருவம் கண்ணுக்கு மறையும் வரையில் அங்கேயே நின்று பார்த்துக் கொண்டிருந்தான் அவன். அவளும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு சென்றாள். மனத்தில் நிரம்பி யிருந்த ஆனந்தத்தால் அவளுடைய உதட்டில் மலர்ந்திருந்த புன்னகை வெகு நேரம் வரையில் வாடவில்லை.

சிங்காரியைப் பார்த்தது முதல் கந்தசாமியின் மனம் இன்பக் கனவுகள் காணத் தொடங்கியது. அந்த அழகியை மீண்டும் பார்க்க ஆவல் உந்தியது. புலவர் என்னவோ அவனை வீட்டுக்கு வரச் சொல்லித்தானிருந்தார். ஆகவே ஓரிரண்டு முறை காளிங்கராயன் தெருவில் 'பாரா' கொடுத்துப் பார்த்தான். ஆனால் வீட்டிலிருந்துகேட்ட பேரிடி முழக்கத்தைக் கொண்டு, பத்திரகாளி கோயிலுக்குள்ளே தானிருக்கிறது என்று புரிந்து கொண்டான். உள்ளே சென்றால் புலவருக்குக் கிடைக்கும் 'பிரசாத'த்தில் தனக்கும் பாதிப் பங்கு கிடைத்து விடும் என்று அஞ்சித் திரும்பினான்.

நாட்கள் ஓடிக்கொண்டேயிருந்தன.

ஸ்டேஷனிலும் அவனுக்கு ஓய்ச்சல் ஒழிவில்லாமல் வேலை இருந்து கொண்டேயிருந்தது. எதற்கெடுத்தாலும் அந்த இன்ஸ்பெக்டரும் ஹெட் கான்ஸ்டபிளும், "கந்தசாமி இங்கே வா. இதைக் கவனி, அங்கே ஓடு!" என்று விரட்டிக் கொண்டே யிருந்தனர்.

அன்று என்ன ஆனாலும் சரி, பார்த்து விடுகிறது என்ற தீர்மானத்துடன் அவ்வீட்டினுள் நுழைந்தான். நல்ல காலமாக அந்தச் சமயத்தில் கண்ணம்மாள் வீட்டில் இல்லை. ஆகவே புலவர் சற்றுச் சுதந்திர புருஷராகவே விளங்கினார். சிங்காரியும் தகப்பனாரோடு சேர்ந்து, அவனோடு சிரிக்கச் சிரிக்கப் பேசினாள். அவள் வைத்துக் கொடுத்த காப்பி அவளது அழகைப் போலவே கிறுகிறுக்கச் செய்வதாக இருந்தது.

"என்ன ஆச்சு? ஏதாவது சண்டை பிடிச்சாங்களா அன்றைக்கு?" என்று சிங்காரியைப் பார்த்தவண்ணம் புலவரைக் கேட்டான் கந்தசாமி.

"என்னமோ கந்தசாமி! எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. அவள் என்னிடம் இது வரையில் அதைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை" என்றார் முத்துப் புலவர்.

சிங்காரி குறுக்கிட்டாள்.

"இல்லீங்க, அன்றைக்குக் காலையிலேயே சின்னம்மாவுடைய சிநேகிதி வந்திருந்தாங்க. என் கல்யாண விஷயமாக இரண்டு பேரும் ஏதோ மும்முரமாகப் பேசிக்கிட்டிருந்தாங்க. 'இந்தச் சமயத்திலே உன் புருஷன்கிட்ட சண்டை இண்டை போடாதே! காரியத்



தைக் கெடுத்து வைச்சிடும்" என்று அந்த அம்மா சொன்னாங்க. அதனாலேதான் சின்னம்மா இதைப் பற்றி ஒன்றுமே கேட்கவில்லை'' என்றாள் அவள்.

''உன் கல்யாணத்தைப் பற்றியா?'' என்று சற்றுப் பரபரப்போடு அவளிடம் கேட்டான் கந்தசாமி.

''என் உயிரில் உடல் இருக்கிற வரையில் என் மகளைக் கண்டவனுக்குக் கட்டிக் கொடுக்க மாட்டேன்'' என்று ஆத்திரத்தோடு உளறிக் கொட்டினார் முத்துப் பிள்ளை.

இதே சமயம் வெளித்தோட்டக் கதவு திறக்கப்படும் ஓசை கேட்கவும் அவர்களுடைய மந்திராலோசனை தட்டென்று முடிவடைந்தது. சிங்காரி கூடத்தை நோக்கி விரைந்தாள். மருதம்மாளோ உள்ளே நுழைந்த கண்ணம்மாள், ''சிங்காரி, கொஞ்சம் சீக்கிரமா காப்பி வைச்சுக்குடு. மருதத்துக்குத் தலையை வலிக்குதாம்'' என்று கூறிக்கொண்டே தன் அறையை நோக்கி நடந்தாள்.

முத்துப்பிள்ளை கந்தசாமியைப் பார்த்துக் கையை அசைத்து, ''போய்விடு, போய் விடு! அப்புறமா பார்க்கிலே சந்திக்கலாம். உன்னிடம் ரொம்ப முக்கியமான விஷயமெல்லாம் பேசணும்!'' என்று ரகசியமாகக் கூறினார்.

கந்தசாமி அந்த மனிதரைப் பரிதாபமாகப் பார்த்துக்கொண்டே அவ்வீட்டை விட்டுப் பிரிய மனமின்றிப் பிரிந்தான்.

எட்டாம் அத்தியாயம்

கருப்பண்ணசாமி

அன்றிரவு மணி பன்னிரண்டிருக்கும். அமாவாசைக்கு அடுத்த தினமாகையால் வானம் இருண்டு கிடந்தது.

கந்தசாமி கும்பாளம்மன் சந்தில் 'பீட்' கொடுத்துக் கொண்டிருந்தான். அந்தச் சிறு தெருவிலிருந்த மூன்று மின்சார விளக்குகளில் இரண்டு விளக்குகள் எரியவில்லை. பக்கத்து வீதித்திருப்பத்திலிருந்து ஒரு ஆசாமி கையில் ஏதோ ஒரு மிக நீளமான பொருளுடன் வந்து கொண்டிருந்தான். அப்போலீஸ் வீரனின் மனம் 'ஜாக்கிரதை! வருகிறவன் திருடனே தான்! விடாதே!' என்று எச்சரித்தது.

''ஏய் நில்லு அங்கேயே!''

வந்தவன் எட்டவே நின்றான்.

இரண்டே தாவலில் கந்தசாமி அவன் நின்ற இடத்தை நோக்கிப் பாய்ந்தான். வந்தவனின் கையில் ஒரு நீளமான ஏணி இருந்தது. ஒருகால் சுவரேறிக் குதிப்பதற்காகவா?....

''என்ன அப்பேன், இந்த நேரத்திலே எங்கே புறப்பட்டே?''

''நான் ரோட்டு விளக்கு ரிப்பேர்காரனுங்க! இந்தத் தெரு விளக்கை ரிப்பேர் பண்ணுவதற்கு வந்தேனுங்க!''

''அட சரிதான் தம்பி, சும்மா அளக்காதே. என் சர்வீஸிலே உன்னைப்போல எத்தனை பேரைப் பார்த்திருப்பேன்! ராத்திரி இரண்டு மணிக்கா விளக்கு ரிப்பேர் பண்ண வருவாங்க?''

திருப்பத்தில் பூட்ஸ் சத்தம் கேட்டது. கந்தசாமி திரும்பிப் பார்த்தான். வாட்டசாட்டமான ஒரு ஆசாமி காக்கி அரை நிஜாருடன் அவர்களை நோக்கி வந்தார்.

வந்தவரின் உருவத்திலிருந்து அவர் போலீஸ் உத்தியோகஸ்தராக இருக்குமோ என்று அவனுக்குச் சந்தேகம் தோன்றியது. எதற்கும் முன் ஜாக்கிரதையாக அவருக்கு ஒரு 'ஸல்யூட்' அடித்து வைத்தான்.

அவருடைய கம்பீரமான தோற்றமும் கறுத்த முகமும், வில் மீசையும் ரத்தக் கண்களும் பார்க்கப் பயங்கரமாக இருந்தன. அவர் கந்தசாமியை நெருங்கியதும், ''யாரப்பா, நீதான் இந்த வார்டுக்குப் பீட்டா?...இந்த ஆசாமி யார்? விளக்கு ரிப்பேர்க்காரனா?'' என்று கேட்டார்.

''ஆமாங்க, ஆமாங்க!'' என்று இரண்டு கேள்விகளுக்கும் இரண்டு 'ஆமாம்' போட்டான் கந்தசாமி.

அவர் அந்த ஏணிக்காரனைப் பார்த்து, ''இன்னுமா ரிப்பேர் ஆகவில்லை? சீக்கிரம் அஞ்சு நிமிஷத்திலே முடித்துவிட்டு ஓடணும், தெரியுதா?'' என்று உறுமினார்.

''ஆகட்டுமுங்க எசமான்!'' என்று பணிவாகக் கூறி விட்டு ஏணியுடன் நகர்ந்தான் அந்த ரிப்பேர் ஆசாமி.

''என்னப்பா, என்னை உனக்குத் தெரியுமல்லவா?'' என்று தணிவான குரலில் கந்தசாமியைக் கேட்டார் அவர்.

கந்தசாமி 'கிரீடத்'தைக் கையிலெடுத்துக் கொண்டு தலையைச் சொறிந்தான்.

''தெரியவில்லை? உம்... போகட்டும்... ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் கருப்பண்ணசாமி என்ற பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறாயா?......''

கந்தசாமி அந்தப் பெயரைத் தனது ஜன்மத்தில் கேட்டதில்லை. என்றாலும் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று சொல்ல அவன் விரும்பவில்லை.

''நல்லாச் சொன்னீங்க. போலீஸிலே இருந்துக்கிட்டு இது கூடவா தெரியாது!




தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்.

பெப்ஸ் வில்லை ஒன்றை சுவைத்தால் வலியைக் குறைக்கவும், தொண்டைப்புண் பிராங்கைடிஸ், இருமல் அல்லது ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள். பெப்ஸ் உடனே நிவாரணம் அளித்து, விரைவில் குணமூட்டுகிறது. அபாயகரமான மருந்துகள் இதில் சேரவில்லை. குழந்தைகளுக்கும் கூட அபாயமின்றி கொடுக்கலாம்.



பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY-55-TAM

சோல் ஏஜண்டுகள்: **தாதா & கம்பெனி**
86, நைனியப்ப நாயக் தெரு, சென்னை - 3



கூந்தல் மற்றும் மூளை அபிவிருத்திக்கான தைலம்

செழுமையாகக் கூந்தல் வளர உதவுகிறது. வழுக்கையைத் தடுப்பதுடன் கேசம் உதிர்வதையும் நிறுத்துகிறது. ஞாபக சக்தியை அதிகரித்து ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது. எல்லோருக்கும் எக்காலத்திலும் ஏற்றது.

பெரிய பாட்டில்	ரூ. 4/-
சிறிய பாட்டில்	ரூ. 2/-

எங்கும் கிடைக்கும்

ராம்தீர்த்

ராம்தீர்த் யோகாஸ்ரமம்
பம்பாய்-14. (C. Rly)

ஆரோக்கியமாகவும், திடமாகவும் இருக்க யோகாசனங்களை விளக்கும் எங்கள் அழகான ஆசனப் படத்திற்கு எழுதுங்கள். தபால் செலவு உள்பட ரூ. 2. மணியார்டரில் தொகை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். வீட்டிலேயே ஆசனங்களைச் சுலபமாகப் பழகலாம்.

சென்னை டெப்போ:
4/441, தங்கசாலைத் தெரு, சென்னை



க்ளாக்ஸோ லாபரட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . புது டில்லி

அந்தப் பெயரை நல்லாக் கேள்விப்பட்டிருக்கேனுங்க. ஆனால் அவரை நேரிலே பார்த்தது இல்லையாது !''

''ரைட்டோ ! இப்போது நன்றாகப் பார்த்துக் கொள் ! நான்தான் அந்தக் கருப்பண்ணசாமி !'' . . . .

கந்தசாமி விரைப்பாக நின்று ஒரு சல்யூட் அடித்தான்.

'' சரி, உன் பெயரென்ன ?''

'' கந்தசாமிங்க ?''

'' ஓ ! நீதானா அந்தக் கந்தசாமி !''

'' ஆமாங்க. நம்ப பேரைக் கேள்விப் பட்டிருக்கீங்களா, ஸார் ?''

'' மூக்கம்மாள் தெருவில்தானே குடியிருக்கிறாய்?''

'' ஆமாம் ஸார் !''

'' உங்க அக்காபுருஷன் ஒருவர் மிலிட்டரியிலே வேலை பார்த்தாரா ?''

'' ஆமாம் ஸார்! உங்களுக்கு . . . . ?''

''இப்போ நீ நம்பமனுஷனாகிவிட்டாய், கந்தசாமி ! என் தமயனாரும் உங்க அக்காள் புருஷனும் ஒரே பட்டாளத்திலே வேலை பார்த்தவர்கள். அன்றைக்கு உங்க இன்ஸ்பெக்டரிடம் பேசிக் கொண்டிருக்கையில் அவர் உன்னைப் பற்றி வெகுவாகச் சொன்னார்.''

'' யாருங்க நம்ப . . . .''

'' அனகிரிசாமி நாயுடுதான் ! . . 'நம்ப டிபார்ட்மெண்டிலே இப்போது கந்தசாமி என்கிற ஒரு புதிய ஆசாமி சேர்ந்திருக்கிறான். ரொம்பப் புத்திசாலி ! முன்னுக்கு வர வேண்டியவர்களில் அவன் ஒருவன் ' என்று சொன்னார் ! . . . .''

கந்தசாமியின் உச்சி குளிர்ந்து விட்டது. ''ஸார் ! அவரிடம் என்னைப்பற்றிக் கொஞ்சம் . . . .''

'' ஆகட்டும் கட்டாயம் கவனித்துக் கொள்கிறேன். ஆனால் நீயும் அதற்குத் தகுந்தாற் போல் பெரிய கேஸ் ஒன்றைப் பிடித்து விட்டால்......''

'' நானும் அதற்குத்தான் பார்க்கிறேனுங்க ! வகையா ஒண்ணும் மாட்ட மாட்டேன்னுதே ஸார் !''

'' நீ ஒரு காரியம் செய் ! எனக்கும் ஒத்தாசை, உனக்கும் நன்மை ! இப்போது இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே ஒரு பெரிய கொள்ளைக் கூட்டம் வரப் போகிறது ! . . . .''

கந்தசாமி அசந்து போனான் !

'' இப்பவா ? இங் . . . . கேயா ?''

'' ஆமாம், நமக்கு அதிக நேரமில்லை. துரிதமாக வேலை செய்ய வேண்டும் ! இதோ உனக்கு எதிரே இருக்கிறது பார், பெரிய கட்டடம் !'' . . . .

கந்தசாமி நிமிர்ந்து பார்த்தான். தெரு விளக்கின் மங்கிய வெளிச்சத்தில் எதிர்க் கட்டடத்தின் முன்னால் ஆங்கிலத்தில் தொங்கிய போர்டை எழுத்துக் கூட்டிப் படித்தான்.

'' மணிசங்கர் காந்திலால்:
வைர வியாபாரிகள் ''

கருப்பண்ணசாமி மிகவும் தணிவான குரலில் பேசினார்:

''இன்றிரவு இந்தக் கட்டடத்தில் கொள்ளையடிக்கப் போவதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. போலீஸ் பாராவைப் போட்டுக் குழப்பினால் கூட்டத்தினர் எச்சரிக்கையடைந்து வரவே மாட்டார்கள். பிறகு அவர்களைப் பிடிப்பது கடினம். நீ புத்திசாலி என்று எனக்குப் புரிந்து விட்டது. நாம் இப்போது வெகு ஜாக்கிரதையாக வேலை செய்ய வேண்டும். அவர்களைத் தந்திரமாகப் பிடிக்கச் சரியான பிளான் போட்டிருக்



கிறேன் . . . . இன்னும் சிறிது நேரத்தில் இங்கே ஒரு லாரி வரும்......''

'' லாரியா ?''

'' ஆமாம், அதிலிருந்து நமது உடையில்லாத '' மப்டி '' ஆசாமிகள் சிலர் இறங்குவார்கள். அவர்களை இந்தக் கட்டடத்துக்குள் ஒளிந்து கொள்ளச் சொல்லிவிட்டுத் திரும்பவும் பழைய படி கதவைப் பூட்டிவிடப்போகிறேன் !''

'' அப்புறம் ?''

'' கொள்ளைக்காரர்கள் வந்ததும் பூட்டை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைவார்கள். நுழைந்ததும், உள்ளே இருக்கும் நமது ஆட்கள் அவர்கள் மீது பாய்ந்து அவர்களைப் பிடித்து விலங்கு மாட்டி விடுவார்கள் !''

'' ஆனால் முதலில் இந்தக் கட்டடத்தைத் திறக்க வேண்டாமா ?''

கருப்பண்ணசாமி தமது சட்டையிலிருந்த சாவிக் கொத்தை எடுத்தார்.

'' இந்தா கந்தசாமி, நான் இங்கேயே நின்று ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுகிறேன். நீ போய் ஓசைப்படாமல் இந்தச் சாவிகளில் எதையாவது போட்டு அந்தப் பூட்டைத் திற !''

இந்தச் சமயம் பார்த்து மின்சார விளக்கை ரிப்பேர் செய்து கொண்டிருந்தவன் எதையோ ''லொடக்'' என்று தட்டினான். அடுத்த வினாடி அந்த வீதியில் எரிந்து கொண்டிருந்த ஒரே விளக்கும் அணைந்து எங்கும் ஒரே அந்தகாரம் சூழ்ந்து கொண்டது.

'' என்னய்யா இது! இருந்த ஒரு விளக்கையும் அணைச்சுட்டே!'' என்று இரைந்தார் கருப்பண்ணசாமி.

''ப்யூஸ் போயிடுச்சுங்க. வேறே 'ஒயர்' கொண்டு வந்துதான் மாட்டணும்'' என்றான் அந்த ரிப்பேர் ஆசாமி.

'' சரி, சரி, ஓடிப் போய்ச் சீக்கிரம் கொண்டு வா!'' என்றார். அவன் ஏணியிலிருந்து இறங்கி ஓட்டமாக ஓடினான்.



'' கந்தசாமி, இதுவும் நல்லதற்குத்தான். இருட்டாக இருந்தால் நம்மிடம் திருடர்கள் சுலபமாகச் சிக்கிக் கொள்வார்கள்! உம், சீக்கிரம் ஆகட்டும்'' என்றார் அந்த ஸி. ஐ. டி.

கந்தசாமி இருட்டில் பூட்டைத் தடவி ஒவ்வொரு சாவியாகப் போட்டுப் பார்த்தான். இந்தக் கேஸில் மாத்திரம் அவனுக்குப் பெயர் கிடைத்து விட்டது என்றால் ராமசாமி அண்ணன் கூறிய மாதிரி ஹெட் கான்ஸ்டபிள் உத்தியோகம்கூடக் கிடைத்துவிடலாம்! பிறகு கண்ணம்மாளை வெகு சுலபமாகச் சரிப்படுத்திச் சிங்காரியை.....

பூட்டு 'டடக்' என்று திறந்து கொண்டது. இதே சமயம் வீதியில் லாரியின் ஓசை கேட்டது.

''கந்தசாமி! லாரி வந்துவிட்டது. திறந்தாயா? இல்லையா?''

''திறந்து விட்டேன் ஸார்!''

''சரி, சாவிக் கொத்தைக் கொடுத்து விட்டு நீ தெரு முனையில் போய் நின்று கொள். நான் நமது ஆசாமிகளை உள்ளே இடம் பார்த்து ஒளியச் சொல்லிவிட்டு வருகிறேன். இதற்குள் யாராவது வருவதாகத் தெரிந்தால் நீ எனக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும்....''

''யாராவது வந்தால் விஸில் ஊதறேன், ஸார்!''

''சேச்சே! காரியம் கெட்டு விடும். வருகிறவர்களுக்கு இங்கே போலீஸ் இருப்பதாகவே தெரியக் கூடாது. பூனை கத்துகிற மாதிரி கத்த வேண்டும். நான் புரிந்து கொள்வேன். என்ன?''

''நல்லதுங்க ஸார்!''....

லாரி மெதுவாக அங்கே வந்து நின்றது. லாரியிலும் விளக்கில்லை. இருட்டில் ஆட்கள் இறங்குவது தெரிந்ததே யொழிய அவர்களது முகங்களைப் பார்க்க முடியவில்லை. கருப்பண்ணசாமி அவர்களை அழைத்துக் கொண்டு கட்டடத்துக்குள் ஓசைப்படாமல் நுழைந்தார்.

கந்தசாமி தெருமுனையில் நின்று பாரா கொடுத்தான்.

சுமார் பதினைந்து நிமிடங்கள் கழிந்தன. இன்னமும் கருப்பண்ணசாமி வரவில்லை. கொள்ளைக்காரர்களுடைய வாடையும் காணவில்லை. விளக்கு ரிப்பேர்க்காரனும் திரும்பவில்லை. கட்டடத்துக்குள்ளிருந்து ஏதோ 'லொட்' என்று ஓசை கேட்க ஆரம்பித்தது. இந்த ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் அங்கே என்ன செய்கிறார்?

மேலும் பதினைந்து நிமிடங்கள் சென்றன. ஓசையும் சற்றே பலமாகக் கேட்டது.

கந்தசாமிக்கு இருப்புக் கொள்ளவில்லை. என்ன ஓசை என்று தெரிந்து கொள்ள ஆவல் துடித்தது. மெதுவாகக் கட்டடத்தை நெருங்கினான். சாத்தப்பட்டிருந்த கதவைச் சத்தமின்றித் திறந்து கொண்டு எட்டிப் பார்த்தான்.

அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது. டார்ச்சு விளக்கின் வெளிச்சத்தில் ஆசாமிகள் இரும்புப் பெட்டியைத் திறந்து கொண்டிருந்தார்கள். அவனது கைகால்கள் வெடவெடத்தன. அப்படியானால் கருப்பண்ணசாமி இன்ஸ்பெக்டர் இல்லையா? இப்போது என்ன செய்வது? என்ன செய்கிறோமென்று தெரியாமல் தன் சட்டைப் பையிலிருந்த ஊதுகுழலை எடுத்து மூன்று முறை மூச்சுப் பிடித்துக் கொண்டு பலமாக ஊதி விட்டான் கந்தசாமி.

அடுத்த கணம் அவனது தலையில் ஒரு பலமான அடி விழுந்தது. அவன் தடுமாறிக் கீழே சாய்ந்தான். கட்டடத்துக்குள்ளிருந்து ஆட்கள் 'திபுதிபு'வென்று வெளியே ஓடி வந்தனர்.

'' கந்தசாமி! நீ செய்த உதவியை மறக்க மாட்டேன்!'' என்று கருப்பண்ணசாமியின் குரல் கனவில் ஒலிப்பது போல் கேட்டது. அவன் நினைவு இழந்தான்.

மறுநாள் தலையில் கட்டுகளுடன் ஆஸ்பத்திரியில் இருந்தான். (தொடரும்)



வஞ்சிமடம்

லதா

துறைமுகத்தில் ஒரு பெரும் யவனக் கப்பல் வந்திருக்கிறது என்னும் செய்தி காட்டுத் தீபோல் முசிரிஸ் முழுவதும் பரவியது.

வழிகாட்டிகளும், தரகர்களும் வந்து சூழ்ந்து விட்டனர். யவனர்களின் தலைவனான மெகாஸ் தெனிஸை நெருங்கிப் பலரும் பல இடங்களைப் பற்றிப் பேசலாயினர். ஒருவன் முத்து கிடைக்கும் இடத்தைச் சொன்னான். இன்னொருவன் பவழமும், பட்டுத் துணியும் தந்தமும் கொட்டிக் கிடக்கும் இடத்தைச் சொன்னான். மெகாஸ் அவர்களை யெல்லாம் கைகளால் விலக்கிவிட்டுச் சிறிது தூரத்தே கைகளை முன்புறம் கட்டியவாறு தன்னையே நோக்கிக் கொண்டிருந்த ஒருவனிடம் சென்றான். "நீ யார்!" என்று கொச்சைத் தமிழ் மொழியில் கேட்டான்.

"அது நானல்லவா கேட்க வேண்டும்?" என்று திருப்பிக் கேட்டான் யவன மொழியில் அம் மனிதன்.

மெகாஸ் வியப்புடன் அவனை ஏற இறங்க நோக்கினான். "உனக்கு யவன மொழி எப்படித் தெரியும்?" என்று வினவினான்.

"அதில் என்ன ஆச்சரியம்? புதையல் தேட வரும் உனக்குத் தமிழ் மொழி தெரிந்திருக்கலாமாயின் உன்னைப்போல் முன்பு இங்கு வந்தவரிடமிருந்து நான் யவனமொழி கற்றிருக்கக் கூடாதா?"

மெகாஸுக்குக் கோபம் வந்தது. அவனுடைய நாட்டிலே அவனை எல்லோரும் "பிரபுவே!" என்று அழைத்து மிகத்தாழ்மையுடன் பேசுவது வழக்கம். இந்த மனிதனின் அலட்சியம் அவனுக்கு வியப்பாகவும், ஆத்திர மூட்டுவதாகவும் இருந்தபோதிலும், அந்தமனிதனை என்னமோ அவனுக்கு மிகவும் பிடித்துவிட்டது. ஆகவே அவன் மேலும் பேசத் துவக்கி, "நான் உங்கள் நாட்டைச் சுற்றிப் பார்க்க விரும்புகிறேன். நீ என்னை உன்னுடன் அழைத்துச் செல்வாயா?" என்று ஆவலாகக் கேட்டான்.

"அதோ அத்தனை பேர்கள் உன்னை ஈ மாதிரி மொய்த்தார்களே! ஏன் அவர்களை விட்டு விட்டு என்னிடம் வந்தாய்?"

மெகாஸுக்கு மறுபடியும் சினம் பொங்கியது. ஆனாலும் அடக்கிக்கொண்டு, "அவர்களை எனக்குப் பிடிக்கவில்லை. உனக்கோ யவனமொழியும் தெரிந்திருக்கிறது. உன்னுடன் வந்தால் நேரம் இனிதாகக் கழியும் என்று எனக்குத் தோன்றுகிறது!" என்றான்.

அதற்குள் தரகர் கூட்டத்தினை விலக்கிக் கொண்டு பெரிப்ளூகஸ், ஹிப்பலாஸ் முதலிய மெகாஸின் அருமைத் தோழர்களெல்லாம் அங்கே வந்தனர்.

அதைக் கண்ணுற்ற அம்மனிதன் மெகாஸை நோக்கி, "வருவதா யிருந்தால் என்னுடன் நீ ஒருவன் மட்டுமே வரலாம்! எல்லோரையும் அழைத்துச் செல்ல நான் தயாராயில்லை" என்று கூறிவிட்டு மெகாஸின் பதிலுக்காகக் காத்திராமல் நகரத் தொடங்கினான்.

மெகாஸ் யோசித்து ஒரு முடிவு வருவதற்குள் சிறிதுதூரம் சென்றிருந்த அந்த மனிதன் சரே

கே. சரோஜா



லென்று திரும்பி, "வஞ்சி மடத்துக்கு இன்று மாலை நான்கு மணிக்கு விருப்பமிருந்தால் நீ மட்டும் வந்து சேர்!" என்று கூறிவிட்டுக் கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்து மறைந்து விட்டான்.

மெகாஸ் அவன் விரைந்து சென்று கூட்டத்தோடு கலந்து விட்டதைக் கண்டு ஏமாற்றத்தோடு பெருமூச்சு விட்டான்.

மெகாஸின் ஏமாற்றத்தைக் கவனித்த ஹிப்பலாஸ் அவனுக்கு ஏதோ சமாதானம் சொல்ல முயன்றான்.

மெகாஸ் ஆத்திரம் அடைந்து, "ஹிப்பலாஸ்! உளறாதே! அந்த வாலிபன் நாணயமானவனாகத்தான் தோன்றுகிறான். அவன் கண்களில் வீசும் ஒளியே அதற்குச் சாட்சி. நீ கவலைப்படாமல் போ. நான் அடுத்த பௌர்ணமிக்குள் வந்து விடுகிறேன்!" என்றான். ஹிப்பலாஸ் அவனை மேலும் வற்புறுத்துவதில் உபயோகமில்லை என்று கண்டு துயரத்தோடு திரும்பினான்.

புதிய ஊரிலே, புது இடத்தைத் தேடி வருவதற்குள் மெகாஸுக்குக் காலதாமதம் ஆகிவிட்டது. 'அந்த மனிதன் இருப்பானோ, போய் விட்டிருப்பானோ?' என்ற உள்ளத் துடிப்புடன் வஞ்சி மடத்தினுள்ளே அவசரமாக நுழைந்தான்.

"வரமாட்டாயோ என்று நினைத்தேன்; வா, முதல் தளத்தில்தான் எனது அறை இருக்கிறது. அங்கே போய் நிதானமாகப் பேசலாம்!" என்று கூறி அவனையே எதிர்பார்த்து நின்றவன் போல் அம்மனிதன் வரவேற்றான். தன் அறையை அடைந்ததும், "மெகாஸ்! நீ என்னுடன் வருவதில் எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்படலாம். அவைகளுக்கெல்லாம் நீ அஞ்சுபவனாக இருந்தால் இப்பொழுதே திரும்பிப் போய் விடலாம். இன்னும் நேரம் தவறி விடவில்லை!" என்றான்.

மெகாஸ் இதைக்கேட்டுப் பொறுமை இழந்தவனாக, "இல்லை, இல்லை. நான் முன்வைத்த காலைப் பின் வைத்ததில்லை. சொல்; உன் பெயர் என்ன?" என்றுகேட்டான்.

"மாதவன்! நாம் புறப்படவேண்டிய நேரம் இரவு பத்து மணிக்கு மேல்தான். நீ இப்படி இந்த வேஷத்திலே வரக்கூடாது. நாம் இருவரும் இரு காஷாயதாரிகளாக வேஷமணிய வேண்டும். உன் நிறத்தை மறைக்க என்னிடம் ஒரு குழம்பு இருக்கிறது; அதைப் பூசினால் நல்ல கறுப்பாகி விடுவாய். தாடியும், மீசையும் வைத்துக் கொண்டு புறப்படு. உன்னைப் பின்னர் யாராவது கண்டால் சேர நாட்டு சுவாமிகள் என்று கூறுவார்களே தவிர யவனன் என்று கூறமாட்டார்கள். எதற்காக இதெல்லாம் என்று நீ கேட்கக் கூடாது! உன்


உயிருக்கு யாதொரு தீங்கும் நேராமல் பார்த்துக் கொள்வது என் கடமை. இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு என்னை நம்பி வர உனக்குச் சம்மதம்தானா? சொல்!'' என்று கம்பீரமாகக் கேட்டான் மாதவன்.

மெகான், அழகும், இளமையும், வீர லட்சணங்களும் பொருந்தி விருந்த அவன் உருவத்தையும், கம்பீரமான அவன் மொழிகளையும் கேட்டுத் தன் வசம் இழந்தவனாக, ''மாதவன்! எல்லாவற்றுக்கும் நான் உடன்படுகிறேன்!'' என்று கூறினான்.

'' சரி! அப்படியானால் நாம் புறப்பட இன்னும் வெகு நேரம் இருக்கிறது. இரவின் பின்பகுதியிலே நாம் பிரயாணம் செய்ய வேண்டி விரும்புவதால் இப்பொழுது கொஞ்சம் இளைப்பாறுவோம்'' என்று கூறி மெகான் தெனீனுக்கு ஒரு மஞ்சத்தைக் காண்பித்து விட்டு, அவன் தனது இருக்கையிலேயே அமர்ந்து சிந்தனை செய்யத் தொடங்கினான்;

கப்பலில் வந்ததினாலும், ஒய்வின்றிச் சுற்றி அலைந்ததாலும் களைப்படைந்திருந்த மெகான் வெகு சீக்கிரத்தில் உறங்கிப் போனான்.

வெகு நேரம் துயின்றதுபோல் தோன்றிய மெகானுக்குத் தன்னை யாரோ தொட்டு எழுப்புவது தெரிந்தது. கண்களை விழித்த



அவன் அருகிலே மாதவனைக் கண்டதும், நடந்த விஷயங்களை ஞாபகப்படுத்திக் கொண்டு, ''புறப்பட நேரமாகிவிட்டதா?'' என்றுகேட்டவாறே எழுந்திருந்தான். மாதவன் முகத்திலே துயரச் சாயையும், அதிலே உறுதியும் தெரிந்தன: ''மெகான் போய் விடு! நீ போய் விடு!'' என்றான்.

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என்று கலவரத்துடன் கேட்டான் மெகான்.

''நான் உன்னை அழைத்துச் செல்ல நினைத்த இடம் மிகவும் ஆபத்தானது. உனக்குத் தீங்கு வராமல் உயிருள்ளவரையில் காப்பேன் என்னும் எதற்கு விஷப் பரிசோதனை? முன்பின் அறியாத என்னைப் பூரணமாக நம்பிவிட்ட உன்னைப் பலியிட என் மனம் துணியவில்லை.''

மெகான்தெனீன் மாதவனின் இரு கரங்களையும் சேர்த்துப் பிடித்தான். ''இறைவன் சாட்சியாக, இன்று முதல் நீ என் உயிர்த் தோழன். மாதவா! உன்னுடன் வருவதில் ஆபத்து இருக்கிறது என்று தெரியாமல் வருகிறேன் என்று நினைக்கிறாயா? உன் முகத்தைப் பார்த்ததுமே உன்னை ஏதோ பெருந் துன்பம் வாட்டுகிறது என்று உணர்ந்துகொண்டேன். உன் கண்களின் ஒளியும், முக இலட்சணங்களும் நீ உயர்குடிப் பிறந்தவன் என்றும், சொன்ன சொல் பிறழமாட்டாய் என்றும் எனக்கு அறிவித்தன. என்னை அறியாமலே உன்மீது அன்புகொண்டு விட்ட நான், உன் துன்பத்தைத் தவிர்க்க என்னாலான உதவி செய்ய வேண்டும்; உன் மர்மத்தை அறிய வேண்டும் என்றுதான் இங்கு வந்தேன். ஆகவே, நீ சிறிதும் நொந்துகொள்ளாமல் உண்மையை ஒளிக்காமல் சொல்லு. ஒருவருக்கு இருவராக இடுக்கண்களுடன் போராடுவோம்!'' என்று கூறினான்.

மாதவன் பெருமூச்சு விட்டான். "மெகாஸ்! உனக்கு இந்த நாட்டினரைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவர்களது அறிவு நுட்பமும், தந்திர சாமர்த்தியங்களும் ஈடு இணையில்லாதவை. நீ இங்குவருவதை இருபத்திநாலு மணி முன்பே அறிந்து விட்டார்கள் அவர்கள். அவர்களுக்குப் பல இரகசியப் படகுகள் இருக்கின்றன. அவை கடலில் நெடுந்தூரம் விரைவாகச் செல்லக் கூடியவை. தூரதர்சினியின் உதவியினால், இந்தப் படகுகளிலிருந்து நாங்கள் நேற்றே உன் வருகையை அறிந்து விட்டோம். நாங்கள் என்றால் யார் என்று நீ தெரிந்து கொள்ள வேண்டாமா? பிரசித்தி பெற்ற ராஜீவசிம்மனின் கொள்ளைக் கூட்டத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா? ஏன் அப்படிப் பார்க்கிறாய்? உன் பாட்டனாரும், தந்தையாரும், ஏன் யவன, ரோமானிய, அரேபிய நாடுகளே கேட்டு நடுங்கும் அவன் பெயரைக் கேட்டா? ஆம். அவன் யதேச்சாதிகாரத்துக்கு ஒரு முடிவு வரப் போகிறது: என்றைக்கு அவன் என் செல்விழியை வஞ்சகமாகக் கடத்திச் சென்று சிறை வைத்தானோ, அன்றைக்கே அவனுக்குப் பிடித்தது சனியன்: நான் அவன் பூண்டை வேரறுக்காமல் விடுவதில்லை என்று சபதம் செய்தேன். அவர்கள் கூட்டத்திலே ஒருவனாகச் சேருவதற்குப் படாதபாடு பட்டேன். அவ்வளவு விரைவிலே என்னைச் சேர்த்துக் கொள்வார்களா? என்னை நம்புவதற்காகப் பல சோதனைகள் வைக்கப்பட்டன. அவைகளிலெல்லாம் மனச்சாட்சியைக் கொன்று தேறினேன். இறுதியான சோதனைதான் இது. உன்னை உயிருடன் பிடித்து வரவேண்டுமென்பதுதான் அந்தக் கட்டளை. உன்னை வைத்து உன்னிடமுள்ள பொருள் அனைத்தையும் கவரத் திட்டமிட்டிருக்கின்றனர். இதை முடித்து விட்டால் நானும் அவர்கள் கூட்டத்திலே சேர்த்துக் கொள்ளப்படுவேன். அப்படிச் சேர்ந்தாலன்றி அவர்களைப் பிடிப்பது இயலாத காரியம். ஏற்கெனவே கூறியபடி என் சுயநலத்துக்காக உன்னைப் பலியிடத் துணிந்து வந்தேன். ஆனால் துறைமுகத்தில் உன் முகத்தைப் பார்த்ததும் என் துணிவு போய்விட்டது. என் மனச்சாட்சி என்னைத் துன்புறுத்த ஆரம்பித்தது. ஆகவேதான், அப்பொழுது உன்னுடன் வந்து பேசி ஏமாற்ற மனமில்லாமல், ஒதுங்கி நின்றேன். நீயோ வலையைத் தேடி விழும் பறவையைப் போல வந்துவிட்டாய். என்னைப் பூரணமாக நம்பி உன்னையே ஒப்படைத்து விட்டாய். ஆனால் நண்பா! முழுவதும் நம்பி நிச்சிந்தையாக உறங்கும் உன் முகம் என்னைச் சித்திரவதை செய்துவிட்டது. இப்பொழுது சொல்! போய் விடுகிறாயா?"

மெகாஸ்தெனிஸின் விரல்கள் மஞ்சத்தின் மீது தாளம் போட்டுக் கொண்டிருந்தன. உதடுகளைக் கடித்துக் கொண்டிருந்த அவன் திடீரென்று மாதவனைக் கேட்டான்:

"மாதவா! என்னை அழைத்துப் போகா விட்டால் உன் கதி?"

"என்னாலான முயற்சியைச் செய்கிறேன். வெற்றி இல்லாவிட்டால் வீர மரணம். என் செல்விழிக்காக உயிர் இழப்பதில் ஒரு ஆனந்தம் இருக்கிறது" என்றான்.

"யார் அந்தச் செல்விழி?"

கனவிலே பேசுபவன் போல் மாதவன் கண்கள் மூடின. அவன் இருதயத்தை ஆட்கொண்ட ஒரு தெய்வத்தைக் காணுகிறானோ என்று தோன்ற வைத்தது.

"கருமேகக் கூந்தல் வெளியிட்ட வெண்மதி முகம். முல்லை அரும்புகளை மூடிய கொவ்வைச் செவ்வாய். கன்னத் தாமரைகளை மொய்த்த கருவண்டுக் கண்கள். நுண்ணிடை தாங்கிய மெல்லுடல். அறிவு - அறிவுக்கேற்ற அடக்கம். மென்னகை, மின்னொளி. இவை தாம் செல்விழி. என் மாமன் மகள்!"

"உன் இருதயம் கவர்ந்தவளும் அவள். அப்படித்தானே? இல்லாவிட்டால் ஏது இவ்வளவு துணிவு என்று பார்த்தேன். மாதவா! கண்களைத் திற. புறப்பட ஆயத்தம் செய்."

"என்ன?" என்று கூவினான் மாதவன்.

"ஆம். நான் கூறுவதைக் கவனமாகக் கேள்: என்னை அழைத்துச் சென்று அவர்களிடம் ஒப்படைத்து விடு. ஏன் அப்படிப் பார்க்கிறாய்? ஆபத்தில் தோழர்களைக் கைவிட்டுச் செல்லுவது வீரருக்கு அழகல்ல: உனக்கு உதவி செய்வதெனத் தீர்மானித்து விட்டேன். நான் அவர்கள் திட்டத்தை எதிர்த்துப் புரட்சி செய்கிறேன். நான் இறுதியில் இணங்குவதற்கு முன், அக் குறுகிய காலத்துக்குள், நீ அவர்கள் பழக்க வழக்கங்களையும், உனக்கு வேண்டிய தகவல்களையும், நன்கு தெரிந்து கொண்டு விடு. அதன் பின் என் தோழன் ஹிப்பனாஸுக்குப் பணம் அனுப்பும்படி நான் வரைந்து தரும் கடிதத்துடன் வெளியே வந்து...... என்ன, என் திட்டம் சரிதானா?" என்றான் மெகாஸ். மாதவன் கண்களில் நீர் பெருக மெகாஸைக் கட்டித் தழுவினான்.


"ஐயோ! என் நண்பா! இது விஷப்பரீட்சை: வேண்டாம். வெற்றி கிட்டாவிட்டால் உன் உயிரும் அநியாயமாகப் பலி ஆகிவிடும். செல்விழியை மட்டும் அந்தக் கயவர் கூட்டம் கடத்திச் சென்றிராவிட்டால், நான் உன்னை ஏமாற்ற வந்திருக்க மாட்டேன். ஆனால், இப்பொழுது என் மனம் சம்மதிக்கவில்லை. நீ போய் விடு" என்று வேண்டினான்.

அப்பொழுது மேகத்திலிருந்து விலகிய சந்திரனைக் கவனித்த மெகாஸ் பதற்றத்துடன், "மாதவா! என்ன பேசுகிறாய் நீ? நாட்டு மக்களுக்கும், நம்பிவரும் அயலாருக்கும் ஓயாத்தொல்லை கொடுக்கும் இந்தக் கள்வரைப் பிடித்துத் தண்டனை பெறவைப்பது உனது கடமைகளில் ஒன்று என்று நீ எண்ணிப் பார்க்கவில்லையா? உன் உடைமை பறிபோன போது மட்டும் துடிக்கும் நீ மற்றவர்களை உன் நிலையில் வைத்து எண்ணிப் பார்க்கத் தவறுகிறாயே! புறப்படு! முன் வைத்த காலைப் பின் வைக்காதே. ஆயத்தம் செய்!" என்று கட்டளை இடவும், இயந்திரம்போல் மாதவன் ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தான்.

நிட்ரியா தீவிலே ஒரு கிழவியின் பழைய இல்லத்தின் முன்பு இரு ஏழைக் காஷாயதாரிகள் வந்து நின்றனர். வாசற் கதவு 'டொக் டொக்' என்று தட்டப்பட்டதும், அதைத் திறந்த ஒரு குள்ளமான மனிதன் அவர்களை உள்ளே அழைத்துச் சென்று ஒரு விசாலமான அறையில் விட்டுச் சென்றான்.


ஓ-இந்த கண்ணைக்
கூசும் வெளிச்சம்...
ஆ - ஹா! ஆர்ஜெண்டா
— பிரகாசமான கண்ணைக்
கூசாத வெளிச்சம்!
PHILIPS
Argenta
நிலவு ஒளிபோல் குளுமையானதும் ஆனால்
பகல் போல் பிரகாசமானதுமான ஒளி வீசும்
உள் வெண்மை ஆர்ஜெண்டா பல்புகள், வீடு
களுக்கும், வேலை ஸ்தலங்களுக்கும் சிறந்தவை.
இன்றே ஒரு ஆர்ஜெண்டா பல்பை வாங்கி,
அதன் வெளிச்சம் கண்ணுக்கு எவ்வளவு குளு
மையாயும் தேக ஆரோக்கியத்திற்கு எவ்வளவு
சிறந்ததாயும் இருக்கிறது என்று பாருங்கள்.
பிலிப்ஸின் தயாரிப்புகளை
சரியான விலைக்கே வாங்குங்கள்
உங்களுடைய வியாபாரியிடம் பிலிப்ஸின்
விலைப்பட்டியலைக் காண்பிக்கச் சொல்லுங்கள்
பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்
PHILIPS

பைக்ஸ் மலையுச்சியின் மிகக் குறுகலான வளைவுகளில்



இந்த டயர் அபாயமின்றிச் செல்லக்கூடியதென நிரூபித்துள்ளது

புழுதியும் கரடுமுரடான சரல்கற்களும் நிரம்பிய மிகக் குறுகிய வளைவுகளுள்ள பைக்ஸ் மலை உச்சிபீது ஏறும் மோட்டார் பந்தயத்தில், தொடர்ந்து 29 தடவைகள் அனாயாசமாக வெற்றிபெற்ற கார்களில் பயர்ஸ்டோன் டயர்கள் பொருத்தப்பட்டிருந்தன. இந்த டயர்களை உற்பத்தி செய்வதில் கையாளும் அதே தொழில் நுட்பமும், உயர்தர கண்காணிப்புமே, உங்கள் காரில் பொருத்தப்பட்டுள்ள பயர்ஸ்டோன் டயர்களின் அதிகப்படியான பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மைக்கு உத்திரவாதம் அளிக்கின்றன.

Firestone

பயர்ஸ்டோன்

நியூ டீலெக்ஸ் சாம்பியன் • டியூப்லெஸ் அல்லது டியூபுள்ளது

மன நிம்மதியுடன் பிரயாணம் செய்வதற்கென்றே தயாரித்த டயர்

சில நிமிஷங்களில் அங்கு நீண்ட அங்கி தரித்த உயரமான மனிதன் வந்தான். அப்பொழுது மாதவன் அவனை நோக்கி, "ஆளு இதானே. வேகம் வழி காணிக்க தரனே. நீங்கள் போகட்டே" என்றான். அந்த உயரமான மனிதன் மெகானின் முகத்தைப் பார்த்தான். பிறகு கைகளைச் சேர்த்துத் தட்டினான். உடனே இருவர் ஓடிவந்து மெகான், மாதவன் இருவர்களுடைய கண்களையும் தம் துணிகள் கொண்டு கட்டினர்.

அங்கிருந்து புறப்பட்ட அவர்கள் பல திருப்பங்களையும், படிகளையும் கடந்து ஒரு சமதரைக்கு வந்து சேர்ந்தனர்.

"இவர்கள் கட்டுகளை விலக்கு!" என்று ஒரு அதிகாரக் குரல் பணித்தது.

மெகானும் மாதவனும் கண்களை விழித்தனர். ஆஜானுபாகுவான உருவமும், கம்பீரமான தோற்றமும், கொடுமை பிரதிபலிக்கும் கண்களும் கொண்ட ஒருவன் உயர்ந்த ஆசனத்திலே அமர்ந்திருந்தான். அரசவை போன்று வளைய இரு பக்கங்களிலும் இடப்பட்டிருந்த பல ஆசனங்களிலே பலர் அமர்ந்திருந்தனர்.

அரசாங்க மண்டபம் போலத் தோற்றம் அளித்த அந்த இடத்தைக் கண்டு மெகான் வியந்தான். மாதவன் வன மொழியிலே கூச்சலிட்டான். தலைவனைப் பணிந்து மாதவன், தான் மெகானை அவ்விடம் கொண்டுவர மிகப் பாடுபட்டதாகக் கதைத்தான். அதைக் கேட்டுத் தலைவன் கொடுமை நிறைந்த குரலில் கடகடவென நகைத்து, "சபாஷ்! மாதவா! நீ மிகுந்தசாமர்த்தியசாலி. அவன் இருக்கு மிடத்தையும் ஐம்பதாயிரம் பொற்காசுகள் தந்தாலே இங்கிருந்து வெளியேற முடியும் என்பதையும் இப்பொழுது இவனுக்கு எடுத்துக் கூறு!" என்று ஆக்ஞாபித்தான்.



மாதவனும், மெகானும் வன மொழியிலே கூச்சலிட்டுக் கொண்டனர். மாதவனை அடிப்பதற்காக மெகான் கையை ஓங்கிக் கொண்டு ஓடி வந்தான். "என் மீது கோபம் கொண்டு கொன்று விடுவதாக உறுமுகிறான். உயிர் போவதானாலும் நீங்கள் கூறியதற்குச் சம்மதிக்கமாட்டேன் என்கிறான்!" என்றான்.

தொடர்ந்து இந்த நாடகம் நீடிக்க விடாமல் தலைவனின் ஆணை தடுத்தது. "இழுத்துச் செல்லுங்கள் இந்த வன நாயை! பாதாளச் சிறையிலே தள்ளுங்கள். மூன்று நாட்களுக்கு ஆகாரம் தண்ணீர் எதுவும் கொடுக்காமல் பட்டினி போடுங்கள். பார்க்கலாம், இவன் துணிவை!" என்று கர்ஜித்தான். பிறகு கூட்டத்தினரை நோக்கி, "இரவு கழிய இன்னும் ஒரு ஜாமம் இருக்கிறது. மாதவனை நமது கூட்டத்திலே சேர்க்க நடக்கட்டும் ஏற்பாடுகள்!" என்று கட்டளை இட்டான். பின்னர் மாதவனை நோக்கி," மாதவா! இன்று முதல் நீ கற்றறையோருக்கு, எனக்கு அடுத்தபடியான தலைவன்" என்று கூறினான். பிறகு தன் இரத்தத்தைக் கண்டு தானே வெட்கம் கொண்டவன் போல் எழுந்து நடந்தான் தலைவன்.

"ஜாக்கிரதை! மாதவா! ஜாக்கிரதை! அந்த வன நாயின் கடிதம் மட்டும் தவறிப் போனால் நமது கூட்டத்துக்கே ஆபத்து. அஜாக்கிரதையாக இருந்து விடாதே!" என்று பலமுறை எச்சரிக்கைகளைக் கேட்டபின் மாதவன் அந்தக் குகையை விட்டு வேகமாக வெளியே வந்தான்.

கடந்த ஒரு வாரத்துக்குள் அவன் கள்வர் பழக்க வழக்கங்களை நன்கு தெரிந்து கொண்டு விட்டான். அவர்கள் மனம் போல் நடந்து, அவர்களுடைய அன்பையும், மதிப்பையும் பெற்று விட்டான்.


மெகான் பாதாள அறையிலே வாடிக் கொண்டிருந்தான். மூன்று நாட்களில் வருவதாகக்கூறி மாதவன் வஞ்சியை நோக்கிக் கடிந்து சென்று மூன்று நாட்களும் போய் விட்டன. மெகான், கவலையுடன் உட்கார்ந்திருந்தான். திடீரென்று கோபம் கொண்டு கூச்சலிடும் பெண் குரல் ஒன்று கேட்டது.

சாளரத்தினருகே ஓடிச் சென்றான் மெகான். சாளரம் மிக உயரத்தில் இருந்தது. நெருக்கமாகக் கம்பிகள் இடப்பட்டிருந்தன. அந்தப் பெண் பேசுவதிலிருந்து அவள் செல்வியாகத் தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான் மெகான். அவளைத் துன்புறுத்துபவர் யாரென்று அறிந்து அவர் மூக்கை உடைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான் மெகான்.

பலவாறு யோசனை செய்தபின் சிதிலமாகிக் கிடந்த அந்தப் பழைய அறையின் இடிந்திருந்த பகுதிகளில் காலை வைத்துக் குரங்கைப் போல் ஏறிப் பார்த்தான். சாளரத்தை அடுத்திருந்தது ஒரு சிறிய புல்தரை. அங்கு நின்றிருந்தாள் ஒரு எழில் மங்கை.

அவளது அழகிய செவ்விதழ்கள் கோபம் கொண்டு துடித்துக் கொண்டிருந்தன. வில் போன்று கூடிய அந்தப் புருவங்களின் கீழிருந்து விழி அம்புகள் நுனியிலே தோய்த்த நாகபாணமெனப் பாய்ந்து சென்று கொண்டிருந்தன. செக்கச் சிவந்த அவள் மூக்கு சினத்தாலே விரிந்திருந்தது.

அவள் எதிரே நின்றிருந்தவன் வேறு யாருமில்லை; கள்வர் தலைவன்தான். கடகடவென்று நகைத்துக் கொண்டிருந்த அவன்



புது வாட்ச்மேன் :— ஸார்! இந்த 'ஷெட்' கொஞ்சம் கூட வசதியா இல்லீங்க! இதை நீளவாட்டத்திலே படுக்க வைத்தால் நான் சௌகர்யமாக இருக்குங்கோ!

கண்களிலே கொடுமை தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

''கண்ணே! ஏன் வீணாகக் கூச்சலிடுகிறாய்? அந்த யவன நாயின் பொற்காசுகள் வரட்டும். உடனே நமது திருமணம்தான்.''

கள்வர் தலைவன் மேலும் பேசுவதற்குள் ஒருவன் ஓடோடி வந்தான். ''பிரபுவே! முக்கிய செய்தியை ராஜேந்திரன் கொண்டு வந்திருக்கிறான்!'' என்றான். திடுக்கிட்டுத்திரும் பிய தலைவன் அப்புறம் அங்கே நிற்கவில்லை.

''செல்விழி!'' என்று அழைத்தான் மெகாஸ். திடுக்கிட்டு நிமிர்ந்தாள் செல்விழி. யாரோ அன்னியனைக் கண்டு அஞ்சிப் பின்வாங்கினாள் அவள். ''பயப்படாதே! உன்னைப் பற்றி யெல்லாம் எனக்குத் தெரியும். நான் யவனன். உன்னைக் காப்பாற்றவும், இந்தக் கள்வரை அழிக்கவுமே, நானும் உன் காதலனும் வந்துள்ளோம். அவன் வஞ்சிக்குச் சென்றிருக்கிறான். விரைவில் உனது கஷ்டங்கள் தீரும். அஞ்சாமல் இரு'' என்று கூறவும், செல்விழி ''ஐயோ! திருநம்பி அத்தான் எங்கே? ஏன் இந்த ஆபத்தில் வந்து சிக்கிக் கொண்டார்?'' என்று கைகளைப் பிசைந்தாள்.

மெகாஸுக்குத் தூக்கி வாரிப் போட்டது. மாதவன் வேறு யாருமல்ல, சேர இளவரசன் திருநம்பிதான் என்று அறிந்ததும், அவன் ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைந்தவனாக மேலும் ஏதோ கூற வாயைத் திறப்பதற்கு முன் பாதாள அறையைத் திறக்கும் ஒலி கடகடக்கு முழங்கியது.

அங்கே இரு கள்வர்கள் கட்டி இழுத்துச் சென்றனர். கள்வர் தலைவன் முன் அங்கே விட்டனர். அவன் ''அடே! யவனப் பதரே! சூழ்ச்சியா செய்கிறாய்? தமிழ் அறிய மாட்டாயோ? இப்பொழுது உன் கதியென்ன என்று பார்க்கிறேன். யாரங்கே! இவனைத் தூணில் கட்டி அடியுங்கள்!'' என்று கட்டளை செய்தான். மெகாஸின் மெல்லுடல் மீது சவுக்குகள் பட்டு இரத்தம் பீறிட்டது.

இராசேந்திரன் என்ற அந்த வீரன், கள்வர் தலைவனுக்கு, அவசியமானால் உதவி செய்வதற்காக மாதவனுக்குத் தெரியாமல் அவன் பின்னாலேயே அனுப்பப்பட்டவன். அவன், மாதவனின் செயல்களை அறிந்து வந்து சொன்னதன் விளைவுதான் இது என்று அவர்கள் பேச்சிலிருந்து அறிந்தான் மெகாஸ்.

எப்படியாயினும் சிறிது நேரம் கடத்தி விட்டால் மாதவன் வந்து விடுவான் என்று எண்ணிய மெகாஸ் பல்லைக் கடித்துக் கொண்டான். அடிபட்டு அவன் உயிரே போய்விடும் போலிருந்தது. பாவம்! மாதவன் மீதும், செல்விழியின்மீதும் கொண்ட அன்புக்காக அவன் அவற்றைத் தாங்கிக் கொண்டான்.

இதற்குள் குகையின் வாசற்புறம் பெரிய கலவரமும், சத்தமும் உண்டாயின. என்ன என்று யாரும் யோசிப்பதற்குமுன் திமுதிமு வென்று பல அரசாங்கச் சிப்பாய்கள் நுழைந்தனர். அவர்களுக்குத் தலைவனாக வந்த மாதவன் அப்போது ராணுவ உடை தரித்திருந்தான். இவர்களைக் கண்டதும் கள்வர் தலைவன் ''ஆ! காரியம் மிஞ்சிவிட்டது! அடுத்துக் கெடுத்த அற்பனாயே! அழிந்து போ!'' என்று தனது இடையிலிருந்த பிச்சுவாவை எடுத்து மாதவனைக் குறி பார்த்து வீசினான். மாதவனோ அப்பொழுது மெகாஸை விடுவிக்கச் சென்று கொண்டிருந்தான். தலைவன் வார்த்தைகளைக் கேட்டு மின்னலென விலகிய அவன் அந்தப் பிச்சுவாவைப் பிடிக்கக் கையை நீட்டினான். ஆனால் அந்தோ! அது ஏற்கெனவே அடிபட்டுக் கிடந்த மெகாஸ்தெனீஸின் மார்பிலே சென்று தைத்து விட்டது.

''ஐயோ!'' என்று அண்டமே நடுங்க அலறினான் மாதவன்.


''ஆண்டவனே!'' என்று கூவி மெகாஸ்தெனீஸின் கட்டுக்களை அவிழ்த்து மடியிலே போட்டுக் கொண்டான். முகத்திலே தண்ணீரைத் தெளித்தான். கண்களை விழித்த மெகாஸ்தெனீஸுக்குப் பேசுவதற்குக் கூடச் சக்தியில்லை.

''திருநம்பி! செல்விழியுடன்...... சௌக்யமாக...இரு. நான்...இறப்பது...பற்றி வருந்தாதே!'' என்றான். மாதவன் பித்துப் பிடித்தவன் போல் மெகாஸ்தெனீஸின் மார்பிலிருந்து பெருகிய இரத்தத்தை இரு கைகளாலும் மார்பிலே பூசிக்கொண்டான்.

''ஐயோ! என் நண்பா! சில நாள் பழக்கத்திலே எனக்காக உன் உயிரைப் பலி கொடுத்தாயே! கள்வரைப் பிடிக்க வந்து நண்பனை இழந்தேனே! யாருக்கும் கிட்டாத என் நட்புச் செல்வமே! ஐயோ! நீ போகும்பொழுது நான் களித்திருப்பதா? என்னை ஏமாற்றி விட்டாயே!'' என்று கதறினான். மெகாஸ்தெனீஸோ அமைதியாக புன்னகை செய்தான்.

''செல்விழி....எனது சகோதரி! அவள் வாழ்வை அழிக்காதே. நீ இன்பமாக வாழ்ந்தால் எனக்கு அதுவே மகிழ்ச்சி! இது விதியின் விளையாட்டு. நொந்து என்ன பயன்?'' என்று கூறுவதற்குள் அவன் கண்கள் மூடின.

கி. பி. முதல் நூற்றாண்டிலே தனது இந்திய நண்பன் ஒருவனுக்காக யவன சிரேஷ்டன் ஒருவன் உயிர் கொடுத்த இந்த வரலாறு சரித்திரத்திலே பொன் ஏடுகளிலே பொறிக்கப்பட வேண்டிய புதுமையல்லவா?



மேலும் மலிவானது!
குடும்பம் முழுவதற்கும் ஒரே டால்க்
PROTEX
All-Purpose
TOILET POWDER
ப்ரோடெக்ஸ்
சர்வ பிரயோக டாய்லட் பவுடர்
ஜயண்ட் சைஸ் அழகிய
பப்புடன் கிடைக்கும்!



சிறு குழந்தைகள் ஆசையுடன்
விரும்பும் பார்லி—ப்யூரிடி, ஏன்?
ஏனெனில் ப்யூரிடி பார்லி
(1) சுத்தமான பசும்பாலுடன் சேர்க்கப்பட்டால், அது உங்களுடைய குழந்தையின் மென்மையான வயிற்றில் வெகு சுலபமாக ஜீரணம் ஆகும்படி செய்கிறது.
(2) சுத்தமாக அரைக்கப்பட்டு, நவீன விஞ்ஞான முறைப்படி தயார்செய்யப்படுகிறது. அதனுடன், அசல் உயர்ந்த ரக தானியத்தின், புஷ்டிதரும் சிறந்த சத்தைக் காப்பாற்றுகிறது.
(3) காற்று உள்ளே புகாவண்ணம், சுகாதார முறைப்படி, டின்களில் அடைக்கப்படுவதால், சுத்தமாகவும் புதியதாகவும் பத்திரமாகவும் இருக்கிறது.
ப்யூரிடி
இந்தியாவில், மிக அதிக
அளவில் விற்பனையாகும் பார்லி.
PTY 274
இலவசம்
'ஒவ்வொரு தாய்மார்களுக்கும் தெரிய வேண்டியது' என்ற புத்தகத்தை இலவசமாக பெற
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பட்டது)
இலாகா F. B. P 3. தபால் பெட்டி நெ. 9001 கல்கத்தா-16
என்ற விலாசத்திற்கு எழுதவும்.



ஸேவாய் ஹோட்டலில் கூடியிருந்த பத்திரிகைப் பிரதிநிதிகள் மிகுந்த பரபரப்புடன் எதிரே மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதே சமயம் முன் அறிவித்த நேரப்படி அணு ஆராய்ச்சியாளரான பேராசிரியர் நப் அவர்கள் அவ்வறையினுள் பிரவேசித்தார்கள். பத்திரிகை நிருபர்களின் முகத்திலே மகிழ்ச்சிக் கோடுகள் பளிச்சிட்டன. எல்லோரும் மிகச் சுறுசுறுப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். அவர்களது ஆவல் தவழும் விழிகள் பேராசிரியர் நப்பின் மீது பதிந்திருந்தன.

பேராசிரியர் நப் அவர்கள் தமது வாழ்க்கையிலே கண்ட மாபெரும் சாதனையைப் பற்றி அன்று சொல்வதாக இருந்தார். கடந்த பல ஆண்டுகள் இடைவிடாது கடுமையாக உழைத்ததின் பேரில் அவரது முயற்சிக்கு மாபெரும் வெற்றி கிட்டியிருந்தது.

பேராசிரியர் நப் ஒரு முறை பத்திரிகைப் பிரதிநிதிகளின் அந்தக் கும்பலைப் பார்த்தார்; பிறகு உருக்கமான குரலில் சொல்லலானார்:

"நான் இப்பொழுது செய்திருக்கும் குண்டு இதுவரை செய்யப்பட்டுள்ள குண்டுகளைக் காட்டிலும் வேறானது; முற்றிலும் மாறானது; மிகப் பெரும் நாசத்தை விளைவிக்கக்கூடிய குண்டு அது. ஆனால் அதில் ஒரு அற்புதமான குணமும் இருக்கிறது. யார் குற்றவாளிகளோ, குறுகுறுத்த நெஞ்சம் படைத்தவர்களோ, அவர்களை மட்டுமே அந்தக் குண்டு பாதிக்கும். குற்றவாளிகள் என்று நான் யாரைச் சொல்கிறேன் என்றால், எவர் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கிறார்களோ, போரை ஆதரிக்கிறார்களோ, உலக அமைதியை விரும்பாதவர்களோ, அவர்களேதான். குற்றமற்றவர்களும் பாபத்தையே அறியாதவர்களும் இந்தக் குண்டைக் கண்டு பயந்து சாக வேண்டியதில்லை. அவர்கள் குண்டு வெடிக்கும் இடத்துக்கு வெகு அருகில் இருந்தாலும், குண்டு அவர்களுக்கு ஒரு தீங்கும் இழைக்காது; ஆனால் குற்றமுள்ள நெஞ்சினர் உலகத்தின் எந்த மூலைமுடுக்கிலே இருந்தாலும் அதன் தீங்கு இழைக்கும் குணத்திலிருந்து தப்ப முடியாது. ஆம், தப்பவே முடியாது. அதனால்தான் இதற்கு 'விசேஷ அணுகுண்டு' என்று பெயர் வைத்திருக்கிறேன்."

பேராசிரியர் பேசி முடித்தார். அவரது கைவிரல்கள் அவரை அறியாமலே அவரது தாடையுடன் விளையாடலாயின.

'நியூஸ் க்ரானிகல்' பத்திரிகை நிருபர் அங்கே நிலவியிருந்த கனநேர மௌனத்தைக் கலைத்து, "பேராசிரியர் அவர்களே! ஒரு கேள்வி. இந்தக் குண்டு மனிதனைத் தாக்குமா? அல்லது தேசத்தையே தாக்குமா?" என்று கேட்டார்.

பேராசிரியர் நப் முறுவலித்தார்.

"மனிதனைத்தான். போருக்கு நாடு முழுவதையும் குற்றவாளியாக்குவது என்னவோ உண்மைதான். ஆனால் நாட்டின் அத்தகைய நிலைக்குப் பொறுப்பாளி அந்தஅந்த நாட்டைச் சேர்ந்த மனிதர்கள்தானே?" என்றார்.

"ஆனால் ஆசிரியர் அவர்களே! தங்களது இந்தக் குண்டு உலக அரங்கில்..." என்று மான்செஸ்டர் கார்டியனின் பிரத்தியேக நிருபர் ஆரம்பித்தார்.

பேராசிரியர் நப் இடையே குறுக்கிட்டு, "கட்டாயம் கடுமையாகப் பாதிக்கும்; ஆனால் அதற்காக நாம் அஞ்ச வேண்டியதில்லை. நம் நாடு போரையே ஆதரிக்காமல் இருக்கும் பொழுது, இந்தக் குண்டு நமக்கு என்ன தீமையை விளைவித்துவிட முடியும்? யோசித்துப் பாருங்கள்!" என்றார்.

பத்திரிகை நிருபர்களின் கேள்வி பதில்கள் முடிந்தன. ஆனால் பேராசிரியர் நப்பின்

ஆராய்ச்சி பயந்த சாதனை நாடு முழுவதையும் நடுநடுங்க வைத்து விட்டது; கதிகலங்க அடித்து விட்டது.

நீதியையும் நேர்மையையும் தன்னுள்ளேயே அடக்கிக் கொண்டிருக்கும் அந்தக் குண்டின் ஆற்றலைக் கேட்ட ஒவ்வொருவர் முகத்திலும் சவக்களை படர்ந்து விட்டது.

பேராசிரியர் நப் மிகவும் மனச் சோர்வுற்றார். அவர் சாதித்த இந்த அற்புத சாதனையைக் கேட்டு மக்களின் மனத்தில் அந்தளவு பயங்கரக் கிலி எழுவானேன்? அவரது சோர்வுக்குக் காரணம் இதுதான்: அவர் மகிழ்வு நிறைந்த மனத்துடன் முதன் மந்திரியிடமிருந்து வாழ்த்துப் போன் வரும் என்று எண்ணியிருந்தார். தமது அரும் பெரும் அபூர்வ சாதனையைக் கண்டு ஆனந்தித்து முதன்மந்திரி பிரபுக்கள் சபையில் தமக்கும் ஒரு ஸ்தானம் வழங்கிவிடுவார் என்றும் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தார்.

எதிர்பார்த்தது போலவே முதன்மந்திரியிடமிருந்து போன் வந்தது. ஆனால் அவர் போனில் சொன்ன சொற்கள், பேராசிரியர் நப்பைப் பொறுத்த வரை வருத்தந் தக்கதாக மட்டும் அல்ல, பெருத்த அவமானம் விளைவிப்பதாகவும் அமைந்து விட்டன.

முதல் அமைச்சர் பேசினார்!

"நப்! இதென்ன பைத்தியக்காரத்தனம்? நீர் சொன்னவை யெல்லாம் உண்மை அல்ல; பொய் என்று சொல்லி விடும். ஆண்டவனுக்காகவாவது சொல்லுங்கள். குண்டின் பேரழி அளவிலே எனக்குக் கொஞ்சம் பிரமை ஏற்பட்டுவிட்டது. அதனால்தான் நான்..."

பேராசிரியரால் அதற்கு மேல் அவரது பேச்சைக் கேட்டுக் கொண்டு பேசாமல் இருக்க முடியவில்லை. கொதித்தெழுந்து கோபத்துடன் கூறினார்:

"தங்கள் மூளை சரியாகத்தானே இருக்கிறது? வாழ்நாள் முழுவதும் நான் கொட்டிய உழைப்பை வீணில் நாசமாக்குவதா? முடியாது. முடியவே முடியாது. எனது இந்தக் குண்டு உலகத்துக்கு எத்தனை உபயோககரமானது? இதைப் பற்றிச் சிந்தனையாவது தாங்கள் சிந்தித்தீர்களா? இந்தக் குண்டு குற்றவாளிகளைப் பொறுக்கிப் பொறுக்கிக் கொலை செய்யும். இன்று யுத்த பீதியை உண்டு பண்ணி அதற்கான ஆயுதம் செய்வதில் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ எவன் ஒருவன் கடுகளவாவது ஒத்துழைத்திருக்கிறானோ, அவன் உலகத்தின் எந்த மூலைமுடுக்கில் ஒளிந்திருந்தாலும் சரி. தேடிப் பிடித்து இந்தக் குண்டு அவனை ஒழித்து விட்டே ஓயும். குண்டு வெடித்த பிறகு புவியில் அமைதியையும் அஹிம்சையையும் வழிபடுபவர்கள் மட்டுமே எஞ்சியிருப்பார்கள். அப்புறம் அமைதியின் ஆட்சி ஒரு குடைக் கீழ் நடைபெறும்!"

முதல் அமைச்சர் எரிச்சலுடன் போனைப் பட்டென்று வைத்தார். "உனக்குப் பைத்தியம்தான் பிடித்து விட்டது, நப்!" என்ற சொல்லுடன் டக்கென்று போன் வைக்கப்படும் சத்தமும் பேராசிரியர் நப்பின் காதுகளில் ஒலித்தது.

பேராசிரியர் நப்பின் உதடுகளில் நிம்மதியான புன்னகை உயிரிழையாக ஓடியது. ஆனால் அடுத்த பத்து நிமிஷத்துக்குள்ளாகவே 'ஸ்காட்லந்து யார்டு' பேராசிரியரைச் சிறைப் பிடித்து விட்டது. பேராசிரியர் நப் கோபாக்கிராந்தரானார். அந்த நிலையில் யாருக்குமே கோபம் வருவது இயல்புதானே! எத்தனை இன்னல்கள் அளித்த பொழுதிலும் குண்டைப் பற்றி எதுவுமே சொல்வதற்கில்லை என்று அவர் தீர்மானமாக மறுத்து விட்டார்.

அவர் சொன்னது இவ்வளவுதான்:

"எதிர்பாருங்கள். மாலை ஆறு மணிக்குக் குண்டு வெடித்த பிறகு எல்லாம் தாமாகவே தெரிந்து விடும்."

பிரிட்டனில் உள்ள ஒவ்வொரு அணு ஆராய்ச்சிச் சாலையும் அணு அணுவாகச் சோதனை போடப்பட்டது. உலகத்திலுள்ள பெரும் பெரும் தேசங்களுக்கு இந்தக் குண்டு சம்பந்தமாக அறிவிக்கப்பட்டது. அமெரிக்கா, ரஷ்யா முதலிய நாடுகளிலும் அணு ஆராய்ச்சிச் சாலைகள் சோதனை போடப்பட்டன; ஆனால் பேராசிரியர் நப்பினால் கண்டுபிடிக்கப்பட்ட நேர்மைக் குண்டைப் பற்றிய தகவலை ஒன்றுமே கண்டுபிடிக்க முடியவில்லை.

அதிகாரிகளின் கவலை அதிகரித்து விட்டது; அவர்கள் மிகவும் கலவரமும் பரபரப்பும் கொண்டவர்களாகக் காணப்பட்டனர்; நிமிஷத்துக்கொருதரம் அவர்களது பார்வை கடிகாரத்தின் முட்களில் பதிந்தது. மாலை ஆறு அடிக்க இன்னும் எத்தனை நேரம் இருக்கிறது என்ற ஒரே சிந்தனை அவர்களை வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

மாலை ஐந்து அடித்ததும் அடிக்காததுமாக 'நம்பர்கள் ஆம்புலன்ஸ் யூனிட்'டைச் சேர்ந்த சிப்பந்திகள் பிரிட்டிஷ் பார்லிமென்ட் கட்டடத்தை அடைந்து விட்டார்கள். அவர்கள் தங்களோடு தயாராக ஸ்டிரெச்சர் முதலிய தேவையான பொருள்களைக் கொண்டு சென்றிருந்தனர்.



பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் அப்பொழுது மிகவும் கவலை தோய உட்கார்ந்திருந்தார்கள். மரண அமைதி நிலவியிருந்தது அவர்களிடையே. அந்தப் பெருத்த மௌனத்துக்கிடையேயும் அவர்களது இதயம் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது. எல்லோருடைய முகத்திலும் சொல்லொணாத கவலைக்குறி படர்ந்திருந்தது. ஏதோ துர்ச்சம்பவம் நிகழ்ந்து விட்டது போன்ற நிலையில் பாராளு மன்றம் பிரமித்திருந்தது.

''ஆனால் முக்கியமான பிரச்னை என்னவென்றால்...'' கடைசியில் இளமை தோய்ந்த பாராளுமன்ற அங்கத்தினர் ஒருவர் நிலவியிருந்த மௌனத்தைக் கலைத்தார். ''...பேராசிரியர் நப் எதை யுத்தமாகக் கருதுகிறார் என்பதுதான் சரியாக விளங்கவில்லை'' என்றார்.

ஆனால் யாரும் அவர் பேச்சிலே கவனம் செலுத்தவில்லை. பாராளு மன்றத்தின் மற்றெல்லா அங்கத்தினர்களும் வயதில் முதிர்ந்தவர்களாகவும் அநுபவத்தில் தேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். 'யுத்தம் என்றால் என்ன பொருள்?' என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். பேராசிரியர் நப் எதை யுத்தமாகக் கருதுகிறார் என்பதும் அவர்களுக்குத் தெரியாததல்ல.

சிறிது நேரத்துக்கெல்லாம் நிதிமந்திரி மேஜையின் மீது தம் கையினால் ஓங்கிக் குத்தி, ''நப் நிச்சயம் பைத்தியக்காரராகத்தான் ஆகிவிட்டார். இல்லாவிட்டால் நம்மை இப்படிக் குரூரமாகக் கேலி செய்திருக்க மாட்டார்!'' என்று கூறினார்.

''சபாஷ்!'' எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர் குத்தலாகக் கூறினார்: ''சென்ற பட்ஜெட்டில் நிதிமந்திரி ராணுவத்துக்கும் ராணுவ தளவாடங்களுக்கும் முக்கால் பங்கு செலவிட்டாரே. அதனால் ஒரு வேளை இப்படிப் பேசுகிறாரோ?'' என்றும் கேட்டார்.

''கனம் அங்கத்தினருக்கு ஒன்று நினைவுறுத்த விரும்புகிறேன். ஆட்சி அவரது கட்சியின் கையிலிருந்த பொழுதே இது துவங்கிவிட்டது'' என்றார் நிதிமந்திரி கோபமான குரலில்.

அப்பொழுது முதல் அமைச்சர், தாமே எழுந்து நின்று எல்லை மீறிப் போயிருக்கும் நிலைமையின் பயங்கரத்தை விளக்கினார். பிறகு கடிகாரத்தில் ஒரு தடவை பார்வையைச் செலுத்தி விட்டுத் தொடர்ந்தார்:

''மாலை ஆறு மணி அடிக்க இன்னும் இருபதே நிமிஷங்கள் இருக்கின்றன. உங்களில் யாருக்காவது இந்த இக்கட்டான நிலையிலிருந்து தப்ப வழி தோன்றுகிறதா?'' என்று பரிதாபமாகக் கேட்டார்.

ஒரு அங்கத்தினர் எழுந்து காரசாரமான குரலில், ''நப்புக்குத் தாள முடியாத கஷ்டங்களை அளித்தால், ஒரு வேளை அவர் கண்டு பிடித்துள்ள அணு குண்டின் ரகசியத்தைக் கூறலாம்!'' என்றார்.

ஆனால் இது அர்த்தமற்ற ஆலோசனை: இருப்பதோ இன்னும் இருபது நிமிஷம் கூட இல்லை. எனவே, யாரும் அவரது பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

பிரிட்டன் மட்டும் என்ன? எல்லா நாடுகளுமே அந்த வேளையில் பேராசிரியர் நப்பைப் பற்றியும், அவரது குண்டைப் பற்றியுமே வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தன.



நியூயார்க்கில் எல்லா இடங்களிலும் இதே கேள்வி பறந்தது: ''பேராசிரியர் நப் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் அல்லவே?''

மாஸ்கோ ரேடியோ ஒலிபரப்பிக் கொண்டிருந்தது: ''முதலாளிகளின் பேடித்தனமான செய்கைக்கு இது ஓர் அசைக்க முடியாத அத்தாட்சி. பேராசிரியர் நப், முதலாளி வர்க்கத்தின் ஒத்துழைப்பைப் பெற்று ஸோவியத் யூனியனுக்கு எதிராகப் பயங்கரச் சதி செய்து கொண்டிருக்கிறார். இதைவிடக் கேவலம் வேறு என்ன வேண்டும்?''

ஆறு அடிக்க ஐந்தே நிமிஷங்கள் பாக்கியிருந்தன. பேராசிரியர் நப்பின் மாமியார் அமைச்சருக்குப் போன் செய்தார்: ''பேராசிரியர் நப்புக்குத் தாங்கள் பிரபுக்கள் சபையில் அங்கம் அளித்து விடுங்கள். எல்லாம் சரியாகி விடும்!''

முதல் அமைச்சர் துள்ளிக் குதித்தார். உடனே அவர் சிறைக்கூடத்துக்குத் தொலைபேசியை இணைத்துப் பேசினார்: ''பேராசிரியர் நப்புக்குப் பிரபுக்கள் சபையில் அங்கம் அளிக்கப்படுகிறது என்பதை அறிவியுங்கள்; அவர் வேண்டுவதெல்லாம் கிடைக்கும் என்று சொல்லுங்கள். வாழ்நாள் முழுவதும் வருமான வரியிலிருந்து அவருக்கு விலக்கு அளிக்கப்படும் என்றும் சொல்லுங்கள்!''

ஆனால் அதற்குள் விநாடி விநாடியாக நிமிஷம் நிமிஷமாகப் பொழுது போய்க் கொண்டிருந்தது. கோபமே உருவாக உட்கார்ந்திருந்த பேராசிரியர் நப், ''விஞ்ஞானி தன் நேர்மையையும் நாணயத்தையும் விற்கமாட்டான் என்று உங்கள் முதல் அமைச்சருக்குச் சொல்லுங்கள்!'' என்று தெளிவாகவும் தைரியமாகவும் கூறி விட்டார்.

முதல் அமைச்சர் நம்பிக்கையிழந்து போனை வைத்து விட்டார். ''முட்டாள்!'' என்று முணுமுணுத்துக் கொண்டே உட்கார்ந்தார்.

மாஸ்கோவிலும் அதே நேரத்தில் பேராசிரியர் நப்புக்கு நல்ல அர்ச்சனைகள் அமோகமாக நடந்து கொண்டிருந்தன. ஆனால் எழுத்தால் எழுத முடியாத சொற்கள் அவை.

இந்தியாவின் முதல் பரிசுத்த கரணி, நம் நாட்டின் பழக்க வழக்கமான சுத்தம் செய்யும் முறைகளைப் புரட்சிகரமாக மாற்ற

டெட் செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட ஒரு பரிசுத்த கரணி, சோப்பவுடர் அல்ல, சோப்பை ஆதார மாகக் கொண்டும் தயாரிக்கப் பட்டதல்ல, சோப்பைக் காட்டிலும் வெகு சீக்கிரத்தில் சுத்தம் செய்கிறது. அழுக்கு களையும், எண்ணெய்ப் பசை களையும் துப்புரவாக போக்கு கிறது. ஆயினும் டெட்டில் காரமான ரசாயனப் பொருள் கள் இல்லை. கைகளில் பட்டால் இதமாக இருக்கிறது. அது உயர்தர சலவை சோப்புகளைக் காட்டிலும், பரிசுத்தமான உடை களுக்கும் அவைகளின் நீடித்த உழைப்புக்கும் உத்திரவாதம் அளிக்கிறது.



டெட் பரிசுத்த கரணி யாதலால் தரை, பாத்திரங்கள், சுவர்கள் முதலிய எல்லா வற்றையும் சுத்தம் செய்கிறது. அது தரையையும், துணி மணிகளையும் வித்தியாசமில்லா மல் ஒரே மாதிரியாக சிறந்த முறையில் சுத்தம் செய்கிறது.





தி ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்

shilpi s-o-m 513 a tam

அடிக்கடி சிறுநீர் போதல்

அடிக்கடி சர்க்கரையுடனோ அல்லது சர்க்கரை இல்லாமலோ சிறுநீர் போவதானது அபாயகரமான வியாதியாகும். அதனுல் ஆரோக்கியம் வெகுவாக சீரழிந்து போவதுடன் அந்த நோய் கண்டவர்களை நாளுக்கு நாள் சாவுக்கு அருகாமையில் இழுத்து விடுகிறது. வியாதியின் ஆரம்பக் காலத்தில் உடலும், மூளையும் வேலை செய்ய மறுக்கும். இடுப்பு வலி, மந்தப் பார்வை, தொடைகளில் உணர்ச்சியின்மை, பலஹீனம் ஏற்படும். இந்த வியாதி ஏற்பட்டவுடன் சிகிச்சை செய்யாவிட்டால் கட்டிகள், ராஜப் பிளவை சரிவென்வரம், உடல் முழுவதும் வலி, மூட்டுக்கு வாதம் ஆயம், எடைக் குறைதல் சொறி, கால்களில் வீக்கம், அசாதாரணமான தாகம், பசி, இத்துடன் வாய் வறட்சி, தொண்டை வறட்சி முதலியவையும் இதர கடுமையான வலியிருந்த வேதனைகளும் ஏற்படும். பழங்கால யூனானி முறைப்படி அபூர்வ மூலிகைகள், தாவரச் சத்துக்களுடனும் இயற்கை கால்ஷியம்களுடனும் விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப்பட்டது. "வீனஸ் சார்ம்" வில்லைகள், ஆயிரக்கணக்கான நோயாளிகள் இதை உபயோகித்து குணம் கண்டு மரணத்திலிருந்தும் தப்பி யிருக்கிறார்கள். இந்த வைத்தியத்தை ஆரம்பித்த 2வது அல்லது 3வது தினத்திலிருந்தே சிறுநீரில் இருக்கும் சர்க்கரையும் அடிக்கடி போகும் சிறுநீரும் குறைந்து விடுவதுடன் ஒரு சில தினங்களுக்குள் உங்கள் வியாதி பாதிக்கு மேல் குறைந்திருப்பதை உணர்வீர்கள்.

"வீனஸ் சார்ம்" சிக்கனமானது. பத்திரமானது. உட்கொள்ள சுலபமானது. கடும் பத்தியங்கள் கிடையாது. அல்லது பட்டினியிருக்க அவசியமில்லை. நோயாளிகள் போஷாக்குக் குறைவை நிவர்த்திக்க பலரகமான உணவுப் பண்டங்களை சாப்பிடலாம். ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விவரங்கள் தேவையுள்ளோருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

50 மாத்திரைகள் கொண்ட புட்டி ஒன்றின் விலை ரூ. 6-75 n. p

(பார்சல் தபால் செலவு இலவசம்)

*

கிடைக்கும் இடம் :

வீனஸ் ரிஸர்ச் லாபரேட்டரி (K. M.)

தபால் பெட்டி நெ. 587 கல்கத்தா

தீய ஆஸ்த்மா

பிராங்கைட்டிஸ் சளி

நீங்கள் தூங்கும்போது இளகுகிறது

ஆஸ்த்மா, பிராங்கைட்டிஸ், ஜலதோஷத்தால் மூச்சுத் திணறல், இருமல், தும்மல், மூச்சடைப்பு உபாதைகளால் அவதிப் படும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இப்போது மெண்டாகோ (Mendaco) அருந்தி அற்புத நிவாரணம் அடைகிறார்கள். இந்த நவீன, விஞ்ஞான, அமெரிக்க மருந்து இரத்தத்தின் வழியே சுவாசப் பைகள், சுவாசக் குழாய்கள், மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் தும்மலின்றிச் சுகமாகச் சுவாசித்துக் குழந்தைபோல் தூங்கலாம். கெமிஸ்டிடம் மெண்டாகோ (Mendaco) வாங்குக. திருப்தி இன்றேல் பணம் வாபஸ்.

சிரங்கு கிருமிகள்

7 நிமிஷத்தில் கொல்லப்படுகின்றன

உங்கள் சருமத்தில் ஏறக்குறைய 50 லட்சம் சிறு துவாரங்களும் மடிப்புகளும் உள்ளன. கிருமிகள் அவைகளில் ஒளிந்திருந்து தாங்க முடியாத அரிப்பு, வெடிப்பு, கரப்பான், தோல் உரிதல், எரிச்சல், படை, முகப்பருக்கள், காலில் சிரங்கு முதலிய இதர கோளாறுகளை உண்டு பண்ணுகின்றன. சாதாரண சிகிச்சைகள் தற்காலிகமான குணத்தையே அளிக்க வல்லது—ஏனெனில் இவை கிருமிகளுக்கான காரணத்தைக் கொல்வதில்லை. இந்தப் புதிய சிகிச்சை முறையான நிக்ஸோடெர்ம் (Nixoderm) இந்தக் கிருமிகளை 7 நிமிஷத்தில் கொன்று விடுகிறது. தவிரவும் இது உங்களுக்கு மிருதுவான, மாசற்ற வசீகரமான, வழவழப்பான சருமத்தை ஒரே வாரத்தில் அளிக்க உத்தரவாதம். அன்றேல் வெற்றுப் பெட்டியை அனுப்பினால் பணம் வாபஸ். இன்றே உங்கள் கெமிஸ்டிடமிருந்து உத்தரவாதம் பெற்ற நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்கி உங்கள் சரும உபாதைகளின் உண்மைக் காரணத்தை அகற்றுங்கள்.

Nixoderm


நிக்ஸோடெர்ம்

சரும உபாதைகளுக்கு

அங்கே அவரை 'மேல்நாட்டு நீரோ' என்றார்கள். ரோமாபுரியைத் தன்னிச்சையாக ஆட்டிவைத்துக் கொட்டம் அடித்த நீரோ எங்கே? பேராசிரியர் நப் எங்கே? இதையெல்லாம் அவர்கள் யோசிக்கவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி டெலிவிஷனில் மக்களைத் தைரியத்தைக் கைவிடாமல் இருக்குமாறு கேட்டுக் கொண்டிருந்தார். லண்டனில் முதல் அமைச்சர் பி. பி. ஸி.க்குப் போன் செய்து இரவு ஒன்பது மணிக்கு ஒலிபரப்பப்படும் செய்தி அறிவிப்புக்குப் பிறகு தாம் பேசப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஆனால் பொதுமக்கள் வியக்கக்கூடிய வகையில் அமைதியை அநுஷ்டித்தார்கள். எங்கும் எந்தவிதமான குழப்பத்துக்கான அறிகுறியும் தென்படவில்லை. ஆபத்து தலைக்குமேல் ஊசலாடிக் கொண்டிருக்கும் பொழுது பயந்து பதற்றமுற்று என்ன பிரயோசனம்? குண்டு ஓரேயடியாக வெடிக்குமா? படார் என்று சத்தம் கேட்குமா? படீர் என்று சத்தம் கேட்குமா? ஒரே சத்தத்துடன் நிற்குமா? பல சத்தங்கள் போடுமா? இல்லா விட்டால் தொடர்ந்து உலகம் முழுவதும் எதிரொலிக்குமா? காது கிழியும் கர்ணகடூர ஒலியாக இருக்குமா? அல்லது சத்தமே கேட்காமல் வெடித்து விடுமா?"—இது போன்ற ஆராய்ச்சியிலும் பேச்சிலும் அவர்கள் பொழுதைச் செலவிட்டுக் கொண்டிருந்தனர்.



மணிக்கூண்டு கடிகாரம் 'டணார், டணார்' என்று ஆறு அடிக்கத் தொடங்கியது. ஆறாவது தடவையாக அது அடிக்கும்பொழுது ஒரு ஆச்சரியமான சம்பவம் நிகழ்ந்தது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் தங்கள் நாற்காலிகளிலிருந்து உருண்டு தரையில் விழுந்தனர். அநேகரோ மூர்ச்சையிழந்து பேச்சு மூச்சற்றுப் போய்விட்டனர். 'நண்பர்கள் ஆம்புலன்ஸ் யூனிட்' மிகச் சுறுசுறுப்பாகப் பணி புரிந்தது. ஒவ்வொருவராக எல்லா அங்கத்தினர்களையும் ஸ்டிரெக்சரில் தூக்கிப் போட்டுத் தாமதமின்றி ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்தார்கள்.

அரைமணிக்குப் பிறகு மந்திரிகள் குழுவிலே மூவருக்கு இதய அமுக்கம் ஏற்பட்டதாகவும் இப்பொழுது எல்லோரும் நலமுற்றுச் சௌக்கியமாக இருப்பதாகவும் செய்தி வந்தது. ஏறக்குறைய நானூறு அங்கத்தினர்கள் மூர்ச்சையுற்று விழுந்தார்கள். இப்பொழுது அவர்களில் ஆறு பேரைத் தவிர மற்றவர்கள் மூர்ச்சை தெளிந்து எழுந்து விட்டார்கள் என்றும் செய்தி வந்தது.

இதைத் தவிர, குண்டு வெடித்ததனால் சேதம் ஏற்பட்டுள்ளதாக எங்கிருந்தும் தகவல் வரவில்லை. மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

"நமது நாடு நிச்சயமாக யுத்தத்தை ஆதரிக்கவில்லை. அதனால்தான் 'நேர்மைக் குண்டு' வெடித்தும் துளிக்கூடச் சேதமே ஏற்படவில்லை" என்ற முடிவுக்கு வந்தார்கள்.

அமெரிக்காவிலிருந்தும் இதே செய்திதான் கிடைத்தது. குண்டு வெடித்ததனால் எவ்விதமான விபத்தும் சேதமும் நேரவில்லையாம். அவ்வளவு பெரிய அமெரிக்க நாட்டிலேயே யாரும் சாகவில்லையாம். ஆனால் அமெரிக்க டாக்டர்கள் குண்டு வெடித்த பிறகு பெரும்பாலான மக்களுக்கு அஜீரணக் கோளாறு ஏற்பட்டிருப்பதாக மட்டும் கூறுகிறார்கள் என்றும் செய்தி வந்தது.

"மாஸ்கோவின் நிலை என்ன?" மதுக் கிண்ணத்தை உதடுகளுடன் உறவாட விட்டவாறே முதல் அமைச்சர் கேட்டார்.

"என்ன அதிசயம், போங்கள்!" அவருடைய அந்தரங்கக் காரியதரிசியே பதில் சொன்னார்: "கிடைத்திருக்கும் செய்திகளின் பிரகாரம் ருஷ்யாவுக்கு எந்தவிதமான சேதமும் உண்டாகவில்லையாம்!"

"என்ன?" முதல் அமைச்சர் உரக்கவே கூவி விட்டார். "இதற்கு என்ன பொருள்? அத்தனை பெரிய ருஷ்ய நாட்டில் யாருமே யுத்தத்தை விரும்பவில்லை, அமைதியை நாடுகிறார்கள் என்பதுதானே?" என்றார்.

"அப்படி யிருக்கவே முடியாது. எல்லோருமேயா யுத்தத்தை விரும்பாதவர்களாக இருப்பார்கள்? நம்பிக்கை உண்டாகவில்லையே? ஆனால் பேராசிரியர் நப்பும் தாம் எடுத்துக் கொண்ட காரியத்தில் இதுவரை தவறு இழைத்தது இல்லை!" என்றார் அந்தரங்கக் காரியதரிசி.

முதல் அமைச்சர் மௌனமானார். அவர் நெற்றிச் சுருக்கம் இன்னும் அதிகமாகிவிட்டது.

அமெரிக்க ஜனாதிபதி டெலிபோனில், "ஒரு வேளை குண்டு வெடிக்கும் நேரத்தைக் குறிப்பதில் தவறு நேர்ந்திருக்கலாம் அல்லவா?" என்று அவரைக் கேட்டபொழுது, "இருக்கவே இருக்காது. பேராசிரியர் நப் தமது பத்து வருஷ வாழ்க்கையில் தவறே இழைத்தவரல்ல!" என்று அழுத்தம் திருத்தமாகப் பதிலளித்தார் முதல் அமைச்சர்.

அன்றிரவே முதல் மந்திரியின் செய்தி வானொலியில் ஒலிபரப்பாகியது:

"பேராசிரியர் நப் அவர்கள் எப்பொழுதுமே மக்கள் நலனுக்கான காரியங்களைச் செய்து வந்திருக்கிறார். இந்தக் குண்டு ஆராய்ச்சியும் அதி அற்புதமானது; பேரதிசயமானது. இனி அவருக்குப் பூரண ஓய்வு வேண்டும். எல்லாக் கட்சியினரும் தங்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து அவரைக் கௌரவிக்க வேண்டும். வதந்திகள் பரவுவதைத் தடுக்க வேண்டும். இரும்புத் திரைக்குப் பின்னால் நிகழ்ந்திருக்கும் உண்மை என்ன என்பதை யாரால் சொல்ல முடியும்? லட்சக்கணக்கானவர்கள் அங்கே மரித்திருக்கலாம். வேண்டுமென்றே அந்தச் செய்தியை அவர்கள் அமுக்கியிருக்கலாம்;

ஆண்டவனை நாம் அனைவரும் வாழ்த்தி வழிபட வேண்டும். ஏனெனில் அவர் நம் அனைவரையும் உயிருடன் உலாவ விட்டிருக்கிறார். ஆண்டவனது சித்தம் எதுவாயிருக்க முடியும், நாம் எல்லோரும் உலகத்தில் அமைதியை நிலைநாட்ட அந்தரங்க சுத்தியுடனும், நல்லெண்ணத்துடனும் நாணயத்துடனும், நேர்மையுடனும் பாடுபட வேண்டும் என்பதைத் தவிர? இந்த விசேஷ அணுகுண்டு கண்டுபிடிக்கப்பட்டு விட்டதால் நமக்கு இனி யுத்த பயம் இல்லை. ஆனால் வேறு நாடு ஏதாவது வாலாட்டித் தவறான முறையில் நடந்து கொள்ள முற்பட்டால் நாம் தயாராக இருக்க வேண்டும்!''

மாஸ்கோ ரேடியோவிலிருந்து அதே நேரத்தில் ஒலிபரப்பாகிய செய்தி வருமாறு:

''நேர்மைக் குண்டு வெடித்த நிகழ்ச்சியிலிருந்து புலனாவது என்னவென்றால், ருஷ்ய நாடு அமைதியையே ஆதரிக்கிறது. யுத்தத்தை ஆதரிக்கவே இல்லை என்பதுதான். குண்டு வெடித்ததனால் ருஷ்யாவில் ஒரு உயிருக்குக் கூட, ஒரு அணுவுக்குக் கூடச் சேதம் ஏற்படவில்லை. அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் லட்சக் கணக்கான மக்கள் மரணமடைந்திருக்கும் இவ்வேளையில் ருஷ்யாவில் ஒரு உயிருக்குக் கூடச் சேதமில்லை என்பது எதைக் காட்டுகிறது என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்லவும் வேண்டுமா?'' - 'நவநீத்'திலிருந்து

படித்துப் பாருங்கள்

அறிவுச் செல்வம்

ஆழ்கடலில் பல தடவைகள் முத்துக் குளித்துப் பலரக முத்துக்களை எடுத்தால்தான் அந்த முத்துக்களைக் கோர்த்து அழகிய முத்து மாலையாக்க முடிகிறது. அதைப்போல, பல இலக்கிய நூல்களில் மூழ்கி ரஸித்தால்தான் அதிலுள்ள அழகிய கருத்துக்களை அறிந்து கொள்ள முடியும். உலகத்திலுள்ள பல அறிஞர்களின் சிறந்த கருத்துக்களை இந்நூலில் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். அரிஸ்டாட்டில், ராமகிருஷ்ணபரமஹம்சர், ராஜாஜி முதலிய எழுநூறு பேரறிஞர்களின் கருத்துக்கள் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

'அரும் பெரும் மனிதர்கள் திடீரென்று தோன்றி விடுவதில்லை. அந்தந்தப் பருவங்கள் அந்தந்தக் காலத்துக்குத் தகுதியான பிரத்தியேகமான மலர்களை உண்டாக்குவது போல, சமுதாயத்தின் மாறி வரும் தேவைகளுக்கேற்ப மகாபுருஷர்கள் உருவாக்கப்படுகின்றனர்' என்ற ராஜாஜியின் அருள்மொழியை இந் நூலில் காண்கிறோம்.

தொகுத்தவர்: திரு எஸ். குமரேசன், பிரசுரம்: எஸ். எம். ஜெகந்நாதம், நாகர்கோவில்; விலை ரூ. 3

பாக்கியத்தின் பாக்கியம்

தமிழ் இலக்கிய உலகிலே, சிறுகதை மாளிகையைச் சிறந்த முறையில் சமைக்கும் சிற்பிகளிலே ஸ்ரீ பி. எஸ். ராமையா முக்கிய ஸ்தானம் பெற்றவர். அழகழகான சிறுகதைச் சித்திரங்களை நேயர்களின் மனக்கண்ணெதிரே கொண்டு வந்து நிறுத்தி அழியாப் புகழைத் தேடிக்கொண்ட அவரது கதைகளில் ஆறு இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

'அமிஞ்சிக்கரை சோமு' கள்ளனுக்கும் உள்ளம் உண்டு என்னும் உண்மையை நிரூபித்து உதவுகிறான். 'கார்னிவால்' கதை 'தன் குற்றம் தனக்குத் தெரியாது' என்னும் தத்துவத்தை விளக்குவதோடு, கதை சொல்லும் உத்தியின் உயர்வு காரணமாக நெஞ்சிலே நிறைந்து நிற்கிறது. சமூகத்தின் நிலையைச் சித்திரமாகத் தீட்டிக் காட்டுகிறது.

'தழும்பு' என்னும் கதையிலே தனயனின் குறும்புத்தனத்துக்குத் தந்தை தனக்குத் தகுந்த தண்டனை அளித்துக் கொண்டு, அவன் மனத்தை மாற்றும் அரிய காட்சி படிப்பவர்களின் உள்ளத்தைப் பெரிதும் கவரும் என்பதில் ஐயமில்லை.

'கானல் நீர்' என்னும் நீண்ட கதைக்கு எடுத்துக் கொண்ட கதைக் கரு சாதாரணமானதுதான். என்றாலும், கதையை அமைத்துள்ள விதம் கவர்ச்சிகரமாக அமைந்துள்ளது.

'பாக்கியத்தின் பாக்கியம்' என்னும் இந்தக் கதைத் தொகுதிக்குக் கட்டாயம் படிப்பவர்களின் மனத்தைத் தொட்டு மகிழச் செய்யும் பாக்கியம் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை—4 விலை: ரூ. 2.

புத்தகம் தயார்

எண்ணும் எழுத்தும் இரண்டு கண்கள் போன்றதாகும் என்றார் வள்ளுவர்பெருமான். இப்படிப்பட்ட எண்ணும் எழுத்தும் கொண்ட புத்தகங்களே இன்று அறிவூட்டும் கருவூலங்களாக அமைந்திருக்கின்றன. அறியாமை நீக்கி அறிவுச் செல்வமளிக்கும் இந்தப் புத்தகங்களைத் தயாரிக்கும் விதத்தைத் தெரிந்து கொள்வது அவசியமல்லவா?


அச்சுக் கோப்பதிலிருந்து புத்தகம் தயாராகும் வரையுள்ள அந்த நுணுக்கக் கலையின் விருத்தியை அந்தக் கலையில் பயின்று தேர்ந்த இந் நூலாசிரியர் எழுதியிருக்கிறார்.

எழுதியவர்: தம்பி சீனிவாசன்; பிரசுரம்: அமுதநிலையம், தேனாம்பேட்டை, சென்னை-18 விலை 75 நயே பைசே.

பாலர் கதைகள்


கதை கேட்பதில் குழந்தைகளுக்குள்ள ஆர்வத்தை விவரித்துச் சொல்ல இயலாது. 'பாட்டி ஒரு கதை சொல்லு! தாத்தா ஒரு கதை சொல்லு!' என்று முதியவர்களை நச்சரிப்பதிலிருந்தே அவர்களது ஆர்வத்தையும் விருப்பத்தையும் நன்கு தெரிந்து கொள்ளலாம். சின்னஞ் சிறுவர்களின் உள்ளத்தைக் கவரும் முறையில் இந்த நூலில் ஒன்பது கதைகள் இடம் பெற்றிருக்கின்றன. ஒரு 'சித்திரக் குள்ளன்' குழந்தைகளுக்குச் செய்யும் உதவியினால் அவனுக்கே பலன் கிட்டுகிறது.

எழுதியவர்: பைங்காநாடு வெங்கடராமன்; பிரசுரம்: வீனஸ் பப்ளிகேஷன், மன்னார்குடி. விலை 50 நயே பைசே.



டாட்ஜ்

டீசல்கள்





பாக்கியவதி

திருடன் நல்லவனாக மாறுவது என்பது சினிமா உலகத்துக்குப் புதிய விஷயமல்ல.

"பிரேம பாசம்", "துஷ்மன்" முதலிய படங்கள் அதற்குச் சான்று பகர்கின்றன.

மண் ஒன்றுதான். ஆனால் அதிலிருந்து பிறக்கும் உருவங்கள் எத்தனையோ. அது போல, கதையின் அடித்தளம் ஒன்றுதான். ஆனால் அது வெவ்வேறு தினுசாக உருவெடுத்திருக்கிறது.

ரவி புரொடக்ஷன்ஸாரின் தயாரிப்பான "பாக்கியவதி" முன்பு வெளியான "மங்கையர் திலகம்" "எதிர்பாராதது" முதலிய படங்களைப்போல் அழுத்தமான கதையம்சத்தைப் பிரதானமாகக் கொண்டிருக்கிறது.

கதையம்சம் சிறப்பாயிருந்தால்தான் நடிகர்களின் நடிப்பு, காட்சி அலங்காரங்களின் சிறப்பு, சம்பாஷணையின் எடுப்பு, பாட்டின் தரம் ஆகிய எல்லாம் உயர்ந்து விளங்கும்.

ஒரு படத்தில், கதையம்சத்தைக் கைசோர விட்டு விட்டு, மற்ற அம்சங்களில் எத்தனை கவனம் செலுத்தியிருந்தாலும் அந்தப் படம் சுவாரஸ்யப்படாது. அதற்கு உதாரணமாக, "தங்கமலை ரகசியம்", "வணங்காமுடி", "புதுமைப்பித்தன்", "இரு சகோதரிகள்"... முதலிய படங்களைக் குறிப்பிடலாம். இந்த ரகத்தில் குறிப்பிடுவதற்கு இன்னும் எத்தனையோ படங்கள் இருக்கின்றன.

ராமாயணத்தில் கதாபாகம் தலைசிறந்து நிற்பதால்தான், ஊழி ஊழி காலமாக அது உலகமெல்லாம் பரவி நிற்கிறது. தெருப் பந்தலில் நிகழ்த்தப்படும் சாதாரண உபன்யாசங்கள் முதல், பெரிய பாகவதசிரோமணி இன்னிசைக் கருவிகளுடன் நடத்தும் கதாப் பிரவசனங்கள் வரையில் குன்றாத சுவையுடனும் குறைவற்ற பெருமையுடனும் ராமாயண காவியம் பொலிகிறது.

"பாக்கியவதி"யில் கதாநாயகன் சிவாஜி கணேசன், கதாநாயகி பத்மினி என்றால் போதும்; படத்தின் தரம் தானே எல்லோருக்கும் விளங்கிவிடும்.

திரைக்கதை கல்யாணமான பிறகு ஆரம்பமாகிறது. ஆகவே, காதல் காட்சிக்கும் அதையொட்டி வரும் வேதனை, சூழ்ச்சிகளுக்கும் இதில் இடமில்லை. ஆனால், காதல் காட்சி இடம் பெறாமலே போய் விடவில்லை.

கதாநாயகன் சோமு ஒரு திருடன்; அவனை மணந்த பேதை மீனா ஒரு துர்ப்பாக்கியவதியல்ல—அவள்தான் "பாக்கியவதி." கணவனின் திருட்டுக் குணத்தை மாற்றி அவனை நல்வழிப்படுத்தப் பலவிதத்திலும் முயல்கிறாள்; பலமுறையும் தோல்வி யடைகிறாள். கடைசியில், அவள்மகன் தந்தையைத் திருத்தி விடுகிறான். சீர்குலைந்த வாழ்வு சீர்ப்படுகிறது. பிரிந்த குடும்பம் ஒன்றுபடுகிறது.

'கேடி' சோமுவாக நடிக்கும் சிவாஜி கணேசன் இந்தப் படத்தில் அரிய சாதனையைச் செய்திருக்கிறார்; பண்பாடும் பகுத்தறிவும் இல்லாத கசடனாக முதலில் நடித்தவர் கடைசியில், உத்தம பாத்திரமாக மாறிவிடுகிறார். இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவர் நடிப்பு சிறந்து நிற்கிறது.

மீனாவின் அன்பு அண்ணனாக நடிக்கும் சங்கர், அவளை ஆடையாபரண அலங்காரங்களுடன் சோமுவிடம் கொண்டு வந்து சேர்க்கிறான். அதுவரையில் அவளை வெறுத்து வந்த சோமு, அவள் அணிந்திருந்த நகைகளைக் கண்டதும் மாறி விடுகிறான். அத்தியந்த பிரேமையை அவளிடம் காட்டுகிறான். கள்ள மறியாப் பேதையின் நகைகளைக் களவாடிக்

கொண்டு வெளியேறுகிருன்: அந்தக் கட்டம் ''திருடனுக்குத் தோன்றும் திருட்டுப் புத்தி'' என்னும் பழமொழியின் அரிய விளக்கமாக அமைந்திருக்கிறது.

இனித் திருடுவதில்லை என்று மனைவியிடம் கையிலடித்துக் கொடுத்த சோமு, நேர்மையான வழியில் கிடைத்த பணத்தை அவளிடம் கொடுத்தபோதும் அவள் அவனை நம்ப மறுக்கிருள். அவன் தன் கையைத் தீயிட்டு, தன் நேர்மையை ருசுப்படுத்துகிருன். அந்த ஒரு சில நிமிஷங்கள் சிவாஜி கணேசனின் நடிப்பு எல்லோரையும் உருக்கி விடுகிறது.

மீனுவாக நடிக்கும் பத்மினிக்கு இப்படத்தில் நடனமாடச் சந்தர்ப்பம் இல்லை. மற்றப்படி, கணவனை நினைத்து ஏங்க, அவன் திருந்தாமல் இருப்பதை நினைத்துக் கண்ணீர் விட, பலகாரக் கடை வைத்துச் சிறுமைப்பட ஆகிய எல்லாவற்றுக்கும் சந்தர்ப்பங்கள் வாய்க்கின்றன. மேற்கூறிய சந்தர்ப்பங்களில் அவர் நடிப்பிலும் துடிப்பிலும் கண்ணீரிலும் கரைந்து நாம் பெருமைப்பட நிறைய இடம் இருக்கிறது: சினிமா பார்க்கிறோம் என்பதை மறக்கச் செய்து நம்மையும் திரைக் கதையோடு இணைந்து உருகச் செய்கிறது.

இந்தப் படத்தில், திரைக்கதையின் திருப்பத்துக்கு, சங்கர் மிகவும் உதவியான பாத்திரம். மீனுவை மணக்க முடியாமற் போனதற்கு, சினிமா வழக்கப்படி அவன் பழி தீர்க்கும் பழிகாரனுக உருவெடுத்திருக்க வேண்டும். ஆனால் இதில் அவன் மிகவும் நல்லவனுக மாறி மீனுவைத் தன் தங்கையாகப் பாவித்து அவள் வாழ்வு வளம் பெற முயல்கிருன்: இது கொஞ்சம் அதியாகப் போய், தமிழ்ப் படம் பார்க்கிறோம் என்னும் நினைப்பு ஏற்படுகிறது.

சங்கரின் முறைப் பெண் கருணவாகத் தோன்றும் ராகினிக்கு இந்தப் படத்தில் அதிக வாய்ப்பு இல்லை. ஆனல் ''அரும்பு மலர்ந்து அசைந்து ஆடும் அழகைப் பாரையா...'' என்ற பாட்டுக்கு அபிநயம் பிடிக்கும் போது, அரும்பு மலர்ந்து அசையும் அழகை ராகினியிடம் காண முடிகிறது. மருதகாசி இயற்றிய இந்தப் பாட்டுக்குச் சூலமங்கலம் ராஜலக்ஷ்மி அழகாகக் குரல் கொடுக்கிருர்.

கள்ளர் தலைவனின் செல்வமகளாக வளரும் பாமா ''பாக்கியவதி''யின் கதைக்கு முக்கிய திருப்பமாக உதவுகிருள். முன் பகுதியில், ஆண் உடையில் தோன்றிச் சிட்டாடிச் சோமுவைச் சீராடின இவள் கடைசியில் கள்ளனின் துப்பாக்கிக் குண்டைத் தாங்கி உயிர்த் தியாகம் புரிந்து படத்தைப் பூர்த்தி செய்கிருள். இந்தப் பாகத்தில் நடித்த எம். என். ராஜம், நல்லவர்களுக்காகப் பல படங்களில் உயிர் துறந்து நல்ல அநுபவம் பெற்றவர். அவர் நடிப்பு எப்படிச் சோடை போய் விடும் ?

பணங் காக்கும் பூதமாகத் தோன்றும் கே. சாரங்கபாணி, தமது பாணியைக் கைவிடாமல் ஹாஸ்யரஸத்தோடு நன்கு நடித்திருக்கிருர்.

சினிமாக் கதைகள், ஓரளவு கதையம்சத்தில் சிறந்து விளங்கினும், இந்தக் கதையை எந்த வடநாட்டு ஆசிரியர் எழுதினர் என்று நினைக்கும்படியான துர்ப்பாக்கிய நிலை நம் நாட்டில் இருப்பதை நாம் மறுக்க முடியாது. பாழாய்க் கிடந்த இடங்களைப் பண்படுத்திப் பயிர் செழிக்கச் செய்த தமிழன், தரிசாய்க் கிடந்த இடங்களைத் தன் உழைப்பினுல் தங்கம் விளையச் செய்த தமிழன், ஒரு சினிமாக் கதைக்கு வடநாட்டைத் தேடிச் செல்லும் இழிநிலையை நான் ஏற்கெனவே கண்டித்திருக்கிறேன். வடநாட்டுக் கதைகளை ஆதாரமாகக் கொண்டு எத்தனையோ தமிழ்ப் படங்கள் வந்து விட்டன: வந்து கொண்டிருக்கின்றன. ஆனல் ''பாக்கியவதி'' அந்தப் பிடியிலிருந்து தப்பி விட்டது.

''பாக்கியவதி'' கதை பிரபல சினிமாக் கதை எழுத்தாளர் திரு ரா.வே. எழுதியது.

சோமுவைக் கட்டிப் போட்டு, கள்வர் தலைவன் இம்சித்தபோது, ரவியும் மீனுவும் வருகின்றனர்; மீனுவும் இம்சைக்குள்ளாக நேரிடுகிறது. இந்தக் கட்டம் சோமுவின் மன மாற்றத்தைக் காட்டுவதற்கு உதவியாயிருந்தாலும் திரைக்கதையைச் சப்பென்று, முன்னேற விடாமல் செய்து விடுகிறது.

சிறுவன் ரவியாக நடிக்கும் மாஸ்டர் கோபால் எல்லோருடைய பாராட்டுக்கும் உரியவன். அவன் மட்டும் இல்லையென்ருல், சோமு திருந்தியிருக்க மாட்டான்.

டைரக்டர் பிரசாத் ஒரு படத்தை டைரக்ட் செய்திருக்கிருர் என்ருல் அந்தப் படம் ஒரு நல்ல படமாகத்தான் இருக்கும். 'பாக்கியவதி' அவருடைய திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு.



பெண் உள்ளம்



காலையிலிருந்து காற்றில்லாத இடத்தில் ஓடியாடித் திரிந்த அஞ்சனாவுக்குத் தலை சுற்றவே ஒதுக்குப்புறமாயிருந்த மொட்டை மாடியில் போய்ப் படுத்தாள். படுத்ததும் கண்ணயர்ந்தாள். எத்தனை நேரம் தூங்கினாளோ தெரியாது. அவள் கணவனைப் பற்றிப் பேசுவது அவளைத் தட்டி எழுப்பியது.

''அந்த அழகிய மங்கை யார் அத்தை?''

''ஜம்புலிங்கத்தின் மனைவி. இப்பத்தான் ஆறு மாதத்துக்கு முன்னால் கல்யாணம்......''

''இந்த வயதிலா......பல் உதிர்ந்த பணப் பேய்க்கு இளம் பெண் ஒருத்தி......மனைவி என்ற உரிமைக்குறி ஒரு நாலைக் கழுத்தில் கட்டி விட்டால் அது மகிழ்ச்சிக் குறியான மாங்கலியச் சின்னமாகி விடுமா? பாவம்! அழகில் ரதியைப்போல் இருக்கிறாள்.''




''சரளாவை என் தம்பி இரண்டாந்தாரமாய்க் கேட்டான். அவனுக்குக் குழந்தை குட்டியில்லை. அப்படியிருந்தும் இவள், 'முகர்ந்த மலரை நான் முகர மாட்டேன். கூலி வேலை செய்பவனாயினும் சரி. மூத்த தாரமாய்த்தான் வாழ்க்கைப் படுவேன்' என்று சொல்லிவிட்டாள்'' என்று மணப் பெண்ணின் தாய் பெருமையாய்ச் சொல்வது கேட்டது. அப்பொழுதுதான் காலையில் அவள் தாய் சொல்லிக் கொண்டிருந்தது. அவள் மனத்தில் எதிரொலித்தது.

'பாழும் பணத்துக்கு ஆசைப்பட்டு இந்தப் பெண் பருவத்தையும் பாழாக்கிக் கொண்டு, வாழ்வையும்...' என்று அலுத்துக் கொண்ட போது, 'பெண் இனத்துக்கு நகை நட்டு, விலையுயர்ந்த புடவைகள் ஆடம்பர வாழ்க்கை இது அளிக்கும் ஆனந்தம். எதுவும் அளிக்கா தென்பது எனக்கல்லவோ தெரியும்'' என்று தன்னுள்தான் சொல்லிக் கொண்டு எழுந்திருந்தாள்.

''ஜம்புலிங்கத்தின் மனைவியைப் பற்றித் தானே பேசுகிறீர்கள்? அந்த ராக்ஷஸன் மூத்த மனைவியைக் குழந்தையும் கையுமா யல்லவா விரட்டி யடித்தான்! கருணையற்ற கடின சித்தன்.''

''இருபது வருடங்களாக இருண்டு கிடந்த வீட்டில் இப்பொழுது அழகிய பொற்பாவை சுற்றி வருகிறாள். அவள் தாய் நாளொரு தோன்பும். தினமொரு விரதமென்றும் செம்

எம்.எஸ்.கமலா





மண்ணும் கோலமுமாய் வீட்டை அழகு படுத்துகிறான். பாழாய்க் கிடந்த வாசற்படி பளிச்சென்று இருக்கிறது.''

''சாகிற காலத்திலாவது சங்கரா என்று நல்லதனமாய்ச் சாகலாம். அதற்குக்கூட....''

அதற்குமேல் அவளால் கேட்க முடியவில்லை. எழுந்து ஓசைப்படாமல் வீட்டுக்கு வந்தாள். அவளுக்கு, பம்பாயிலிருந்து வந்த ஒரு தந்தி காத்திருந்தது. ஜம்புலிங்கம் ஹோட்டல் மாடியிலிருந்து இறங்கும்போது கீழே விழுந்து தலையில் நல்ல அடிபட்டு விட்டதாகவும், உடனே புறப்பட்டு வரும்படியும் இருந்தது. அவள் தாய் மனம் உடைந்து அழுது கொண்டிருந்தாள். அவள் அந்தத் தந்தியைத் தன் தாய் மாமனுக்கு அனுப்பிவிட்டுக் கணவனை அழைத்துக் கொண்டு வர நம்பிக்கையான வேலையாளுடன் புறப்பட்டாள்.

வக்கீல் வாசுதேவனின் அருமைப் புதல்வி அஞ்சனா. அவள் ஆடம்பர வாழ்க்கையில் வளர்க்கப்பட்டவள்; அவளுக்குச் செல்வக் கடலில் நீச்சல் அடிக்க வெகு ஆசை. அவள் அழகையும் ஆடம்பர வாழ்க்கையையும் கண்டவர்கள் அவளை மணக்க முன்வந்தனர். அவளுடன் படித்த கோபிநாத் அவளையே நேரில் வந்து கேட்டான். அவள் ஒருவரையும் விரும்பவில்லை.

வக்கீல் வாசுதேவன் ஒருநாள் குதிரைப் பந்தயத்தில் தம் கையிலிருந்தவற்றை யெல்லாம் கட்டித் தோற்றுவிடவே மனமுடைந்து பந்தய மைதானத்திலேயே உயிர் நீத்தார். அவர் கண் மூடியதும் கடன்காரர்கள் வந்து அவர் சொத்தைக் கவர்ந்து தாயையும் மகளையும் இடுப்புத்துணியுடன் இல்லத்தை விட்டு வெளியேற்றினர். அஞ்சனாவின் மாமன் ஏழை. நாதனை இழந்து வந்த தங்கையையும் அவள் பெண்ணையும் முகம் கோணாமல் அவர் வரவேற்றார்.

அஞ்சனாவின் அதிர்ஷ்டமோ, ஆசைதான் பலித்ததோ, ஜம்புலிங்கம் அழகுள்ள பெண்ணைத் தாமே செலவு செய்து மணம் முடித்துக் கொள்ளத் தயாராயிருப்பதாகத் தெரியவே அஞ்சனா அவரை ஆனந்தமாய் மணந்து சென்றாள். அவள் விரும்பிய செல்வம், ஆடம்பர வாழ்க்கை, வீட்டு நிறைய ஏவலாளர்கள், அரண்மனையைப் போன்ற மாளிகை, இரண்டு கார்கள்—இத்தனையும் அவளை ஆனந்தத்தில் ஆழ்த்தின. குடியனும், குரூபியுமான கணவனைப்பற்றி அவள் குறைப் படவில்லை; அவள் தாய் மாத்திரம் மகள் கழுத்தில் மாங்கல்யம் ஏறியது முதல் கண்ணீர் வடித்தபடியிருந்தாள். மருமகன் கீழே விழுந்தான் என்று அறிந்ததும் அவள் அதிர்ச்சியில் இறந்துவிட்டாள்.

★

வேலைக்காரனுடன் போய் ஜம்புலிங்கத்தைப் பார்த்த அஞ்சனாவின் மனம் அருவருத்தது. செயற்கைப் பற்களை நீட்டிய பொக்கை வாய், 'சாயம் வெளுத்த வழுக்கைத் தலை, சதைப் பற்றற்று முறுக்கிக் கொண்டிருக்கும் கைகள், — இவைகளைக் காணும்போது அவள் மனம் வேதனை கொண்டது.

''இந்த அருவருக்கத் தக்கவனின் பணத்துக்கு உரிமைக்காரியாய்த் தானே மாலையிட்டாய்! உன் கழுத்தில் மின்னும் பொற்காசு எந்தப் பணத்தால் எவனால் கட்டப்பட்டது?'' என்று அவள் மனமே அவளைக் குத்தியது. சற்று நேரம் அவரையே உற்றுப் பார்த்தாள். துக்கம் பீறிக்கொண்டு வந்தது.

காலையை மணந்து காதலைச் சுவைக்காவிடினும், மூன்று மாதகாலம் அவர் கட்டில் அருகில் அமர்ந்து அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்தாள். அவள் மாமனோ வெளியில் கிடைத்த வரையில் சுரண்டிச் சேர்க்கத் தொடங்கினார். தங்கை இறந்ததோ, அவள் பெண் கட்டியின் முன் கணவனின் உயிருக்காகத் தவம் கிடப்பதோ தெரியவில்லை. தான் வாழ, தன் குடும்பம் வாழச் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் சேர்ப்பதிலேயே கண்ணும் கருத்துமா யிருந்தார்.

அன்று அனைவரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தபோது ஜம்புலிங்கம் இறுதி மூச்சைவிட்டு விட்டார். அதிகாலையில் அவருக்கு மருந்து கொடுக்க எழுந்த அஞ்சனா ஆவிபிரிந்த அவர் சடலத்தைப் பார்த்தாள்.

அஞ்சனாவின் ஆனந்தம் மடிந்தது. ஆடம்பர வாழ்க்கையின் ஆசை நாசமாகியது. அவள் தன் அறையை விட்டு வெளிவருவதேயில்லை. மாமனின் ஆணை அந்த மாளிகையை எதிரொலிக்கச் செய்தது.

ஜம்புலிங்கம் இறந்து நாட்கள் ஆறின; அஞ்சனா தன் அறை ஜன்னலில் அமர்ந்து பின்புறத் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். எதிரே மாங்கிளையில் அமர்ந்து கொஞ்சிப் பேசும் பறவை ஜோடிகளைப் பொறாமையுடன் பார்த்தாள். அதே சமயம் கொட்டிலிருந்த சேங்கன்றை அன்புடன் முகர்ந்து பார்த்த காளையை அக்கன்று முரட்டுத்தனமாய் முட்டித் தள்ளியது. அதைப் பார்த்ததும் அவள் மண்டையில்

அடிபட்டாற் போல் தோன்றியது. கோழிக் குஞ்சுகள் தொப்பையைக் கொத்திக் கொண்டிருந்தன. ஒரு பெட்டையருகில் அழகிய சேவல் கம்பீர நடை போட்டு வந்தது. அதைக் கண்டு 'விர்'ரென்று பறந்து சென்று ஒரு கிழச் சேவலின் கால்களுக்கிடையில் பதுங்கியது. அதைக் கண்டதும் அவன் நினைவு எங்கோ சென்று வட்டமிட்டது. தன் நெஞ்சின் அலைகளில் மிதந்த தவறை இயற்கைக் காட்சிகளில் காட்டி இறைவன் தண்டிக்கிறானோ? என்று தோன்றியது. அச்சமயம் மாமா வக்கீலிடம் சொத்துக்களின் விவரத்தைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அஞ்சனாவின் கண்கள் அப்பொழுதுதான் நீரை வடித்தன. 'பணத்துக்காக வாழ்க்கையை மடித்துக் கொண்டேன். அந்தப் பணத்தைப் பிணத்தைக் கொத்தும் கழுகுகள்போல் கொத்தக் காத்திருக்கிறார்கள். வாழும் பயிர் வாடுவது கூடத் தோன்றவில்லை. பணத்தைப் பறிக்கும் வழியைத் தேடும் இம்மானிடக் கூட்டமும் ஒரு அறிவுள்ள சந்ததியா? என்று விம்மினாள். அச்சமயம் சட்ட நிபுணர் சொல்வது அவள் காதில் நன்றாக விழுந்தது.

"மிஸ்டர் ஜம்புலிங்கத்தின் மைந்தர் ஜகந்நாதன்..."

"அப்படியென்றால்..."

"சட்டபூர்வமாக எல்லாச் சொத்தும் அவனைச் சேரும்."

"காசை நம்பிக் கழுத்தை நீட்டியவளுக்கு......"

"ஜம்புலிங்கம் கீழே விழுந்த பின் தம் தவறை யுணர்ந்து கொண்டு செட்டில்மெண்ட் எழுதி விட்டார்."

"அதைத்தான் பார்க்க வேண்டும்."

"அவர் மைந்தரைத் தேடி அவர் மூலந்தான் அதைப் படிக்க வேண்டும்."

அதற்கு மேல் கேட்டுக் கொண்டிருக்க அஞ்சனாவால் முடியாது போகவே அறையை விட்டு வெளியில் வந்தாள்.



அவள் வெறிச்சோடிய நெற்றியும், வேதனையைச் சொரியும் கண்களும் சட்ட நிபுணரைக் கூடச் சங்கடத்தில் ஆழ்த்தியது. அவர் தம் இருக்கையை விட்டு எழுந்தார்.

"நீங்கள் சென்று வாருங்கள்; அவர் மைந்தன் வந்தபின் சொத்து விவரத்தைக் காட்டலாம்" என்று சீறினான்.

"அவர் இருக்குமிடம்......நான் பத்திரிகையில்கூட எஜமானர் காணமானதைப் பிரசுரித்தேன்" என்று தயங்கியபடி நின்றார்.

"அதைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். அவரை வரவழைக்கும் பொறுப்பு என்னுடையது" என்று தன் அறைக் கதவைச் சாத்திக் கொண்டு சென்றாள். அஞ்சனா கதவைச் சாத்திக் கொள்ளவே கிழ வேலைக்காரன் கந்தப்பன் அறைக்குள் வந்து எட்டிப் பார்த்தான். அஞ்சனா சுவரில் சாய்ந்து விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். அவனுக்கும் துக்கம் பொத்துக் கொண்டு வந்தது.

"அம்மா! அழாதீர்கள். ஏன் அழுகிறீர்கள்? இந்த வீட்டு உப்பைத் தின்று வளர்ந்தவன். நான் இருக்கும்போது உங்களை எவர்களும் ஏமாற்ற முடியாது" என்றான்.

"கந்தப்பா! என்னை நானே ஏமாற்றிக் கொண்டபின் ஒருவர் ஏமாற்றுவது எம்மாத்திரம்? நான் அதற்கு அழவில்லை. நீ முன்பு எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்" என்று கூறினாள் அஞ்சனா.

"என்னம்மா?"

"அவருக்கு ஒரு பிள்ளை இருக்கிறாரே? அவரைப்போய்ப் பார்த்து நீ அழைத்து வர வேண்டும்."

"அந்தக் கண்மணி இந்தத் தோளின்மேல் தான் ஐந்து வருஷம் வளர்ந்தது. இப்போ எங்கே இருக்கோ, தெரியவில்லையே, அம்மா!"

"எங்கிருந்தாலும் தேடி அழைத்து வா; அநியாயமாய் இந்தச் சொத்தை மூன்றாவது மனுஷன் தட்டிக் கொண்டு போவது கூடாது. நான் எதை விரும்பினேனோ அதன் சுகத்தை அனுபவித்தாயிற்று. இந்தா! இன்றே புறப்படு. உன் சின்ன எஜமானைத் தேடி அழைத்துக் கொண்டுதான் இந்த வீட்டுக்குள் நுழைய வேண்டும்" என்று அவனிடம் ஒரு கத்தை நோட்டுக்களைக் கொடுத்தாள்.

★

அன்று காரியாலயத்துக்குச் செல்ல ஆயத்தமான ஜகந்நாதனை, அவன் அருமைப் பெண் அஞ்சனா வந்து கட்டிக் கொள்ளவே, அவளை எடுத்து அணைத்துக்கொண்டு தெருவில் வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தான். தெருவில் கிழவன் ஒருவன் கோலை ஊன்றியபடி வந்து அவனை ஏற இறங்க உற்றுப் பார்த்தான்.

"யாரப்பா! உனக்கென்ன வேண்டும்?" என்று அன்புடன் கேட்டான் ஜகந்நாதன்.

"சின்னய்யா!" என்று களிப்புடன் கரங்களைக் கூப்பினான் கந்தப்பன்.

"யார்? கந்தப்பனா? நன்றாயிருக்கிறாயா? இத்தனை தூரம் எங்கே வந்தாய்? நான் இங்கே இருப்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்று கூறிவிட்டு, "வித்யா!" என்று அழைத்தான்.

"எனக்கென்ன கேடு சின்னய்யா! நீங்க இங்கே யிருப்பதை உங்க மாமியிட்டே தெரிஞ்சுக்கிட்டு வந்தேன்."

"எனக்கென்னடா குறைவு. இதோ பார என் மகள் அஞ்சனா. மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பாதிக்கிறேன்" என்று கூறிக் கொண்டிருக்கும்போது வித்யா அவ்விடம் வந்தாள்.

''இதுதான் கந்தா! இவள் அம்மா'' என்று கூறி, அஞ்சலையை அவனிடம் கொடுத்தான்.

அவன் சின்னய்யாவிடம் நடந்ததையெல்லாம் சொல்லி, ''ஊருக்குப் போக வேண்டும். உங்களைக் கையுடன் அழைத்துப் போகத்தான் வந்தேன்'' என்றான்.

''ஊருக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?''

''உங்கள் மாமியிடமிருந்துதான் வருகிறேன். அவங்கதான் அழைத்துவரச் சொன்னார்கள். வாருங்கள்.''

''வித்யா! கந்தப்பனுக்குக் குளிக்க வெந்நீர் கொடு. அவனுக்கு பிமார் என்றால் ரொம்ப இஷ்டம். வயிறு நிறையச் சாப்பிடச் சொல். பிரயாணத்துக்குச் சித்தமாயிரு. கந்தப்பா! நான் காரியாலயத்துக்குப் போய் வருகிறேன்'' என்று சொல்லிச்சென்றான். ஜகந்நாதன் முன் அவன் மாமியின் முகம் தோன்றியது. அந்த அம்மாளின் நகைத்த முகமும் கருணை பொழியும் கண்களும் அவனை மிகவும் மகிழ்வித்தன.



ஜகந்நாதனுக்குஅப்பொழுது ஐந்து வயது. அவன் தாய் அவன் தந்தையுடன் உரத்துச் சண்டை போட்டுக் கொண்டிருந்தாள். அவன் தந்தை ஜம்புலிங்கம் அவன் தாயைக் கழுத்தைப் பிடித்துத் தெருவில் தள்ளி, கந்தப்பனிடம் ஜகந்நாதனைக் கொடுத்து ஏதோ சொன்னார். சிறிது நேரத்தில் கந்தப்பன் உடன்வர ஜகந்நாதன் தாயுடன் ரயிலில் பிரயாணம் செய்தான். தாய் மடியில் தூங்கிக் கொண்டிருந்தவன் கண் விழித்தபோது தன் மாமன் வீட்டில் தாயுடன் இருந்தான். தந்தையை விட்டு வந்த தாய் சில நாட்கள் நடமாடிக்கொண்டிருந்தாள். பிறகு சில நாட்கள் படுக்கையிலேயே படுத்திருந்தாள். ஒருநாள் படுக்கையும் காலியாகி விட்டது. சந்ததியற்ற மாமனும் மாமியும் ஜகந்நாதனை மிகுந்த அன்போடும் பாசத்தோடும் வளர்த்தனர். அவர்களிடம் பணம் இல்லை; ஆனால் பாசம் இருந்தது.

அச்சமயம் அவன் சென்னையில் பி. ஏ. படித்துக் கொண்டிருந்தான். மாமாவுக்கு உடல் நலம் சரியாயில்லை என்று கடிதம் வரவே புறப்பட்டுச் சென்றான். அவரும் அவனைக் கைவிட்டுக் காலன் வீடு சென்றார். மாமி அவனை மனப்பூர்வமாய் ஆசீர்வதித்து, ''உன் மாமன் என் கழுத்தில் கட்டிய மாங்கல்யம் தான் உனக்கு வாழ வகை செய்ய வேண்டும்'' என்றாள். அதை அவனிடம் அளித்துத் தன் உறவினர்களிடம் சென்று விட்டாள்.

ஜகந்நாதன் மாமாவிடமிருந்தாலும் கந்தப்பன் மாத்திரம் வருடத்துக்கொரு முறை எப்படியாகிலும் வந்து தன் சின்ன எஜமானைப் பார்த்துப் போவான். ஜகந்நாதன் சென்னை சென்ற பின் அவனால் பார்க்க முடியவில்லை. அவன் மாமன் இறந்த பின் அவன் இருப்பிடமே தெரியாமல் போய் விட்டது. ஜகந்நாதன் தன் மாமி கொடுத்த மாங்கல்யத்தையும் தன்னிடமிருந்து சில பொருள்களையும் விற்றுக் கல்கத்தா சென்றான். வேலைக்காகச் சில்லறைக் கடை முதல் சர்க்கார் காரியாலயங்கள் வரை ஏறி இறங்கினான். தினம் பகல் முழுதும் வேலைக்காக அலைவான். இரவு ஒரு வேளை அரை வயிற்றுக்கு ஏதாவது சாப்பிட்டு எங்கேயாவது முடங்கிக் கொள்வான்.

அவன் வங்கத்துக்குள் புகுந்து வாரம் இரண்டாயின. அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. உணவைக் கண்டு நாட்கள் இரண்டாயின. அன்று இரவு ஊர் சந்தடி அடங்கிய பின் கங்கையில் விழுந்து விடுவதென்று முடிவு செய்துகொண்டு காளி கோயிலுக்கு அருகில் வீற்றிருந்தான்.

இரவு பத்து மணிக்கு மேலாகி விட்டது. யாரோ ஓர் கனவான் காளி கோயிலைச் சுற்றி விட்டுப் போய்க் கொண்டிருந்தார். எங்கிருந்தோ ஒரு கள்ளன் வந்து அவர் முகத்தைப் பார்த்து ஒரு குத்து விட்டான். அவர் முகத்தைத் திருப்பிக் கொள்ளவே அந்தக் குத்து அவர் காதருகில் வீழ்ந்து அவர் வீறிட்டபடி தரையில் சாய்ந்தார். ஜகந்நாதன் காதில் அவர் வீறிட்டது கேட்கவே எழுந்து வந்து கள்ளன் மேல் பாய்ந்து அவனை நன்கு அடித்து வீழ்த்தினான்.

அந்தக் கனவான் தம்மைச் சமாளித்துக் கொண்டு எழுந்து ஜகந்நாதன் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு நடுங்கும் குரலில், ''அப்பனே! நீ யார்? இன்று என்னைக்

காத்ததுமன்றி என் மானத்தையும் காப்பாற்றினாய். நாளைக் காலையில் என் பெண்ணுக்கு நிச்சயதார்த்தம் செய்யப் போகிறேன். மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுக்க வேண்டிய பரிசப் பணம் ஐம்பதினாயிரம் ரூபாய் என் ஜேபியில் இருக்கிறது. அந்தக் கள்வன் அது தெரிந்துதான் வந்திருக்கிறான்: நீ எங்கே இருக்கிறாய்? நாளை அவசியம் கல்யாணம் நிச்சயம் செய்யும்போது நீயும் இருக்க வேண்டும்" என்றார். ஜகந்நாதன் கண்ணீர் மல்கத் தலையசைத்தான்.

"ஏன் தம்பி!" என்றார். அவர் மனத்தில் 'கள்ளர் கூட்டத்தில் இவனும் சேர்ந்தவன் தானோ? சகாயம் செய்வதுபோல் செய்து தம்மிடம் இருப்பதை அறிந்து விட்டானோ?' என்று தோன்றியது.

ஜகந்நாதன் தான் வேலைக்காக அலைப்பட்டு, அன்று நிராசையுடன் உயிர் துறக்க நினைத்ததை ஒளிக்காமல் சொல்லிவிட்டான்.

"வேண்டாம் தம்பி! என் மில்லில் வேலை தருகிறேன். என்னுடன் வா!" என்று பிடித்து இழுத்துக் கொண்டு சென்றார்.

மறுநாள் பூல்மல் தயாராம் சேட் மில்லில் ஜகந்நாதன் குமாஸ்தாவாய்ச் சேர்ந்தான். மெள்ள மெள்ளத் தன்னுடன் வேலை செய்பவர்களை நேசம் பிடித்து அவர்கள் குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுத்து மாலை நேரங்களில் கலாசாலையில் படித்துப் பட்டம் பெற்றான். இரண்டாண்டுகளில் பூல்மல் தயாராமின் நம்பிக்கைக்குப் பாத்திரமாய் மில்லின் உதவி மானேஜராகி விட்டான்: மூன்றாண்டுகளில் அவனிடம் வேலைக்குச் சேர்ந்த வித்யாவை மணந்து கொண்டான்.

✶

அன்றுடன் கந்தப்பன் சென்று இரண்டு மாதங்களாயின. அஞ்சனாவின் மனம் குமைந்து குமைந்து அழுகி விட்டது. மாடியில் தன் கணவன் அறையில் ஜன்னலுக்கருகில் கட்டிலைப் போட்டு அதில் படுத்துத் தெருவையே பார்த்துக் கொண்டிருந்தாள். நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. மாமனின் அட்டகாசமும் அதிகாரமும் வரம்பு கடந்து விட்டன. அவளும் ஒட்டி உலர்ந்து கட்டிலுடன் ஒட்டிக் கொண்டாள். அவள் வாய் மாத்திரம் "பணத்துக்கு உரிமைக்காரி, வீட்டுக்கு எசமானி என்று நினைத்திருந்தேன். அவர் மறைந்த பின்தான் நான் கிழவனுக்கு மனைவி மாத்திரமன்று, ஒரு இளைஞருக்கும் அன்னை என்று தெரிகிறது. கடவுளே! காதலை அறியாவிடினும் தாயன்பையாகிலும்......" என்று புலம்பிக் கொண்டிருந்தது.

அன்று காலை அவள் முகம் மிகப் பொலிவுடன் விளங்கியது. அவள் இதயம் காற்றைப் போல் வெகு இலேசாயிருந்தது. சாந்தமாய் உதய சூரியனின் பொற்கிரணங்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அச்சமயம் வாசலில் கார் வந்து நின்ற ஓசை கேட்டது.

காரை விட்டு இறங்கிய கந்தப்பன் நித்திரையிலிருப்பதுபோல் செயலற்று அமைதியாயிருக்கும் வீட்டைப் பார்த்துத் திடுக்கிட்டுப் பரபரவென்று, "அம்மா!" என்று அழைத்தபடி அஞ்சனாவின் அறையைப் பார்த்து ஓடினான். அது பூட்டிக் கிடக்கவே மாடிக்குப் போனான். "அம்மா! சின்னப்பா வந்திட்டாருங்க" என்றான். அவள் மிகப்பிரயாசையுடன் திரும்பிப் பார்த்தாள். எழுந்திருக்க முயன்றாள். முடியவில்லை. அதற்குள் ஜகந்நாதன் குழந்தை அஞ்சனாவை எடுத்துக் கொண்டு வித்யா பின் தொடர உள்ளே வந்தான். அவனைக்கண்டதும் திகைப்பூண்டை மிதித்தவள் போல் வெறிக்கப் பார்த்தாள் அஞ்சனா. அவள் குழி விழுந்த கண்களில் நீர் சுழன்று கன்னத்தில் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது.

"கடைசியில் நீதானா கோபி! என் விதி..." என்றாள். "ஆம். நான்தான்" என்று குழறினான். அவனுக்கு அவளைத் தெரியவில்லை. 'அவள் நம்மை யறிந்திருக்கிறாளே; எப்படி?' என்று எண்ணினான்.

"அம்மா! மருமகள்கூட வந்திருக்காங்க" என்றான் கந்தப்பன்.

"வாம்மா, வா! குழந்தையின் பெயர் என்னம்மா? எழுந்து உங்களை வரவேற்கும் பாக்கியம்கூடச் செய்யவில்லை" என்றாள்.

"அஞ்சனா...!" என்றான் கோபி.

"கோபி! செல்வத்தில்தான் சிறப்பிருக்கிறதென்று அதை மணந்தேன். அதிலிருக்கும் சீர்கேடுகளை உணர்ந்தேன். எப்படியானால் என்ன? இந்த வீட்டுக்கு மருமகளாய் வர வேண்டியவள் அன்னையாய் வந்து விட்டேன்: நீதான் ஜகந்நாதன் என்று தெரியாது" என்றாள் அஞ்சனா.

"வாசுதேவனின் பெண்...என் அருமை..." என்றவன் அதற்குமேல் பேசமுடியாது திணறினான். பிறகு தன்னைத்தானே சமாளித்துக் கொண்டு, "அம்மா! அப்பா வைத்த பெயர் நிலைத்து விட்டால், அவர் குணங்கள் எங்கே வந்துவிடுமோ என்று அம்மா "கோபிநாத்" என்று அழைத்ததுமன்றி அவர் செல்வத்தில் செப்பாலடித்த காசையும் விரும்பக் கூடாதென்று கட்டளையிட்டார்களாம்" என்றான்.

அஞ்சனா ஆயாசத்துடன் கண்களை மூடிச் சிறிது நேரம் யோசித்தவள் வித்யாவை உற்றுப் பார்த்தாள். அவள் மனம் குளிர்ந்தது. "கந்தப்பா! சின்ன எசமான் வந்துவிட்டாரென்று வக்கீல் ஐயாவை அழைத்து வா!" என்று அனுப்பினாள்:

"கோபி! காதலர்களாகக் கைகோர்த்துத் திரியாவிடினும் இவ்வீட்டு எஜமானி என்ற சொல்லுக்கு இழுக்கேற்படாது. உன் அன்னையின் ஸ்தானத்தை வகிக்கும் என் சொல்லைக் கேள்: பரம சண்டாளராயினும் உன் தந்தை சாகும் காலத்தில் அவர் கடமையைச் சரிவரச் செய்தார். உன்னை வளர்த்த உன் மாமியையும் அழைத்து வந்து இங்கேயேயிரு. இதுதான் உன் அஞ்சனாவின் அந்திம ஆசை" என்றாள். அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. மேல் மூச்சு வாங்கியது. அவளைப் பரிதாபமாய்ப் பார்த்தான். அவனுக்கு மறுத்துப் பேச வாய் வரவில்லை. மௌனமாய்த் தலையசைத்தான்; அவள் முகத்தில் மலர்ச்சிரிப்பு மின்னியது. நேராயிருந்த தலை பக்கத்தில் சாய்ந்தது:

"அஞ்சனா!" என்று அலறத் தொடங்கிய ஜகந்நாதன், "அம்மா!" என்று அவள் கால்களைப் பற்றிக் கொண்டு கதறினான்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon